விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 தை 15 திங்கட்கிழமை (28.01.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 040

# கடும் போக்கான செயற்பாட்டை வடக்கில் அரசு முன்னெடுக்கிறது



## அமெரிக்கக் குழு ஆயரிடம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இறுக்கமான போக்குடன் வடக்கில் செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுத்து வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. மக்கள் சுதந்திரமாக நடமாடக் கூடியதாக இருந்தாலும் இனங்களுக்கிடையில் சுமுக உணர்வு ஏற்படவில்லையென யாழ்.வந்த அமெரிக்கப் பிரதிநிதிகள் யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையிடம் தெரிவித்துள்ளனர். (20ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ அறிக்கை குறித்து அமெரிக்கா விசனம்!

(கொழும்பு)

இலங்கைப் போரின் இறுதிக்கட்டத்தில் பொதுமக்கள் எவரும் காணாமல் போகவில்லை என்று இலங்கை இராணுவ உள்ளக விசாரணை அறிக்கை கூறியிருப்பது குறித்து அமெரிக்கா மிகுந்த விசனம் அடைந்திருப்பதாக இலங்கை வந்துள்ள அமெரிக்கத் தூதுக் குழுவினர் தெரிவித்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் கடந்த வருடம் ஐ.நா. மனித உரிமை பேரவையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் குறித்து இலங்கை அரசாங்கம் எடுத்திருக் (02ஆம் பக்கம் பார்க்க)

## கிளர்ச்சியை ஏற்படுத்த முயற்சி கண்காணிக்க அரசு வலியுறுத்தல்

(கொழும்பு)

நாட்டில் இனவாதக் கிளர்ச்சிகளை ஏற்படுத்த முயற்சிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பில் கண்காணிக்குமாறு அரச புலனாய்வுப் பிரிவிற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

சில சில குழப்பங்களை ஏற்படுத்தி நாட்டில் பாரிய கிளர்ச்சிகளை உருவாக்க முயற்சிக்கப்படுகின்றது. இது தொடர்பில் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிங்கள பௌத்த அமைப்புக்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

மீண்டும் நாட்டில் பாரிய முரண்பாடுகள் ஏற்படுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

குழப்பங்களை ஏற்படுத்த முனைவோருக்கு கடும் தண்டனை விதிக்கப்படும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது. (எ-11)

## அமெரிக்கக் குழு கோத்தபாயவுடன் பேச்சு

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்கப் பிரதிநிதிகள், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

அமெரிக்க துணை ராஜாங்கச் செயலாளர் ஜேம்ஸ் மூர், துணை ராஜாங்கச் செயலாளர் ஜேன் சிமர்சன் மற்றும் துணை பாதுகாப்புச் செயலாளர் விக்ரம் சிங் ஆகியோர் பாதுகாப்புச் செயலாளரை சந்தித்துள்ளனர்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்மொழிவுகளை அமுல் (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு ஆபிரிக்கா எதிர்ப்பு

(ஜெனீவா)

ஜெனீவாவில் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள மனித உரிமைப் பேரவை அமர்வில் இலங்கைக்கு எதிராக 27 அரச சார்பற்ற நிறுவனங்களும் ஆபிரிக்க நாடு ஒன்றும் செயற்படவுள்ளன என்று அரசுக்குத் தகவல்கள் கிடைத்துள்ளதாக திவயின ஞாயிறு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த அரச சார்பற்ற நிறுவனங்களும் ஆபிரிக்க நாடொன்றும் இலங்கை அரசின் மனித (20ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் சிவில் நிர்வாகங்களில் இராணுவத் தலையீடு இல்லை

### அமெ. குழுவிடம் யாழ். தளபதி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் சிவில் நிர்வாகங்களில் ஒரு போதும் தலையிடுவதில்லை என யாழ்.கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க அமெரிக்க உயர் மட்டக்குழுவிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்க அமைச்சின் தெற்காசிய மற்றும் பசிபிக் விவகார பிரிவுகளுக்கு பொறுப்பான மூன்று பிரதி (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பின் வசமுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு அனுப்பிய 560 மில்லியன் ரூபாயை திருப்பியது அரசு

(கொழும்பு)

தமிழ் தேசியக்கூட்டமைப்பின் ஆளுகையில் உள்ள உள்ளூர் சபைகளுக்கு ஒதுக்கப்பட்டிருந்த 560 மில்லியன்ரூபாய்களை அரசாங்கம் திரும்ப பெற்றுக்கொண்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணசபை தேர்தல் நடைபெறவிருப்பதை முன்னிட்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் பாதை அமைப்பு, புதிய கட்டிடங்கள், போன்றவற்றிற்காக இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

இந்தநிலையில் குறித்த நிதியை திரும்பப் பெறுமாறு தமக்கு அமைச்சினால் உத்தரவிடப்பட்டுள்ளதாக உள்ளூராட்சி நிர்வாகத்தின் யாழ்ப்பாண உதவி ஆணையாளர் எஸ். ஜெயகரன் தெரிவித்துள்ளார்.

எனினும் மற்றும் ஒருதகவல் படி திரும்பப் பெறப்பட்ட இந்த நிதி வடமாகாண ஆளுநர் சந்திர (20ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை மீறல் குறித்து ஐ.நாவின் அறிக்கை விரைவில்!

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் பாரிய அளவிலான மனித உரிமை மீறல்கள் குறித்து ஐக்கிய நாடுகள் அமைப்பு உத்தியோகபூர்வமாக எதிர்வரும் பெப்ரவரி மாத நடுப்பகுதியில் முதலாவது அறிக்கையை வெளியிடவுள்ளதாக ஜெனிவாத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு முன்னர் ஐ.நா.பொதுச்செயலா[illegible]ணைக்குழுவின் அறிக்கையென்ற ரீதியில் அறிக்கையொன்று வெளிவந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

கடந்த மார்ச் மாதம் மனித உரிமை பேரவையினால் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான பிரேரணையின் மீள் மதிப்பீடாக இந்த அறிக்கை தயாரித்து முடிக்கப்பட்டுள்ளதாகவும் அது எதிர்வரும் வாரங்களில் இலங்கை அரசுக்கு உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட வாய்ப்புள்ளதாகவும் மனித உரிமை தொடர்பான (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வெளிச்சமின்றிச் சென்ற சைக்கிள்கள் பறிமுதல்

## கோப்பாய் பொலிஸார் பாய்ச்சல்

(யாழ்ப்பாணம்)

இரவு நேரத்தில் வெளிச்சமின்றி சைக்கிளில் சென்றவர்கள் கோப்பாய் பொலிஸாரால் பிடிக்கப்பட்டு அவர்களின் சைக்கிள்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

நேற்றிரவு கோப்பாய் பொலிஸ் நிலையத்தினூடாக வெளிச்சமின்றி சென்றவர்களே பிடிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் சைக்கிள்களை பறிமுதல் செய்த பொலிஸார் எதிர்வரும் 31ஆம் திகதி நீதிமன்றுக்கு வருமாறு கூறியுள்ளனர்.

தமது அன்றாட கடமைகளுக்கும் பிள்ளைகளை பாடசாலைக்கு கொண்டு செல்வதற்கும் சைக்கிளையே பயன்படுத்துவதாகவும் எனினும் தேவையற்ற விதத்தில் குற்றம் சாட்டி வழக்குப்பதிவு செய்து சைக்கிள்களை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளதாக சைக்கிளை இழந்த குடும்பஸ்தர் தெரிவித்தார்.

தமது சைக்கிளை பறிமுதல் செய்தபோது மேலும் பலர் அவ்வீதியூடாக வெளிச்சமின்றி சென்றுள்ளதாகவும் எனினும் ஒரு சிலரை மாத்திரமே பொலிஸார் கைது செய்துள்ளதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

நீர்வேலி பகுதியிலிருந்து சென்ற ஒருவரின் சைக்கிளும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து அவர் கால்நடையாக வீடு சென்று சேர்ந்ததாக கூறப்பட்டுள்ளது.

இதைவேளை சைக்கிளில் வெளிச்சத்துடன் சென்ற சிலரும் பொலிஸாரால் நிறுத்தப்பட்டு அவர்களின் சைக்கிள்களும் பறிமுதல் செய்யப்பட்டதாக கூறப்பட்டது.

பொலிஸாரின் இந்தச் செயற்பாட்டால் பொது மக்களுடன் முறுகல் நிலை ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-6)

# தாயும் தந்தையும் விபத்தில் பலி பிள்ளைகள் இருவர் படுகாயம்

(அம்பாந்தோட்டை)

லுனுகம்வெகெர, ரணவரனாகொட பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்துச் சம்பவமொன்றில் தாயும் தந்தையும் உயிரிழந்ததுடன், ஏழு மற்றும் நான்கு வயதுகளுடைய இரு பிள்ளைகளும் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியூடாகப் பயணித்துக் கொண்டிருந்த வான் ஒன்றும் முச்சக்கர வண்டியொன்றும் மோதியே இந்த விபத்துச் சம்பவித்துள்ளது.

விபத்தில், முச்சக்கரவண்டியில் பயணித்த தாயும், தந்தையுமே உயிரிழந்துள்ளனர்.

அவர்களின் இரு பிள்ளைகளும் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்துத் தொடர்பான விசாரணைகளை அம்பாந்தோட்டைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-11)

# இரவு விடுதியில் தீ; 245 பேர் பலி



பிரேசிலின் தென்பகுதி நகரான சன்டா மரியாவில் இரவு விடுதி ஒன்றில் ஏற்பட்ட தீயில் பெரும்பாலும்மாணவர்கள் உட்பட குறைந்த பட்சம் 245 பேராவது இறந்தாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் பலர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள்

அங்கு ஒரு இசைக்குழு வாணவேடிக்கையை செய்ய ஆரம்பித்ததும், ஞாயிறன்று அதிகாலை சுமார் இரண்டு மணியளவில் கட்டிடச் சுவரின் மேற்பரப்பில் இந்த தீ பற்றிக் கொண்டதாக நேரில் பார்தவர்களை ஆதாரம் காட்டி உள்ளூர் ஊடகங்கள் கூறியுள்ளன .

அந்த இரவு விடுதிக்கு ஒரேயொரு வாயில் மாத்திரமே இருந்தாகவும், ஆகவே ஆட்கள் தப்பியோடப் புறப்பட்டதும், அங்கு பதற்றம் ஏற்பட்டதாகவும் அதில் அகப்பட்டு சிலர் இறந்ததாகவும் செய்திகள் கூறுகின்றன.

அதே வேளை, பலர் நச்சுப்புகை சுவாசித்தால் இறந்து போயிருக்கின்றார்கள்.

அந்தத் தீயின் தீவிரம் காரணமாக அந்த கட்டிடம் இடிந்து விடும் என்று தீயணைப்புப் படையினர் அச்சம் கொண்டிருந்தனர்.

அந்த நகரின் பிணக்கிடங்கில் அவ்வளவு சடலங்களையும் கொண்டு வைக்க முடியாத காரணத்தினால், உள்ளூர் உடற்பயிற்சி நிலையம் ஒன்றில் தற்காலிக பிணக்கிடங்கு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சிலி நாட்டுக்கான தனது விஜயத்தை இடையில் கைவிட்டுபிரேசில் அதிபர்நாடுதிரும்பியுள்ளார்.

# வீடொன்றினுள் புகுந்தவர் மக்களிடம் மாட்டினார்

(யாழ்ப்பாணம்)

இரவுவேளை வீடொன்றினுள் நுழைந்த நபர் ஒருவர் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இச் சம்பவம் நேற்றிரவு 8.20 மணியளவில் உரும்பிராய் ஞானவைரவர் ஆலயத்திற்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

பிரஸ்தாப நபரை பொதுமக்கள் மடக்கிப் பிடித்ததும் அவர்தான் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுவதாக தெரிவித்துள்ளார்.

எனினும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டதும் தான் பெற்றோல் வாங்குவதற்காக வந்ததாக முன்னுக்குப்பின் முரணாக தெரிவித்துள்ளார்.

அவர் கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டார். (எ-6)

# சவுதி காதலனுடன் சமாதானம்; பாம்பு பெண்ணின் முறைப்பாடு வாபஸ்

(கொழும்பு)

பாம்புப் பெண் என்று அழைக்கப்படும் கொள்ளுப்பிட்டி இரவு நேர கேளிக்கை விடுதியொன்றின் நடன மாதுவான நிரோஷா விமலரத்ன கடந்த வாரம் சவுதி பிரஜையான சுல்தான் அப்துல் அல்சாரி என்பவரினால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், அவருக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த நிலையில் அப்பெண் தனது முறைப்பாட்டை வாபஸ் பெற்றதுடன் அந்த நபருடன் சமாதானமாகப் போயுள்ளார்.

கொள்ளுப்பிட்டி கேளிக்கை விடுதியின்நடனமாதுவான நிரோஷா கடந்த ஒரு மாத காலமாக சுல்தான் அப் துல் அல்சாரி என்பவருடன் வெல்லம்பிட்டிப் பகுதியில் ஒன்றாக வசித்துள்ளார்.

குறித்த நபர் தன்னைத் திருமணம் செய்து கொள்வதாக உறுதியளித்ததாகவும், அதனால் அவருடன் சேர்ந்து வாழ்ந்து வந்ததாகவும் அப்பெண்ணிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இவ்வாறு வாழ்ந்து வந்த நிலையிலேயே கடந்த 23-ம் திகதி அதிகாலை 4.20 மணியளவில் தாக்குதலுக்கு உள்ளாகிய நிலையில் நிரோஷாவை பொலிஸார் வைத்தியசாலையில் அனுமதித்தனர். அத்துடன் அப்பெண் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

குறித்த பாம்புப் பெண்ணின் தாக்குதலையடுத்து சந்தேகநபரான சுல்தான் தலைமறைவாகியிருந்தார்.

அச் சந்தேகநபரை கைது செய்தவதற்கான தீவிர நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வந்த நிலையிலேயே கடந்த 25-ம் திகதி வெல்லம்பிட்டி பொலிஸ் நிலையத்திற்குச் சென்ற பாம்புப் பெண் தனது முறைப்பாட்டை வாபஸ் பெற்றுள்ளார்.

பாம்புப் பெண் தனது முறைப்பாட்டை வாபஸ் பெற்றிருந்தபோது சந்தேகநபரான சவுதி பிரஜையும் அங்கு வந்திருந்ததுடன் இருவரும் சமாதானமாகச் சென்றதாகத் தெரிவித்தனர்.

டிலானி என்று அழைக்கப்படும் பாம்புப் பெண் நிரோஷா விமலரத்ன கொள்ளுப்பிட்டி கிளியோபற்றா கேளிக்கை விடுதியில் பாம்புடன் நடனமாடியபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட அப்பெண் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அத்துடன் அவரிடமிருந்த நாகபாம்பு நீதிமன்றின் உத்தரவின்படி தெஹிவளை தேசிய மிருகக்காட்சிச் சாலையில் ஒப்படைக்கப்பட்டது.

அதன்பின்னர் அந்த நாகபாம்பை மீண்டும் தன்னிடம் ஒப்படைக்குமாறு அப் பெண் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட நீதிமன்றம் நிபந்தனைகளின் அடிப்படையில் நாகபாம்பை அப்பெண்ணிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டது.

அதனையடுத்து மிருகக்காட்சிச் சாலையிலிருந்து தனது பாம்பை அப்பெண் பெற்றுக் கொண்டார்.

இந்தப் பாம்பு விடயத்தால் பிரபல்யமடைந்த பாம்புப் பெண் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலையடுத்து அவர் பொலிஸாருக்கு வழங்கிய தகவல்கள் முன்னுக்குப் பின் முரணாக இருந்துள்ளது.

அத்துடன் பின்னர் அந்த முறைப்பாட்டை அவர் வாபஸ் பெற்றுள்ளார். (எ-11)

# சபாநாயகர் உத்தரவிட்டும் பொலிஸ் பாதுகாப்பு இல்லை

## சிறிதரன் எம்.பி விசனம்

நாடாளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் எனது அலுவலகத்திற்கு தொடர்ந்து பாதுகாப்பு வழங்கவேண்டும் என்று சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, பிரதிப் பொலிஸ்மா அதிபரை நாடாளுமன்றத்திற்கு அழைத்து பணிப்புரை விடுத்தும் பாதுகாப்பு வழங்கப்படவில்லை என்று யாழ். மாவட்ட கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன் எம்.பி ஆகியோரும் நானும் கடந்த 22-ம் திகதி நாடாளுமன்றத்தில் சபாநாயகரைச் சந்தித்து எனது அலுவலக பாதுகாப்பு நீக்கப்பட்டமை குறித்து முறையிட்டோம்.

அவர் பிரதிப் பொலிஸ் மா அதிபரை அழைத்து உடனடியாக பாதுகாப்பு வழங்கும்படி பணிப்புரை விடுத்தார். இருந்தும் இதுவரை பாதுகாப்பு வழங்கப்படவில்லை.

டிசம்பர் மாதம் 03 திகதி ஐந்து வருடங்களாக எனக்கிருந்த பொலிஸ் பாதுகாப்பை நீக்கினார்கள். இலங்கையில் உள்ள எல்லா நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பொலிஸ் பாதுகாப்பு இருக்கிறது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பொஸில் பாதுகாப்பு உள்ளது. இது சம்பந்தமாக நான் நாடாளுமன்றச் சபாநாயகரிடம் எழுத்து மூலமாக டிசம்பர் மாதம் 7-ம் திகதி அறிவித்தேன். இன்று வரை அதற்கு எந்த பதிலும் இல்லை என்று தெரிவித்தார் சிறிதரன் நாடாளுமன்ற உறுப்பினர். (எ-11)


பிள்ளையார் இன்

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன்
தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில்
நிறைவான சேவையுடன் மாலையில் வழங்கப்படும்.

25% கழிவு

இன்றைய விசேட உணவு :-

பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

இலவசமாக இஞ்சி சோடா வழங்கப்படும். (இங்கு உணவருந்துபவர்களுக்கு மட்டும்)

(C-1660) தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829


# இராணுவ அறிக்கை...

கக் கூடிய நடவடிக்கைகள் குறித்து ஆராய் வதற்காக இலங்கை வந்துள்ள மூன்று உயர் அதிகாரிகள் அடங்கிய அமெரிக்கத் தூதுக் குழுவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சந்தித்திருக்கிறார்கள்.

அதுகுறித்து கூறுகையிலேயே, சுமந் திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஐ.நா. மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் கூறப்பட்ட எந்தவொரு விடயத்தையும் இலங்கை நிறைவேற்றவில்லை என்பது குறித்து தாம் அமெரிக்கக் குழுவிடம் விபரித்ததாக கூறிய சுமந்திரன், இலங்கை இராணுவத்தால் வெளி யிடப்பட்ட அறிக்கையில் பொதுமக்கள் எவரும் காணாமல் போகவில்லையென்று கூறப் பட்டிருப்பது குறித்து அமெரிக்க தூதுக்குழு வினர் மிகுந்த விசனம் தெரிவித்ததாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன்இலங்கைநல்லிணக்கஆணைக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட பல விடயங்களைக் கூட இலங்கை நிறைவேற்றவில்லை என்றும் தாம் அமெரிக்கக் குழுவிற்கு விளக்கியதாகவும் அவர் கூறினார். (எ-11)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## களிப்பு- மகிழ்ச்சி- ஆனந்தம்

''எனக்கு வாழ்க்கையே வெறுத்துப் போய் விட்டது சேர்'' என்று கூறிக் கொண்டு என்னிடம் ஒருவர் வந்தார். என்னிடம் சிறிது நேரம் பேசி விட்டு அதன்பின் அப்படி கூறியிருந்தால், அதிலே அர்த்தம் இருந்திருக்கும்.

என்னிடம் வருவதற்கு முன்னரே வாழ்க்கை வெறுத்து விட்டது என்று கூறி விட்டாரே.

"என்ன சேர் விடயம்?'' என்று விசாரித்தேன்.

"எங்கள் வீட்டிலே தினமும் மூன்று வேளையும் ஒரே மாதிரி சாப்பாடு. வித்தியாசமே இல்லை... இப்படியாக மூன்று மாதங்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன். அதைவிட பட்டினி கிடந்து இறந்து விடலாம் என்று நினைக்கிறேன்'' என்றார்.

ஒரு பெரியவர் (ஏஜினீஷ்) கூறிய தத்துவத்தைக் கூற நபர் இல்லாமல் தவித்துக் கொண்டிருந்தேன். இப்போது ஒருவர் கிடைத்து விட்டார். விடுவேனா? சொல்ல ஆரம்பித்தேன்.

நாம் அனுபவிக்கும் உணர்வுகளிலே மூன்று விதம் உள்ளது. அதாவது களிப்பு, மகிழ்வு,ஆனந்தம்.

"களிப்பு'' என்பது உடம்பைப் பொறுத்தது.

"மகிழ்வு'' என்பது மனதைப் பொறுத்தது.

"ஆனந்தம்'' என்பது ஆன்மாவைப் பொறுத்தது.

இப்படி இந்த மூன்று வகையான சுவைப்புக்களின் தன்மையும் வேறு வேறாக உள்ளது.

முதலிலே ''களிப்பு'' எடுத்துக் கொண்டால், நமது புலன்களுக்குக் களிப்பைத் தரக்கூடிய பொருட்களுக்கு சில விசேட குணம் உள்ளது.

விரைவிலே சலிப்பை ஏற்படுத்தும் உணவு, உடை இவையெல்லாம் களிப்பை தரக்கூடிய பொருட்களாகும். புலன்களுக்கு களிப்பைத் தரக்கூடிய இது மாதிரி பொருட்கள் எல்லாம் முதல் தடவை நமக்குக் கொடுக்கும் களிப்பை இரண்டாவது தடவையும் கொடுக்காது. மூன்றாவது தடவை இன்னும் குறையும். கடைசியிலே வெறுப்பாகவே மாறி விடும்.

நாம் உணவு சாப்பிடுகிறோம் என்று வைத்துக் கொள்வோம். அதில் இட்லியை எடுத்துக் கொண்டால், ஒவ்வொன்றாக இட்லியைத் தொடர்ந்து சாப்பிடுகிறோம் என்று வைத்துக் கொள்வோம். முதல் இட்லி தரக்கூடிய சுவையை முப்பதாவது இட்லி சாப்பிடும் போது தருமா?

முதல் தடவையாக புதிய சட்டை அணியும் சந்தோசம், அச் சட்டையை நாம் பத்தாவது தடவையாக அணியும் போது வருமா... இதுதான் ''களிப்பு''- அதாவது விரைவாகச் சலிப்பை தரக்கூடியது.

ஆனால், "மகிழ்வு" என்பது அப்படியல்ல... ஒருவர் அனுபவிப்பதால் இன்னொருவருக்கு குறைந்து போகாது.

காலையிலே சூரிய உதயத்தை பார்த்து சந்தோஷப்படுகிறீர்கள்- அதையே இன்னொருவர் பார்த்து சந்தோஷப்பட்டால் குறைவு ஏற்படாது.

மூன்றாவது சுகம் தரக்கூடியது "ஆனந்தம்''

அது எப்படி?...

இது நம்மில் இருந்து சுரக்கிறது. மனம் சலனங்களில் இருந்து விடுபடும்போது, இந்த ஆனந்தம் பிறக்கிறது. இது நிலையான சுகம். களிப்பிலிருந்தும் மகிழ்வுக்கும் மகிழ்விலே இருந்து ஆனந்தத்திற்கும் செல்வது தான் மனிதன் நடத்த வேண்டிய முக்கியமான பயணம்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# காலத்தின் தேவைகளை கருத்திற்கொண்டே எழுத்தாளர்களின் படைப்பு அமைய வேண்டும்!

## பழைய பல்லவி பலனற்றது- பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை

(யாழ்ப்பாணம்)

எழுத்தாளர்களினால் வெளியிடப்படும் படைப்புக்கள் காலத்தின் தேவையினை கருத்திற் கொண்டு வெளிவரல் வேண்டும். மாறாக பழைய பல்லவியினையே மீட்டிப் பார்ப்பதாக அமைந்து விடக்கூடாது என யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொன். பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

எழுத்தாளர் வைத்தியர் ஆ.பேரின்பநாதன் எழுதிய இரு நூல்களின் வெளியீடு நேற்று யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு தலைமை தாங்கி தலைமையுரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

தற்போது வடக்கு மாகாணத்தில் தற்கொலை உயிரிழப்புக்கள் அதிகரித்திருப்பதனை பத்திரிகைகள் மூலமாக அறிய முடிகின்றது.

படித்து பல்கலைக்கழகம் சென்ற மாணவர்கள் கூட தற்கொலை செய்து தமது வாழ்வினை அர்த்தமற்ற முறையில் முடித்துக் கொண்டு விடுகின்றனர். வெளிநாடுகளில் சிறுவர்களினை மையமாகக் கொண்ட நூல்கள் அதிகளவில் வெளிவருகின்றன. குறிப்பாக பிரித்தானியாவில் இவ்வாறான நூல்கள் அதிகம் வெளிவந்தபடியால் அங்கு சிறுவர் பாதுகாப்பு பலமானதொன்றாகவே காணப்படுகின்றது.

எனினும் எமது சமூகத்தினை பொறுத்தவரையில் சிறுவர்களினை முக்கியத்துவப்படுத்தி தமிழில் வெளிவரும் இலக்கியங்கள் மிக மிக குறைவானதாகும்.

அண்மைக்காலங்களில் மேற்கு நாடுகளில்ஏற்பட்ட எண்ணக் கருக்களால்தான் எமது நாட்டில் இந்த நிலையிலாவது சிறுவர் உரிமைகளை பேண முடிகிறது.

கடந்த வருடத்தில் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் மாணவர்கள் நாடளாவிய ரீதியிலும் 32ஆயிரம்மாணவர்கள் வடமாகாணத்திலும் பாடசாலைக் கல்வியில் இருந்து இடை விலகியுள்ளனர். 1996 ஆம் ஆண்டிற்கு பிற்பாடு வடக்கில் மதுபாவனைகளும் சட்டமுறையற்ற மது பானசாலைகளும் பெருகியுள்ளன.

இதனால் இளைஞர்களிடமும் கொண்டாட்டங்களில் நாகரிகம் என்ற முறையில் மதுப்பழக்கம் அதிகரித்தே காணப்படுகின்றது. இவை அனைத்தும் ஒட்டுமொத்தமாக எமது பண்பாட்டு விழுமியங்களினை சீரழித்து சின்னாபின்னமாக்குவதோடு சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகங்களினையும் அதிகப்படுத்துகின்றது.

எங்களுடைய மக்கள், எம்முடைய் இனம் வாழ வேண்டுமாக விருந்தால் எமது சிறுவர்கள் பாதுகாக்கப்படல் வேண்டும் என்றார் அவர். (செ-4)

# மாதாந்த பொதுக்கூட்டம்

யாழ். மாநாகர சபையின் 2013 ஆம் ஆண்டுக்கான முதலாவது மாதாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 31 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறவுள்ளதாக யாழ். மாநகர சபை செயலாளர் சி.தா. தர்மரட்ணம் அறிவித்துள்ளார். (செ-9)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 260 | 240 | 200 |
| உருளைக்கிழங்கு | 70 | 80-100 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 160 | 200 | 200 | 300 |
| தக்காளி | 110 | 120 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 50 | 40 |
| கோவா | 100 | 80 | 100 | 120 |
| கரட் | 170 | 180 | 140 | 160 |
| பூசணி | 50 | 30 | 60 | 50 |
| புடோல் | 100 | 160 | 80 | 80 |
| வாழைக்காய் | 70 | 60 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 120-150 | 100 | 120 | 160 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 100 | 100 |
| பாகற்காய் | 150 | 180 | 240 | 240 |
| வெண்டிக்காய் | 70 | 60 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 80 | 80 |
| பயற்றங்காய் | 150 | 200 | 200 | 200 |
| லீக்ஸ் | 120 | 200 | 160 | 160 |
| பீற்றூட் | 100 | 120 | 120 | 150 |
| கறிமிளகாய் | 250 | 240 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 400 | 400 | -- | -- |
| போஞ்சி | 140 | 100 | 160 | 140 |
| கத்தரிதம்புள்ள | -- | 200 | 200 | -- |
| கீரை - 1 பிடி | 25-40 | 40-50 | 30 | 40 |
| தேசிக்காய் | 20-40 | 40 | 70 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 40 | 50 | 40-45 |
| இராசவள்ளி | 80-120 | [illegible] | 140 | 120 |
| வெங்காயப்பூ | 160 | 60 | 80 | 100 |

# இராசி பலன்

28.01.2013

(தை 15,திங்கட்கிழமை)

சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு

பிரதமை முற்பகல் 11.45 மணிவரை

ஆயிலியம் மாலை 6.29 மணிவரை

இராகுகாலம் 8.06-9.36 மணிவரை

சுபநேரம் 12.36-2.06 மணிவரை

**மேடம்** வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும், எதிர்பார்த்த தொகைகள் வந்து சேரலாம், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**இடபம்** விடாமுயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும், மூத்த சகோதரர்கள் உங்கள் முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவர், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள்.

**மிதுனம்** சந்தித்த நண்பர்களால் சந்தோசங்கள் ஏற்படலாம், கடினமான வேலைகளைக்கூட நயமாகப் பேசி முடித்துக் கொள்வீர்கள், பயணங்களால் ஆதாயமுண்டு, வார்த்தைகளால் மேன்மையுண்டு.

**கடகம்** பிள்ளைகளால் சிறு விரயங்கள் ஏற்படலாம், உங்களை விமர்சிப்பவர்களை எதிர்த்துப் பேசாமல் செல்வீர்கள், விருப்பங்கள் நிறைவேற விரதம், வழிபாடுகளை மேற்கொள்ள் வேண்டிய நாள்.

**சிங்கம்** வேலைச்சுமை அதிகரிக்கும், காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை எடுக்கும் சூழ்நிலை அமையலாம், சஞ்சலங்கள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், பிதா சிந்தையுண்டு.

**கன்னி** பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பணவரவுகள் திருப்தி தரும்.

**துலாம்** சொல்லை செயலாக்கிக் காட்டுவீர்கள், தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பிறர் உதவியுண்டு, இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** சான்றோர் சந்திப்புண்டு, புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், வாகன சுகமுண்டு, சிலருக்கு கட்டுப்பட்டு நடக்கும் சூழ்நிலை உருவாகும், தொழில் நன்மையுண்டு.

**தனுசு** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், தொழிலில் கூடுதல் விழிப்புணர்ச்சி தேவை, வரவிலும் பார்க்க செலவுகள் அதிகரிக்கும், போசன சுகமுண்டு.

**மகரம்** பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர், கொடுத்த வாக்கை கடைசி நேரத்தில் காப்பாற்றுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு உங்கள் தகுதியை உயர்த்தும்.



**கும்பம்** ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் முன்னேற்றமான நாள், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், மாமன்-மைத்துனர் வழி ஒத்துழைப்பு கிடைக்கலாம்.

**மீனம்** நீண்ட நாட்களாக திட்டமிட்ட காரியமொன்று இன்று கைகூடும், கட்டடப் பணிகள் தொடரும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பெரியோர் உதவியுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4ஆவது எரிபொருள் கிணற்றுக்கான அகழ்வுகள் அடுத்த மாதம் ஆரம்பம்

இலங்கையின் மன்னார் கடற்பரப்பில் நான்காவது எரிபொருள் கிணற்றின் அகழ்வுப் பணிகள் அடுத்த மாதம் ஆரம்பமாகும் என கெய்ன் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அகழ்வுப் பணிகளை இவ்வருட நடுப்பகுதியிலேயே இடம்பெறும் என இதற்கு முன்னர் நிறுவனம் தெரிவித்திருந்த போதிலும் அடுத்த மாதம் அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க முடியும் என நிறுவனம் வெளியிட்ட அதன் காலாண்டு நிதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

கெய்ன் நிறுவனம் இதற்கு முன்னர் மன்னாரில் மூன்று எரிபொருள் கிணறுகளில் அகழ்வு பணிகளை மேற்கொண்ட நிலையில் இரண்டு கிணறுகளில் இயற்கை எரிவாயு கண்டுபிடிக்கப்பட்டது.

அகழ்வுப் பணிகளுக்கு பயன்படுத்தப்படும் துளையிடும் கப்பல் முற்கூட்டியே கிடைத்தமையும், ஒருங்கமைப்பு நடவடிக்கைகள் துரிதமாக ஆரம்பிக்க காரணங்களாக அமைந்ததாக நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கெய்ன் இந்திய நிறுவனம் இக்காலாண்டில் மொத்தமாக 791மில்லியன் அமெரிக்க டொலர்களினை வருமானமானப் பெற்றுள்ளது. இது கடந்த வருடத்தின் இக்காலாண்டுடன் ஒப்பிடுகையில் 38 வீத அதிகரிப்பாகும்.

இலங்கை, இந்தியா மற்றும் தென்னாபிரிக்காவில் தமது நிறுவனம் சிறப்பான முறையில் அகழ்வுப் பணிகளை மேற்கொண்டு உள்ளதாகவும் இதன் பயனாக எரிபொருள் மற்றும் இயற்கை எரிவாயு ஆகியன கண்டெடுக் கப்பட்டதாக கெய்ன் இந்தியாவின் பிரதம நிறைவேற்று அதிகாரி பி. இளங்கோ தெரிவித்துள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வர்த்தக உலகம்

ஆர்.எஸ்.கே.முருகதாஸ்

# செலிங்கோ லைப்பின் 25-வது வருட கொண்டாட்டம்



செலிங்கோ லைஃப்பின் தொழில் சங்கம் அந்த நிறுவனத்தின் 25-ம் ஆண்டு நிறைவைக் கொண்டாடிய போது பல்வேறு சமய நிகழ்வுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டன. கொழும்பில் உள்ள நிறுவனத்தின் தலைமையகத்தில் இந்நிகழ்வுகள்இடம்பெற்றன. செலிங்கோ லைஃப் நிறுவனம் அதன் 25ஆவது வருட நிறைவை பூர்த்தி செய்த அடுத்த தினமான ஜனவரி மாதம் 15-ம் திகதி இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

செலிங்கோ லைஃப்பின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஆர். ரெங்கநாதன் (மத்தியில்) ,சிரேஷ்ட முகாமைத்துவ உறுப்பினர்கள் பலருடன் இணைந்து நிறுவனத்தின் பிறந்த நாள் கேக்கை வெட்டும்போது பிடிக்கப்பட்ட படம். செலிங்கோ லைஃப் எப்போதுமே குழு நிலைச் செயற்பாட்டையே விரும்புகின்றது என்று அவர் இந்தச் சந்தர்ப்பத்தில் ஊழியர்களிடம் கூறினார்.

# தேயிலை உ/தியில் சற்று வீழ்ச்சி

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2012 ஆம் ஆண்டு இலங்கையின் தேயிலை உற்பத்தி சற்று வீழ்ச்சியடைந்திருந்தாக இலங்கை தேயிலை சபை அறிவித்துள்ளது.

2012 ஆம் ஆண்டின் மொத்த தேயிலை உற்பத்தி 326.3 மில்லியன் கிலோகிராமாக பதிவாகியிருந்தது. 2011ஆம் ஆண்டில் 327.6 மில்லியன் கிலோகிராமாக தேயிலை உற்பத்தி செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த வீழ்ச்சி ஏற்படுவதற்கு பிரதான காரணியாக,தேயிலை உற்பத்தி செய்யப்படும் பகுதிகளில் நிலவிய சீரற்ற காலநிலையே காரணம் என தேயிலை உற்பத்தியாளர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

# மூலதனச் சந்தையை அ/தி செய்ய ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி

ஆசிய அபிவிருத்தி வங்கி, இலங்கையின் மூலதனச் சந்தையை அபிவிருத்தி செய்வதற்கு தனது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளது.

இதன்மூலம் இலங்கையின் மூலதனச் சந்தைக்கு வலுச்சேர்த்து, நாட்டின் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பங்களிப்பு வழங்கமுடியும் எனத் தெரிவித்துள்ளது.

இலங்கையின் மூலதனச் சந்தையை அபிவிருத்தி செய்வதை நேர்த்தியான முறையில் ஆசிய அபிவிருத்தி வங்கி நோக்குவதாகவும், இலங்கைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்குமிடையிலான 2002-2016 ஆண்டுகளுக்கிடையிலான பங்குடைமையின் அடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் ரீடா ஓ சுலைவான் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கொழும்பு பங்குச்சந்தை இவ்வாண்டில், இதுவரையில் சிறப்பான முறையில் செயற்படுவதாகவும், அதிகளவான வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவனத்தில் ஈர்த்துள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

# டிசம்பரில் 122,252 சுற்றுலா பயணிகள் இலங்கை வருகை

டிசம்பர் மாதம் மொத்தமாக ஒரு இலட்சத்து 22 ஆயிரத்து 252 சுற்று லாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்திருப்பதாகவும், இதுவரையில் ஒரு மாதத்தில் பதிவாகியிருந்த அதி உயர் எண்ணிக்கை இது எனவும் சுற்றுலா சபை குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை கடந்த ஆண்டு மொத்தமாக 10 இலட்சத்து 55 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர்.

# கடந்த 60 ஆண்டுகளில் இந்தியா மும்மடங்கு வளர்ச்சி -பிரணாப்

இந்தியாவின் குடியரசு தினத்தையொட்டி, குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி மக்களுக்கு உரையாற்றியுள்ளார்.

பிரணாப் தனது உரையில் பல நூற்றாண்டுகளில் பெறாத வளர்ச்சியை கடந்த 60 ஆண்டுகளில் இந்தியா பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். மேலும் 60 ஆண்டுகளில் இந்தியாவின் வறுமையின் தீவிரம் பெருமளவு குறைக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார். கடந்த 60 ஆண்டுகளில் இந்தியா மும்மடங்கு வளர்ச்சியைப் பெற்றிருப்பதாகவும் கூறியுள்ளார்.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5875.77 | 5878.19 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,174.36 | 3,190.55 ⇧ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 4,837.82 |

உயர்வடைந்தபங்குகள் இன்பிராசக்சர்(200.00), என்வெ.றிசோசர்ஸ் (18.90), மிரமர்(95.00),பின்லேஸ் களம்பு(310.40),ஓட்டோரோம்(907.30),

சரிவுக்கண்டபங்குகள் சி.ஐ.ரி(132.50),என்வெயர் றிசோர்ஸ்(W )(3.70), லங்கா புளோரைல்ஸ்(60.00),ஆர்பிகோ(80.50),சிலோன் பிறிண்டர்ஸ் (1800.30)

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# முதலீட்டு சபையின் தலைவராக லக்ஸ்மன் நியமனம்



முதலீட்டு சபையின் தலைவராக அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரைத் தளமாக கொண்டு இயங்கும் இரசாயனவியல் பொறியியலாளர் கலாநிதி லக்ஸ்மன் ஜயவீர நியமிக்கப்பட்டுள்ளார்.

35 வருட கால உலகளாவிய வர்த்தக அனுபவத்தைக் கொண்டுள்ள இவரின் நியமனம் நாட்டுக்கு அன்னிய முதலீட்டை கொண்டு வரும் என அரசு நம்புகிறது.

# செலான் வங்கியின் புதிய நியமனம்



Nihal Jayamanne (left) and Ishara Nanayakkara

செலான் வங்கியின் புதிய தலைவராக நிகால் ஜெயமனேவும் பிரதி தலைவராக இஷார நாணயக்காரவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நிகால் ஜெயமனே பிரபல சட்டத்தரணி ஆவார்.

இவர்கள் தமது கடமைகளை கடந்த வாரம் முதல் பொறுப்பேற்றுள்ளனர்.

# உல்லாச பயணத்துறைக்கு ஆதரவளிக்கும் என்டிபி

அண்மையில் தனது ஒரு மில்லியனாவது உல்லாச பயணியை வரவேற்ற இலங்கையின் சுற்றுலாப் பயணத்துறையானது, இந்த வருடத்தில் மிகச்சிறந்த வளர்ச்சியை பெற்றுக்கொள்ளும் என எதிர் பார்கப்படுகின்றது.

புதிய ஹோட்டல்களைத் கட்டமைத்தல், திருத்துதல், புதுப்பித்தல், தற்போது செயற்படும் ஹோட்டல்களைத் தரமுயர்த்தல், ஆகிவற்றுக்கான நிதி உதவிகளை வழங்குவதில் சிரத்தையுடனும், அர்பணிப்புடனும் முன்னெடுப்பதற்கு என்டிபி வங்கி தயாராக உள்ளது.

இதனூடாக இலங்கையின் பொருளாதாரத்தில் முக்கிய பங்காற்றும் உல்லாசப் பயணத் துறையின் அபிவிருத்திக்கு ஆதரவு வழங்கும்வகையிலேவங்கிஅதனைசெயற்படுத்துகிறது என வங்கி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# வேலையில்லா திண்டாட்டம் அதிகரிக்கிறது -ஐ.எல்.ஓ

உலகில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருவதாக சர்வதேச தொழிலாளர் நலன் பாதுகாப்பு கழகமான ஐ.எல்.ஓ தெரிவித்துள்ளது.

பல நாடுகளிலும் பொருளாதார சிக்கன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் மேலும் பலர் வேலையை இழக்கின்றனர்என்று அது குறிப்பிட்டுள்ளது.

உலக அளவில் சென்ற ஆண்டு வேலையில்லாதோர் எண்ணிக்கை அதற்கு முந்தைய ஆண்டு எண்ணிக்கையில் இருந்து 40 இலட்சம் அதிகரித்து தற்போது 19 கோடி 70 இலட்சமாக உள்ளது.

உலக தொழிலாளர் எண்ணிக்கையில் கிட்டத்தட்ட ஆறு சதவீதமானோர் வேலையின்றித் தவிப்பதை இந்த எண்ணிக்கை காட்டுகிறது. 24 வயதுக்கும் குறைவானவர்களுக்கே வேலை கிடைப்பது அதிக சிரமமாக உள்ளது.

இந்த வயதில் உள்ளவர்களில் சுமார் 13 சதவீதம் பேர் வேலையும் இல்லாமல், வேலைப் பயிற்சியும் இல்லாமல் படிக்கவும் செல்லாமல் இருக்கின்றனர் என்று ஐ.எல்.ஓ கூறியுள்ளது.

நீண்டகாலமாக வேலையில்லாமல் இருப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்றும், ஐரோப்பாவில் வேலையில்லாமல் இருப்பவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் ஒரு வருடத்துக்கும் மேலாக வேலை கிடைக்காமலே இருந்து வருகின்றனர் என்று அது சுட்டிக்காட்டியுள்ளது.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 125.41 | 128.67 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 198.05 | 204.13 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 166.12 | 171.92 |
| சுவிஸ் பிராங் | 133.94 | 139.28 |
| கனேடிய டொலர் | 124.67 | 129.39 |
| அவுஸ்திரேலிய டொலர் | 131.19 | 136.43 |
| சிங்கப்பூர் டொலர் | 101.62 | 105.30 |
| ஜப்பான் யென் | 1.40 | 1.45 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.36 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 34.56 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்பான்மைப் பலத்தால் அரசு தன் விருப்பங்களை சாதிக்கிறது

## அதிகார ஆக்கிரமிப்பை அமெரிக்க பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டிய ஆயர்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கம் பெரும்பான்மை பலத்தை வைத்துக் கொண்டுதான் விரும்பியதை செய்து கொண்டு இருக்கின்றது என யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த அமெரிக்க பிரதிநிதிகளிடம் யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

ஆசிய பசுபிக் பிராந்திய பாதுகாப்பு அலுவலகத்தின் தெற்கு மற்றும் தெற்காசிய பாதுகாப்பு விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் விக்ரம் ஜேசிஸ், அமெரிக்க துணை இராஜாங்கச் செயலாளர்களான ஜேம்ஸ் மூர், ஜேம்ஸிம் பர்மன் மற்றும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் மிச்செல் சிசன் உள்ளிட்டவர்கள் நேற்று யாழ். விஜயம் மேற்கொண்டனர். இதன்போது யாழ்.ஆயரை அவரது இல்லத்தில் பிற்பகல் 2.40 மணியளவில் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர். இந்தச் சந்திப்பு தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த ஆயர் மேலும் தெரிவிக்கையில்,

போரின் பின்பு யாழ். மாவட்டத்தின் நிலைவரம் பற்றி அறிந்து செல்வதற்காக அமெரிக்க குழுவினர் வருகை தந்திருந்தனர். என்னுடனான சந்திப்பின் போது அவர்களுக்குப் பல விடயங்களை எடுத்துக் கூறினேன். முதலில் சாதகமான நிலைமைகள் அதாவது அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் வீதி அபிவிருத்திப் பணிகள் மற்றும் உட்கட்டுமான வசதிகள் என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

அத்தோடு நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதானச் சூழல் விரும்பிய இடத்திற்கு சென்று வரக்கூடிய நிலைமை களை ஏற்படுத்தியுள்ளது எனத் தெரிவித்தேன்.

இதேவேளை பாதமான நிலைமைகள் தொடர்பாகவும் எடுத்துக் கூறினேன். குறிப்பாக யுத்தத்திற்குப்பின்பு வடக்கிலிரு ந்து இராணுவம் வெளியேற்றப்படும் படைக் குறைப்பு இடம்பெறும் என எதிர்பார்த்தோம். ஆனால் அது நடைபெறவில்லை. மாறாக இராணுவ முகாம்கள் புதிதாக அமைக்கப்படுவதும் விஸ்தரிப்பு செய்யப்படுவதும் தொடர்கிறது.

இது தவிர கருத்து சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளதோடு பேச்சு சுதந்திரமும் எழுத்துச் சுதந்திரமும் இல்லை. பத்திரிகையாளர்கள் தாக்கப்படுவதும் அச்சுறுத்தப்படுவதும் தொடர்கிறது.

யாழ். பல்கலைக்கழகத்தினுள் இராணுவத்தினரும் பொலிஸாரும் நுழைந்து மாணவர்களைத் தாக்கியதோடு மாணவர்களையும் கைது செய்து தடுத்து வைத்துள்ளனர். யாழ். பல்கலைக்கழகத்துடன் அரசாங்கம் முரண்பட்டுக் கொண்டு இருப்பது ஆரோக்கியமானதாக அமையாது.

மேலும் ஜனநாயகச் செயற்பாடுகள் குறிப்பாக வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடக்கும் என அரசாங்கம் கூறுகின்றது. ஆனால் நடந்ததாகவும் அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரியவில்லை.

இது தவிர மீள் குடியேற்றம் இன்னும் முழுமையடையவில்லை. அத்தோடு மீள் குடியேற்றப்பட்ட பகுதிகளில் உட்கட்டுமான வசதிகள் இன்னும் செய்து கொடுக்கப்படவில்லை.

இவ்வாறு வடக்கில் வாழும் தமிழர்கள் பல நெருக்கடிகளையும் துன்பங்களையும் அனுபவித்துக் கொண்டு இருக்கும்போது இலங்கையின் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அண்மையில் வெளியிட்ட கருத்து மேலும் துன்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

யுத்த காலத்தில் காணாமல் போன உறவுகளை எண்ணி அவர்களின் நிலையை அறிய கண்ணீருடன் அலைந்து திரியும் உறவுகளின் மனங்களில் மேலும் துன்பத்தை ஏற்படுத்தும் வகையில் காணாமல் போனவர்கள் என்று இலங்கையில் எவரும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை விட யுத்தத்தின் போது இறந்தவர்களின் எண்ணிக்கை இன்னும் பகிரங்கப் படுத்தப்படவில்லை. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ள பரிந்துரைகள் அமுல் படுத்தப்படவில்லை. இந்த ஆணைக்குழுவிடம் வடக்கில் உள்ள பலர் தமது உறவினர்கள் காணாமல் போனது தொடர்பில் முறையிட்டுள்ளனர்.

மேலும் இலங்கையில் ஆட்சியிலுள்ள அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை வைத்துக் கொண்டு தான் விரும்பியதை செய்து கொண்டு இருக்கின்றது. இதனை சர்வதேச நாடுகளின் விமர்சனங்களினாலும் அழுத்தங்களினாலும் தான் சமூக நிலைமைகளையும் நன்மை பயக்கும் செயற்பாடுகளையும் மேற்கொள்ளக் கூடியதாக மாற்றமுடியும் எனப் பல விடயங்களை எடுத்துக் கூறினேன் என்றார். (செ-6)

## சுதந்திர தினத்தை முன்னிட்டு இரண்டுநாள் கொடியேற்றப்படும்

இலங்கையின் 65 ஆவது சுதந்திர தினத்தன்று சகல அரச நிறுவனங்களிலும் தேசியக்கொடி ஏற்றப்பட்டு மின்குமிழ் அலங்காரங்களை செய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது. இதற்கமைய எதிர்வரும் பெப்ரவரி 3 மற்றும் 4 ஆம் திகதிகளில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அரச செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பெப்ரவரி 4ஆம் திகதி நாடு முழுவதிலுமுள்ள மதுபானக் கடைகள் மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-2)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

சர்வதேச ரீதியாக வழங்கப்படுகின்ற சிறந்த பேராசிரியருக்கான விருதையும் (Best professor) வாழ்நாள் சாதனையாளர் விருதினையும் (Life time achievement award) பெற்று தனக்கும் குடும்பத்திற்கும் பல்கலைக்கழகத்திற்கும் இனத்திற்கும் நாட்டிற்கும் மாணவர்களுக்கும்பெருமை சேர்த்த எமது மதிப்பிற்குரிய எமது பீடாதிபதி பேராசிரியர்

கலாநிதி
ரி.வேல்நம்பி
(BCom (Hons) MAAT, M.A Mphil. Ph.D)



பேராசிரியர் வேல்நம்பி அவர்கள் முதலமைச்சர் (பாண்டிச்சேரி), கல்வியமைச்சர் (பாண்டிச்சேரி) ஆகியோரிடமிருந்து விருதினை பெற்றுக் கொள்கிறார்.

அவர்களை மனமார வாழ்த்துகின்றோம்.
இவர் மேலும் பல பட்டங்களும் விருதுகளும் பெற்று சிறப்புற வாழ இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்:-
முகாமைக் கற்கைகள் வணிகபீட
மாணவர்கள் (M.C.S.U) யாழ். பல்கலைக்கழகம்



கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பரணி 4<br>உயரம்: 5' 6''<br>கி.பா: 23<br>தொழில்/ தகைமை: BA ஆசிரியர்<br>தொ. இல: B -1062 | பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>உயரம்: 5'4''<br>தொழில்/ தகைமை:BA ஆசிரியை<br>தொ. இல: G -1125 |
| பிறப்பு: 1972 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அத்தம் 4<br>உயரம்: 5'4'<br>கி.பா: 31.25<br>தொழில்/ தகைமை: O/L ஆய்வுகூட உதவியாளர் (பாடசாலை)<br>தொ. இல: B -1064 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 1<br>உயரம்: 5'4''<br>தகைமை: O/L ஆங்கில ஆசிரியர்<br>தொ. இல: G -1127 |
| பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: புனர்பூசம் 3<br>உயரம்: 5'9''<br>கி.பா: 34.5, 7 இல் செவ்<br>தொழில்/ தகைமை: A/L,NCAT பிரான்ஸ் PR (வரவேற்பாளர்)<br>தொ. இல: B -1066 | பிறப்பு: 1987 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: கார்த்திகை 3, 1இல் செவ்<br>உயரம்: 5' 2''<br>தொழில்/ தகைமை: HNDA, IT முகாமையாளர்<br>தொ. இல: G -1128 |
| பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 2<br>கி.பா: 37, 4 இல் செவ்.<br>உயரம்: 6'<br>தொழில்/ தகைமை: A/L (Network நிர்வாகி)<br>தொ. இல: B -1067 | பிறப்பு: 1982 RC வேளாளர்<br>உயரம்: 5' 4''<br>தொழில்/ தகைமை: Bio Science, B.Sc, ABE IIS Operation officer<br>தொ. இல: G -1130 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க துணைத்தூதரகம் யாழில் திறக்கப்பட வேண்டும்

## அமெ.குழுவிடம் யாழ். ஆயர் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழில் இந்தியா தனது துணைத்தூதரகத்தை அமைத்து இங்கு நடைபெறும் சம்பவங்களை எவ்வாறு கண்காணித்து வருகின்றதோ அதேபோன்று அமெரிக்காவும் யாழில் துணைத்தூதரகம் ஒன்றை திறந்து வைக்க வேண்டும் என யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்த அமெரிக்க பிரதிநிதிகள் குழுவிடம் யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை வலியுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் செய்த ஆசிய-பசுபிக் பிராந்திய பாதுகாப்பு அலுவலகத்தின் தெற்கு மற்றும் தெற்காசியப் பாதுகாப்பு விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் விக்ரம் ஜேசிங், அமெரிக்க துணை இராஜாங்கச் செயலாளர்களான ஜேம்ஸ் மூர், ஜேம்ஸிம் பர்மன் மற்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்சேல்சிசன் உள்ளிட்டவர்கள் யாழ்.ஆயரை அவரது இல்லத்தில் பி.ப 2.40 மணியளவில் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர். இதன்போதே ஆயர் மேற்கண்டவாறு வலியுறுத்தியிருந்தார்.

இதற்கு பதிலளித்த அமெரிக்க பிரதிநிதிகள் அவ்வாறானதொரு துணைத் தூதரகத்தை உடனடியாக யாழில் அமைக்க முடியாது. ஆனால் எதிர்காலத்தில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தனர். (செ-6)



நன்றி:- ஐலண்ட்

## கொடுப்பனவை பெற்றுக்கொள்ளவும்

(சாவகச்சேரி)

40 வயதுக்கு மேற்பட்டோருக்கு கொடுக்கப்படும் ஆயிரம் ரூபா கொடுப்பனவை தென்மராட்சி பிரதேச பயனாளிகள் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் அந்தந்த தபாலகங்களில் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-3-29)

## நூலக பதவிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இணுவில் பொது நூலகத்திற்கு நூலகர், நூலக உதவியாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் தமது சுயவிபரக் கோவையுடன் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மானிப்பாய் வீதியிலமைந்துள்ள இணுவில் பொதுநூலக சனசமூக நிலையத்திற்கு சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

மேலதிக தொடர்புகளுக்கு 021224 1930 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். (செ-9)

## வைத்தீஸ்வராக் கல்லூரியின் நூற்றாண்டு விழா

(யாழ்ப்பாணம்)

யா/வைத்தீஸ்வராக் கல்லூரியின் நூற்றாண்டு விழா இவ்வருடம் நடைபெறவுள்ளதாக கல்லூரி அதிபர் மு.மகேந்திரன் அறிவித்துள்ளார்.

இந்நூற்றாண்டு விழாவை சிறப்பாக கொண்டாடும் முகமாக கல்லூரியின் முன்னாள் அதிபர்கள், முன்னாள் ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் கல்லூரி அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

மேலதிக விபரங்களுக்கு vaidyeshwaracollege@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரியுடன் அல்லது 0212 223322 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். (செ-9)

# சமூக சீரழிவுகளை சட்டத்தால் சீர்படுத்துவதற்கு அரச உத்தியோகத்தர்கள் ஒத்துழைக்க வேண்டும்

## நூல் வெளியீட்டு விழாவில் மேலதிக அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சமூக விரோதச் செயல்களுக்கு சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமாயின் அதற்கு சமூகத்திலுள்ளவர்கள், அரச உத்தியோகத்தர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.

எழுத்தாளர் வைத்தியர் ஆ.பேரின்பநாதன் எழுதிய இரு நூல்களின் வெளியீடு நேற்றையதினம் யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாவட்ட ரீதியிலும் தேசிய ரீதியிலும் சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரித்தே காணப்படுகின்றது. தொழில்நுட்பத்தினால் உலகம் சுருங்கிவிட்டது என கூறுகின்றனர்.

இவ்வாறு உலகம் சுருங்கியுள்ளதோடு எமது மனங்களும் சுருங்கிவிட்டது என்று தான் கூறவேண்டும்.

தான் வாழ்கின்ற சமூகங்களில் எத்தனையோ வகையான சமூக சீரழிவுகளினை கண்டும் எம்மில் எத்தனை பேர் மௌனமாக வாழ்கின்றனர்.

இவ்வாறு எதனையும் கண்டு கொள்ளாமல் இருக்கும் தன்மை மிகவும் தவறானதாகும்.

எங்கு, எவ்விடங்களில் துஷ்பிரயோகங்கள் நடைபெறுகின்றனவோ அது தொடர்பில் அரச அதிகாரிகளுக்கு உடனடியாக தகவல் தெரிவிக்க வேண்டியது சமூக நற் பிரஜைகளின் கடமையாகும்.

சமூக பொறுப்புள்ளவர்களாக நாம் மாறுதல் வேண்டும். ஆன்மீகம், உளவியலில், கல்வியில் மாற்றத்தினை எமக்குள் நாமே ஏற்படுத்தி வாழப்பழகுதல் வேண்டும்.

சிறுவர் துஷ்பிரயோகங்கள் முதற்கொண்டு பெரும்பாலான கலாசார சீரழிவுகளுக்கு அரச உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்கின்றனரில்லை என குற்றம் கூறப்படுகின்றது.

இவ்வாறு விரோத செயல்களில் ஈடுபடுகின்றவர்களுக்கெதிராக அரச அதிகாரிகள் சட்ட நடவடிக்கையெடுக்க வேண்டுமாயின் அதற்கு சமூகத்தில் உள்ளவர்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

எங்கு துஷ்பிரயோகங்கள் நடைபெற்றாலும் அதனை உடனடியாக தெரியப்படுத்தியும் அவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கையெடுக்கும்போது அதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது நற்சமூகம் ஒன்றினது கடமையாகும்.

சிறுவர் துஷ்பிரயோக அதிகரிப்பிற்கு விரைந்த சமூகத்தின் வளர்ச்சி, தொழில் நுட்ப வளர்ச்சி என்ற காரணிகளுக்கு அப்பால் பெற்றோரின் கவனிப்பின்மை, ஆசிரியர்கள் சிலர் மாணவர்களிடம் நடந்து கொள்ளும் முறைமை என்பனவும் காரணமாக உள்ளன.

ஆரம்ப காலங்களில் தனக்கு கற்பித்த ஆசிரியர் மீது மாணவனுக்கு அளவு கடந்த மதிப்பும் மரியாதையும் இருந்தது.

காலப்போக்கில் தனக்கு கற்பித்த ஆசிரியரின் மீது மாணவன் வைத்திருக்கும் மரியாதை, மதிப்பு, கீழ்ப்படிதல் என்பன குறைவடைந்தே வருகின்றது.

இதற்கு மாணவர்களிடம் சில ஆசிரியர்களின் தவறான அணுகுமுறைகளும் காரணமாகும்.

எமது கலாசார விழுமியங்களில் மாற்றம் ஏற்படும்போது துஷ்பிரயோகங்கள் அதிகரிக்கும் என்ற கருத்திற்கு மாற்றுக் கருத்துக்கள் எவையும் இருக்க முடியாது.

மனித மனதிற்குள் ஒரு மாற்றத்தினை கொண்டு வருவதற்கு எழுத்தாளர்களாலேயே முடியும்.

அந்த வகையில் ஒவ்வொரு மனித வாழ்க்கையின் உடல், உளத்தினை நன்றாக அறிந்து இவ்விரு நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன என்றார் அவர். (செ-4)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(சாவகச்சேரி)

மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி.சிவநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஓய்வு நிலை நிர்வாக அலுவலர் க.சரவணபவன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (செ-3-29)

# வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் மயான அபிவிருத்திக்குழு அமைப்பு

வலிகாமம் வடக்கு பிரதேசத்திலுள்ள மயானங்களை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் ஒவ்வொரு மயானங்களுக்கும் ஒவ்வொரு மயான அபிவிருத்தி குழுக்களை அமைத்து வருவதாக வலிகாமம் வடக்கு பிரதேச சபை தவிசாளர் தெரிவித்துள்ளார்.

இந்த வகையில் தச்சன்காடு மயானத்திற்குரிய மயான அபிவிருத்திக்குழு தெரிவு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாவிட்டபுரம் கீரிமலை வீதியிலுள்ள ஞான வைரவர் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

எனவே, சனசமூக நிலையத்தின் தலைவர், செயலாளர் உட்பட அங்கத்தவர்கள், நலன் விரும்பிகள், கிராம தலைவர்கள், பொதுமக்கள் அனைவரையும் அம்மயான அபிவிருத்திக்குழு தெரிவில் பங்கேற்று ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்வதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-3-15)










எழுத்தாளர் வைத்தியர் ஆ.பேரின்பநாயகம் எழுதிய சிறுவர் துஷ்பிரயோகம், மதுவும் அடிமை நிலையும் ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு நிகழ்வு நேற்று யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொன்.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நூலாசிரியர் ஏற்புரை வழங்குவதையும் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் நூலினை வெளியிட்டு வைப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- உ.சாளீன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை கல்லூரியின் மைதானத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கல்லூரியின் அதிபர் எஸ்.சிவனேஸ்வரன் உரையாற்றுவதையும், விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் மைதானத்தில் மாணவர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்- உ. சாளீன்)








*கைகொடுக்கும் நண்பர்கள்* எனும் அமைப்பின் அங்குரார்ப்பண நிகழ்வு இல.104, நான்காம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள அகதிகள் புனர்வாழ்வு நிறுவன வளாகத்தினுள் அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தில் நேற்று முற்பகல் 10 மணிக்கு நடைபெற்றது. இதன் நிகழ்வுகள் அகதிகள் புனர்வாழ்வு நிறுவன் மண்டபத்திலே நடைபெற்றன. இங்கு நடை பெற்ற கலந்துரையாடலில் கைகொடுக்கும் நண்பர்களின் அமைப்பின் வழி நடத்தல் குழுவின் செயலாளர் தர்ஷினி உரையாற்றுவதையும் கை கொடுக்கும் நண்பர்கள் அமைப்பின் பெயர் பலகையினை யாழ். மருத்துவபீடத் தலைவர் கலாநிதி ச. பாலகுமார் திரை நீக்கம் செய்து வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்– எஸ்.ஆர்.கரன்)




## நிகழ்வின் நிழல்கள்

யாழ்ப்பாணம் கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டியை முன்னிட்டு கடந்த 24 திகதி கலாசாலையில் கல்வி பயிலும் ஆசிரிய மாணவர்களிடையே மரதன் ஓட்டப்போட்டி நடைபெற்றது. இம் மரதன் ஓட்டப்போட்டியில் ஆசிரிய மாணவிகள் பங்கு கொள்வதையும் கலாசாலை அதிபர் உரையாற்றுவதையும், வெற்றியீட்டிய ஆசிரிய மாணவிக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.






பிளவ்ஸ் ஹாஜியார் பௌண்டேசன் யாழ். மாவட்ட அஹதிய்யா சம்மேளனத்துடன் இணைந்து நடத்திய ஹிஜிரி 1434 முஹர்ரம் இஸ்லாமிய போட்டியின் பரிசளிப்பு விழா கடந்த 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். ஒஸ்மோனியாக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ். மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்தின் இணைப்பாளர் ஈஸ்வரராஜா உரையாற்றுவதையும் அருகில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மொஹமட் ஜெப்ரி பரிசில்களை வழங்குவதையும், மாணவர்கள் மற்றும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்–எஸ்.ஆர். கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வஞ்சத்திற்கு கூலி!



பல ஆண்டுகளுக்கு முன் வங்க நாட்டை ஆண்டுவந்த பிரகஸ்பதி க்கு ஆட்சிசெய்யும் திறமையில்லாவிடினும் தன் முன்னோர்களை ப்போல் புகழுடன் விளங்க ஆசைப்பட்டான். அதற்காக வேண்டி, ஆட்சிப்பொறுப்பை மந்திரியிடம் விட்டுவிட்டு, தன்னைப் பற்றிய பெரிய அளவில் விளம்பரம் செய்து கொள்வதிலேயே குறியாக இருந்தான்.

பிரகஸ்பதி ஆட்சிப்பொறுப்பை ஒப்படைத்த மந்திரியோ ஒருநய வஞ்சகன். அவன் தன் மன்னனை யே கொன்றுவிட்டு, ஆட்சிப் பீடத்தில் தான் அமர ஆசை கொண்டான். ஆனால், தன் ஆசை நிறைவேறுவது மிகவும் கடினம் என்று உண நந்த மந்திரி, பாதி இராட்சியமாவது தான் ஆண்டால் போதும் என்று விரும்பினான். அதற்காக பக்கத்து அங்கநாட்டு மன்னனுடன் இரகசிய சதியாலோசனை செய்தான். அங்கநாட்டு மன்னனுக்கு தன் நாட்டின் மீதே போர் தொடுக்க எல்லாம் உதவியும் செய்வதாகவும் அதற்குப் பதில் அங்கநாட்டு மன்னன் வங்க நாட்டை போரில் ஜெயித்த பின் தனக்கு அதில் பாதி தரவேண்டும் என்று ஒப்பந்தம் செய்து கொண்டான். பின்பு, கலைமணி என்ற கை தேர்ந்த ஒற்றனை தன் உதவிக்கு நியமித்துக்கொண்டான். ஒருநாள் பிரகஸ்பதியும் மந்திரியும் நகர்வலம்

## அம்புலிமாமா கதைகள்

வரும்போது ஓர் இளைஞன் மண்டியிட்டபடி கோயில் வாசலில் அமர்ந்து உரத்த குரலில் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தான். இறைவா! என் தாய் நாட்டைக்காப்பாற்று! நாட்டு மக்களைக்காப்பாற்று! இவர்களின் நலனையே தன் கருத்திற் கொண்டு ஆளும் எங்கள் ராஜாவைக் காப்பாற்று! என்ற அவன் உருக்கமான பிரார்த்தனையைக் கேட்டு மன்னர் நெகிழ்ந்து போனார்.

உடனே அவனை அழைத்து அவனுடன் சற்றுநேரம் உரையாட, அவன் நாட்டுப்பற்று மிக்கவன் மட்டுமல்ல என்றும் மிகவும் புத்தி சாலி என்றும் தெரிந்தது. அவன் தன் பெயரை கலைமணி என்று தெரிவித்தான். உடனே மன்னர் அவனைத் தன் ஆலோசகனாக நியமித்துக் கொண்டான். தான் போட்ட திட்டம் முதற்படியில் வெற்றி கண்டதை எண்ணி மந்திரியும் மகிழ்ந்தான். தான் மன்னனிடம் பணியிலமர்ந்த உடன் கலைமணி ஏற்கனவே மந்திரியுடன் சேர்த்துப் போட்ட திட்டப்படி வங்க நாட்டு இராணுவ இரகசியங்களை உளவு பார்க்க ஆரம்பித்தான். ஆலோசகர் என்ற பெயரில் நாட்டின் பாதுகாப்பை ஆராய்ச்சி செய்வதுபோல் பாசாங்கு செய்து பாதுகாப்புப் பற்றிய தகவல்களைச் சேகரித்தான்.

ஒருநாள் மன்னனிடம் மந்திரிவேண்டுமென்றே பிரபு இந்தக் கலைமணி பொழுதுபோகாமல் நம் நிர்வாக



த்தை பற்றிய எல்லா விடயங்களையும் துருவித்துருவி விசாரிக்கிறான். இவனைக் கண்டித்து வையுங்கள் என்று ஆழம்பார்த்தான்.

ஆனால், பிரகஸ்பதி அதுதான் அவன் வேலை. அதையெல்லாம் தெரிந்துகொண்டால்தானே அவன் எனக்கு சீர்திருத்தங்களைப் பற்றி ஆலோசனை கூறமுடியும் என்றுகூற தன் திட்டம் சரியாகப் பலித்தது குறித்தும் மன்னனுக்கு கலைமணி மீது சந்தேகம் உண்டாகாதது குறித் தும் மந்திரி மகிழ்ச்சியுற்றான்.

பின்பு கலைமணியை அழைத்த மன்னன் கலைமணி! நான் எப்படிப் புகழ் பெறுவது? இதைப்பற்றி ஆலோசனைக்குத்தான் முக்கியமாக நான் உன்னை நியமித்தேன். முதலில் அதைச்செய் என்றான்.

அதற்குக் கலைமணி மன்னா! உங்கள் புகழை வானுயரச்செய்வதே என்கடமை! அதற்காக என் உயிரையும் கொடுப்பேன். நான் தகவல்கள் சேகரித்தது எதற்காக என்று நினைக்கிறீர்கள்? எல்லாம் உங்கள் புகழ் பரப்பவே! என்று முகஸ்துதி செய்த கலைமணி தொடர்ந்து உங்கள் பாதுகாப்பிற்காக அரண்மனையில் நூறுபேரை நியமித்திருக்கிறீர் கள். இது மிகவும் அதிகம். இவர் களில் பாதிப்பேரை வேலைநீக்கம் செய்யுங்கள். அதில் மிச்சமாகும் பணத்தைக் கஜானாவில் சேருங்கள் என்றான். ஏற்கனவே கஜானாவில் பணம் பற்றாக்குறையாக இருப்பதை அறிந்த மன்னன் இந்த யோசனையை உடனே ஒப்புக்கொண்டான். கலைமணியின் மீது நம்பிக்கை அதிகரிக்க மன்னன் பல்வேறு விடயங்களிலும் அவனுடைய ஆலோசனையை நாடினான். அவன் ஆலோசனைப்படி விவசாயிகளுக்கு இலவச விதை வழங்குவதை நிறுத்தினான். மகசூலில் அதிகவரி விதித்தான். இவ்வாறு விவசாயிகளின் வெறுப்பைச் சம்பாதித்தான்.

அடுத்து நெசவுத்தொழில், ஆபரணத்தொழில் ஆகியவற்றின் மீது பலமான வரி விதித்து அவர்களுடைய வெறுப்பையும் தூண்டிவிட்டான். அடுத்து படை வீரர்களின் சம்பளத்தையும் சலுகைகளையும் கணிசமாகக்



குறைத்தான். இதனால் பெரிதும் அதிருப்தியுற்ற வீரர்கள் புரட்சிக்குத் தயாராகினர். இவ்வாறு இராச்சியத்தில் எல்லாத் துறைகளைச் சார்ந்தவர்கள் மீதும் பலமாக வரி விதிக்கச் செய்து ஒட்டுமொத்தமாக நாட்டு மக்கள் அனைவரையும் மன்னனுக்கு எதிராக உள்நாட்டுப் பகைவர்களாக மாற்றினான். தன்னுடைய நாச வேலை




யைத் திருப்திகரமாகச் செய்து முடித்த பின் மந்திரியை அணுகிய கலை மணி ஐயா நீங்கள் எனக்குக் கொடுத்த வேலையை கச்சிதமாகச் செய்து முடித்சுவிட்டேன். வங்க நாட்டைக் கெடுத்து குட்டிச்சுவராக்கி விட்டேன். இப்போது எந்த நேரமும் எந்தநிமிடமும் கலவரம் மூளலாம். நம்நாட்டு மக்கள் மன்னனைக் கொன்றுவிடுவார்கள். அதனால் நீங்கள் உடனே அங்கநாட்டு மன் னனுக்கு படையெடுக்கும்படி தகவல் அனுப்புங்கள் என்றான்.

சபாஷ் கலைமணி! அடுத்து கெடுப்பதில் உனக்கு நிகர் யாரும் இல்லை என்று நிரூபித்துவிட்டாய். உனக்கு வாக்களித்தபடி நல்ல பரிசாக தருவேன் என்றான் வஞ்சக மந்திரி.

மந்திரியின் தகவல் கிடைத்தவுடன் அங்க நாட்டுமன்னன் தன் படையுடன் புறப்பட்டுவந்து வங்க நாட்டில் படையெடுக்க பிரகஸ்பதியின் படைவீரர்கள் எந்தவித எதிர்ப்பும் காட்டாமல் பகைவர்களைக் கோட்டைக்குள் அனுமதி த்துவிட்டனர். அரண்மனைக்குள் அதிரடியாகப் புகுந்த பகைவர்கள் பிரகஸ்பதியை கைது செய்து கொன்று விட்டனர். ஆட்சி கைமாறியது. அங்க நாட்டு மன் னன் வங்கநாட்டைத் தன் குடைக் கீழ் கொண்டுவந்து ஆளத் தொடங்கினான்.

பின்பு ஒருநாள் அங்கநாட்டு மன்னன் தனக்கு உதவிசெய்த மந்திரியையும் மந்திரிக்கு உறு துணையாக இருந்த கலைமணி யையும் தனிமையில் வரவழைத்தான். தனக்கு பாதி இராச்சியம் அளிக்கப்போகிறார் என்று மிகுந்த ஆவலுடன் மந்திரி வர கலைமணியும் அவனுடன் வந்தான்.


பகை மன்னனை வணங்கிய மந்திரி ராஜா நான் சொன்னபடியே என்னாலான உதவி செய்து முடித்தேன். இப்போது நீங்கள் வாக்களித்தபடி வங்க இராச்சியத்தில் பாதியை எனக்குத் தரவேண்டும் என்றான். அதைக் கேட்டுப் புன்னகைத்த அங்க மன்னன் கலைமணிக்கு சைகை காட்ட கலைமணி முன்வந்து பாதி இராச்சியம் ஏன்? மந்திரி பரலோகத்தைப் பரிசாகத் தருகிறோம் என்று கூறியவாறு தன் வாளை வீசி மந்திரியின் தலையை சீவித் தள்ளினான். பின்பு கலைமணியும் அங்கமன்னனும் கைகுலுக்கிக் கொண்டனர். கலைமணிக்கு வங்க இராச்சியத்தில் ஒருபகுதியை அளித்தான் அங்க



மன்னன்!

பாவம்! மந்திரிக்கு கலைமணியைப் பற்றி முழுவதுமாகத் தெரியவில்லை. மன்னனுக்குத் துரோகம் புரிய துணிந்த கலைமணி தனக்கும் துரோகம் செய்வான் என்று மந்திரி எதிர்பார்க்கவில்லை. மந்திரிக்குத் தெரியாமல் அதற்கு முன்னமே அங்கநாட்டு மன்னன் கலைமணி சதியாலோசனை செய்து ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





காலவித்தியாசம்

சொல்லிச் சொல்லி உணவு சமைத்து
தொப்பை வளர்த்ததும் ஒரு காலம்
மில்லிகிராமில் உணவை அளந்து
மென்று முடிப்பதும் ஒரு காலம்

தன்னை வெல்ல ஆளில்லை என்றே
தருக்கித் திரிவதும் ஒரு காலம்
சின்னக் குழியில் காற்றைச் செலுத்தி
ஜீவன் வளர்ப்பதும் ஒரு காலம்

பூமி தனக்கே சொந்தம் என்று
புலம்பித் திருவதும் ஒரு காலம்
பூமிக்கே நீ சொந்தம் என்று
புரிந்து தெளிவதும் ஒருகாலம்

-வைரமுத்து-

# மூன்றாம் உலகப்போர்

## 28 மானுடத்திற்கான திடக்கண்ணீர்!

...திண்ணென்ற உடல்- தெளிந்த மனம்- தொலைநோக்குச் சிந்தனை- தொடர்ந்த உழைப்பு இவைகளின் கூட்டுவினைதான் ஒரு வெற்றிச் சமுதாயம்.

அவ்வாறாயின்- திண்ணென்ற உடலுக்கு உணவெங்கே? புரதமும் ஊட்டமுமிக்க தமிழர்களின் புஞ்சைத் தானியங்கள் எங்கே? பருவம் நீதி வழுவாதிருந்தால் ஆண்டுக்கு நூறு நாள் மட்டுமே மழைவளம் காணும் தமிழ்நாட்டில், மானாவாரியாய் விளைந்த தமிழர்களின் ஆதி உணவு எங்கே?

தேனும் தினைமாவும் கொண்ட என் தாத்தன் காலொடிந்த கன்றைத் தோளில் தூக்கித் தொலைதூரம் நடந் தான்.

சாமையும் வரகரிசியும் கொண்ட, என் தகப்பன் அவித்த நெல்மூட்டையைக் கையில் கசக்கி அரிசியாக்கினான்.

வீட்டில் தோசையும் வெளியில் பீஸாவும் தின்னும் நான் கோட்டார்பட்டி மேட்டில் சைக்கிள் மிதிக்கவும் சக்தியற்றுப் போனேன்.

மொச்சையும், துவரையும், கொள்ளும், கல்லுப்பயறும் உண்டு ஊட்டம் பெற்ற ஒரு பரம்பரையில் 46 விழுக்காட்டுக் குழந்தைகள் சத்துணவின்மையால் வயதுக்கேற்ற வளர்ச்சியடையவில்லை என்று வெட்கப்படாத புள்ளி விவரம் வருத்தத்தோடு சொல்கிறது.

உலகத்தின் 30 விழுக்காட்டுச் செல்வம் கொட்டிக் கிடக்கிற பூமியென்று படையெடுப்பாளர்களால் நம்பப் பட்ட நாடு, இன்று ரேஷன் கடையின் பொருள்களைப் போலவே அதன் வாசலில் எடை குறைந்து நிற்கிறது.

•••••

மாறும்; எதுவும் மாறும்; மாறுதல் ஒன்றே ஜீவிதம்; உயிர்ப்பின் அடையாளம். ஆனால், முன்னேற்றத்தின் விளைச்சலாக இருக்க வேண்டும் மாறுதல்.

குரங்கிலிருந்து மனிதன் குதித்தது மாறுதல்; கூட்டுப்புழுவிலிருந்து பட்டுப்பூச்சி பறப்பது மாறுதல்; கல் சிற்பமாவது மாறுதல். சிற்பம் உடைந்து கல்லாவதல்ல மாறுதல்.

நான் பார்த்த பழைய கிராமம் இன்றில்லை. மாறிப் போனது வாழ்க்கை முறையும்.

அன்று பெண்கள் காலை ஐந்து மணிக்கு வீட்டைவிட்டு வெளியேறினால் வயலுக்கு என்று அர்த்தம். இன்று பெண்கள் மாலை ஐந்து மணிக்கு வீட்டைவிட்டு வெளியேறினால் வாக்கிங் என்று அர்த்தம். அன்று எங்கள் கிராமத்துப் பெண்கள் யாரும் வாக்கிங் போனதில்லை.

காடுகளிலும் கழனிகளிலும் களங்களிலும் வீட்டில் உலக்கை குத்துவதிலும் ஈடுபட்ட பெண்கள் பலருக்கு தொப்பையில்லை. தென்னமரத்துக் கேது வயிறு? அப்படியிருப்பார்கள் அவர்கள்.

புதைக்கும்போது பார்த்திருக்கிறேன்; உயிரற்ற உடல்களில்கூட உப்பிய வயிறு பார்த்ததில்லை. அன்று எங்கள் பெண்களுக்குத் தொழிலே உடற்பயிற்சியாய் இருந்ததுபோய்- இன்று உடற்பயிற்சியே ஒரு தொழிலாகிவிட்டது.

•••••

விவசாயம் இனி எந்திரங்களின் கைகளில் சேரப் போகிறது; அல்லது பன்னாட்டு நிறுவனங்களுக்கு மாறப் போகிறது.

என் அப்பனே கருத்தமாயி! எந்திரம்



வாங்க உன்னிடம் பணமில்லை. இன்னொரு கடன்பட்டு வாங்கினாலும் எந்திரப் பசிக்கு உன்னிடம் நிலமில்லை.

நாற்பதாண்டுகளில் தொழிற்சாலைத் தயாரிப்புகளின் விலை நாற்பது மடங்கு கூடியிருக்கிறது. விளை பொருளின் விலை கூடவில்லையே

# வழி நடத்துமா மூத்த தலைமுறை? வழி நடக்குமா இளைய தலைமுறை?

அந்த விகிதத்தில்!

400 மூட்டை நெல் விற்றால் ஒரு டிராக்டர் வாங்கலாம் நாற்பதாண்டுகளுக்கு முன்பு. இன்று ஒரு டிராக்டர் வாங்க 1200 மூட்டை நெல் விற்க வேண்டும்.

விலைவாசிக்கேற்ப வளர்ந்துள்ளனா விவசாயி...

•••••

கடந்த இருபதாண்டுகளில் விளைநிலம் சுருங்கி வருகிறது. விவசாயம் அருகி வருகிறது. உற்பத்தி குறைந்து வருகிறது.

இந்த நிலை இப்படியே நீடித்தால் சாப்பிடுவதற்கு உணவில்லாமற்போகும் அபாயம் கூப்பிடு தூரத்திலிருக்கிறது.

2050- இல் தங்கம் இருக்கும் ஒவ்வொரு கையிலும் தக்காளி இருக்காது.

பெட்டி இருக்கும் பணம் சுமந்து; ரொட்டி இருக்காது. உணவு மாத்திரை விற்கும் சர்வதேசப் பெட்டிக் கடைகள் வீதிகள் தோறும் விளங்கலாம்.

விழித்துக் கொள்ள வேண்டாமா?

வழி நடத்துமா மூத்த தலைமுறை? வழி நடக்குமா இளைய தலைமுறை?

காலத்தின் தேவையை எவர் உணர்வார்? தேசத்தின் வெறுமையை யார் நிரப்புவார்?

நாசாவில் நாற்காலி தயாரித்து விட்டுத்தான் இந்தியாவில் ஒருவர் விஞ்ஞானியாக விழைகிறார்.

மஞ்சநாயக்கன்பட்டியிலிருந்து மதுரைக்குப் படிக்கச் செல்லும் ஒரு பொறியியல் மாணவனின் அடுத்த இலக்கு மைக்ரோ சாஃப்ட் தான்.

கிராமம் என்ற கலங்கிய குட்டையிலிருந்து ஆவியாகிப் போகிறவன் மீண்டும் மழையாய் வர விரும்புவது பிறந்த பூமிக்கல்ல; தூரதேசத்துக்குத் தான். குட்டை இருக்கிறது குட்டையாகவே; இன்னும் இன்னும் கலங்கலாகவே. ஆந்திரத்திலும் பீகாரிலும் கர்நாடகத்திலும் மராட்டியத்திலும் மேற்குவங்கத்திலும் கருத்தமாயிகள் கருத்தமாயிகளாகவே. வேறு வேறு உடல்களோடு; பெயர்களோடு.

•••••

இரண்டு பணிகள் உள்ளன இந்தியாவுக்கு.

விவசாயத்தை மீட்டெடுத்தல்- அல்லது விவசாயத்திலிருந்து விவசாயிகளை மீட்டெடுத்தல்.

எனக்குள் ஒரு நெருப்பு இருக்கிறது. எனக்கு மட்டும் கேட்கும் சப்தத்தில் அது உள்ளிருந்து எரிந்துகொண்டேயிருக்கிறது. இளவயதில் யாருக்குத்தான் இல்லை அந்த நெருப்பு? பல பேருக்குப் பாதியிலேயே அணைந்து விடுகிறது. பலபேர் அந்த நெருப்பிலேயே எரிந்து போகிறார்கள்.

எனக்குள் இருக்கும் நெருப்பைக் காலம் அணைத்துவிடுமோ அல்லது அது என்னை எரித்துவிடுமோ எவர் கண்டார்? ஆயினும் நான் அணைய விடேன். ஏனெனில் இது அணையும் நெருப்பும் அல்ல; எரிக்கும் நெருப்பும் அல்ல; இன்னொன்றை ஏற்றும் நெருப்பு. நெருப்பே இரு; நீறாகாதிரு."

இறங்கியது பாரம். எழுதியதை மீண்டும் வாசித்தான்; திருத்தினான். அப்போதைக்கு அவனால் திருத்த முடிந்தது எழுத்துப் பிழைகளை மட்டும்தான்.

•••••

கருத்தமாயிக்கு ரெண்டுநாளாத் தடுமன்; தண்ணியா ஒழுகுது மூக்கு வழி. கைப்பிள்ளைக்குச் சுடவச்ச பால் பதத்துல லேசாச் சுடுது உடம்பு.

பகல்ல ஒரு நாளும் அவரு அப்படிப் படுத்ததில்ல. தலமாட்டுல கஞ்சியும் கடுங்காப்பியும் வச்சுட்டு, வெள்ளாட்டுக்கு அகத்திக்கீரை கட்டிவிட்டுட்டு, பசுமாட்டக் கையில புடிச்சுத் தோட்டத்துக்குக் களை எடுக்கப் போயிட்டா சிட்டம்மா.

அண்ணன் சுழியன் 'லொங்கு லெங்' குன்னு இரும, அவரு இருமி முடிக்க காக்கா கத்த- காக்கா கத்தி முடிக்க இவரு இரும -இப்படி மாறி மாறி நடக்குது காக்கா மனுசன் கச்சேரி.

"காக்கா கத்துனா விருந்தாளுக வருவாகன்னு சொல்லுவாக. விருந்தாளுகள வாங்கன்னு சொல்ற பக்குவத்துலயா நாங்க இருக்கோம்? ஏ காக்கா! மரியாதி கெட்டுப்போயிரும். பேசாமப் போயிரு."

காக்கா போயிருச்சு. ஆனா அவரு நெனச்ச மாதிரியே வந்தாச்சு ஒரு ஆளு. விருந்தாளு இல்ல; வேற ஆளு.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அடுத்த தலைமுறையை பலப்படுத்த தாய்மொழி தமிழை நேசியுங்கள்

## சீமான் அறிவுரை

எந்த மொழியில் பேசுகிறீர்களோ அதை முழுமையாக பேசுங்கள், பேசும் மொழியில் மற்ற மொழிகளை இணைத்து அந்த மொழி களைக் களங்கப்படுத்தாதீர்கள். ஏனைய மொழிகளைக் கற்று கொள்ளுங்கள். ஆனால், தாய்மொழி தமிழை தாய்ப்பால் போல பருகுங் கள். அப்போதுதான் அடுத்த தலைமுறையில் தமிழ்மொழி வளரும். இவ்வாறு நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் தெரிவித்துள்ளார்.

நாம் தமிழர் கட்சி சார்பில் சென்னை தண்டையார் பேட்டையில் மொழிப்போர் தியா கிகளுக்கான பொதுக்கூட்டம் நடந்தது. இதில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் படித்தால் மட்டுமே வேலை, தமிழில் பெயர் வைத்திருப்பவர்களுக்கு வேலையில் முன்னுரிமை என்ற நிலை மிக விரைவில் வரும். நாங்கள் தமிழுக்காக போராடுவது அழிவின் விளிம்பில் இருக்கும் தமிழை காக் கவே தவிர மற்ற மொழிகளை அழிப்பதற் காக அல்ல.

தமிழை வளர்க்கவும் தமிழ் இனத்தை அழியாமல் காக்கவும் வேறு ஒரு தலைவர் தமிழ் இனத்தில் இருந்தது இல்லை. ஆட்சி யில் இருப்பவர்களுக்கு தமிழ் மொழியை பற்றி கவலை இல்லை. அவர்களுக்கு தேவை எல்லாம் தமிழர்களை ஆள வேண்டும்.

தாய்மொழியாக இருந்த தமிழ் பாட மொழி யாக, தற்போது விருப்ப பாடமொழியாக இரு ப்பது மிகவும் வருத்தப்படக்கூடிய விடயமாகும். எந்த மொழியில் பேசுகிறீர்களோ அதை முழு மையாக பேசுங்கள். பேசும் மொழியில் மற்ற மொழிகளை இணைத்து அந்த மொழிகளை களங்கப்படுத்தாதீர்கள்.

தமிழகத்தை ஆட்சி செய்பவர்கள் பதவி மோகத்திற்காக மத்தியில் உள்ள கட்சிகளு டன் கூட்டணி வைத்தார்களோ அப்போது இருந்தே தமிழ்மொழி அழிய தொடங்கி விட் டது. எனவே, தமிழையும் தமிழ் இனத்தையும் வாழ வைப்பதற்கான இளைய தலைமுறை யினர் வரவிருக்கும் வரலாற்று புரட்சிக்கு தயாராக இருக்க வேண்டும்.

இலங்கை இராணுவத்தினரால் தமிழக மீனவர்கள் கொல்லப்படுவதை மத்திய அரசு தடுத்து நிறுத்த வேண்டும். இல்லையேல் ஆந்திராவில் சந்திரபாபு நாயுடு தனி தெலு ங்கானா அமைத்து கொண்டதை போல நாங் களும் தனி தமிழ்நாடு அமைத்து கொள்கி றோம். தமிழ் மொழி தமிழர்களுக்கு தாய்ப் பால் போன்றது என்றார். (செ-2)

## ஷிராணி மீதான விசாரணை நியாயமானதல்ல!

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான விசார ணைகள் நீதியானதல்ல என தொழில்சார் நிபுணர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

சட்டத்தரணிகள், கணக்காய்வாளர்கள், கட்டட நிர்மாணக் கலைஞர்கள் உள்ளிட்ட பல்வேறு தொழில்சார் நிபுணர்கள் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளனர்.

பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக் கையில்லாத் தீர்மானம் நியாயமற்ற முறை யில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளனர். பிசினல் டைம்ஸ் என் னும் சஞ்சிகை நடத்திய கருத்துக் கணிப் பின் போது தொழில்சார் நிபுணர்கள் இவ் வாறு கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதி ரான விசாரணைகள் நியாயமானதா என எழுப்பப்பட்ட கேள்விக்கு 90 வீதமானவர் கள் இல்லை என பதிலளித்துள்ளனர். (செ-2)

## புதிய பாடசாலை ஆரம்ப விழா

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள மாங்குளம் மகா வித்தியாலயம் ஆயிரம் பாடசாலைத்திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்ட தன் காரணமாக ஆரம்பக் கல்வி மாணவர் களுக்கான புதிய பாடசாலையாக மு/சண் முகரட்ணம் வித்தியாலயம் என்ற பெயரில் இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு மாங்குளம் புதிய கொலனி கிராமத்தில் ஆரம் பித்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக துணு க்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் கலந்து கொண்டு நாடாவை வெட்டி புதிய பாடசாலையை ஆரம் பித்து வைக்கின்றார்.

இவ் வித்தியாலயத்தின் புதிய அதிபராக தாமோதரம்பிள்ளை தயாகரன் நியமிக்கப்பட் டுள்ளார்.

200 இற்கு மேற்பட்ட மாணவர்களையும் ஆறு ஆசிரியர்களையும் கொண்டு ஆரம் பிக்கப்படும் இப்புதிய பாடசாலையின் நிக ழ்வை சிறப்பிக்கும் முகமாக துணுக்காய் கல்வி வலயத்தின் துறைசார்ந்த கல்வி அதி காரிகள் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் உட்பட ஒட்டுசுட்டான் கோட்டக் கல்விப் பணிப் பாளர் த.பங்கயச்செல்வன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

அத்தோடு தரம் 1 மாணவர்களை புதிய பாடசாலைக்கு வரவேற்கும் நிகழ்வும் பெற றோர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதி களால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளமை குறிப்பி டத்தக்கது. (செ-3-15)

## நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் கைது செய்யப்பட வேண்டியவர்கள்-ஐ.தே.க.

நாடாளுமன்ற உறுப்பினர்களில் பலர் சிறைச்சாலைகளில் தண்டனை அனுபவிக்க வேண்டியவர்கள் என ஐக்கிய தேசியக் கட்சி யின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் பெரு ம்பான்மையான நாடாளுமன்ற உறுப்பின ர்கள் மாட்டு களவு, கஞ்சா விற்பனை, போதைப் பொருள் வர்த்தகர்கள், கொலையாளிகள், கப்பம் கோருவோர், போலி ஆவணங்களை தயாரிப்போர் மற்றும் திருடர்களாவார்கள்.

சந்தேக நபர்களை நீதியின் முன் நிறுத்தி தண்டனை விதிக்கப்பட வேண்டும். சரியான முறையில் விசாரணை நடத்தி தண்டனை விதிக்கப்பட்டால் நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் 200 பேர் சிறைத்தண்டனை அனு பவிக்க நேரிடும் என அவர் மேலும் தெரி வித்துள்ளார். (செ-2)

## தென்பகுதியில் சீரற்ற காலநிலை; சுற்றுலா செல்வோருக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டின் தென்பகுதிகளில் சீரற்ற கால நிலையால் கடும்மழை, வெள்ளம் ஏற்பட் டுள்ளதால் சுற்றுலா செல்வதை தவிர்த்துக் கொள்ளுமாறும் அவ்வாறு சென்றாலும் குளங்களில், ஆறுகளில் நீராடுதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் பொலிஸ் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த சில தினங்களாக மத்திய, ஊவா, வடமத்தி, கிழக்கு மாகாணங்களில் பெய்து வரும் கடும் மழை காரணமாக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் வீதிகள் நீரில் மூழ்கியுள்ளன. போக்குவரத்துகள் ஸ்தம்பிதம் அடைந்து மக் களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

சில பகுதிகளில் வான் கதவுகள் திறக்க ப்பட்டு பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக் கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சுற்றுலா செல்வதை தவிர்த் துக்கொள்ள வேண்டும் என்றும் அவ்வாறு சென்றாலும் குளங்களில் நீராடுவதை தவிர் த்துக் கொள்ளுமாறும் பொலிஸ் தலைமை யகம் கேட்டுக்கொண்டுள்ளது. (செ-2)



தலைநகர் கொழும்பில் உள்ள ஆலயத்தில் புத்தரின் உடைமைகள் இருப்பதாக நம்பப்படுகிறது. இதற்காக புத்தரின் வருகையை உணர்த்தும் வகையில் கெலனியா நகரில் நடக்கும் விழாவில் புனிதப் பொருளை தாங்கிய யானைகள் ஊர்வலமாக அழைத்து வரப்படுவதைப் படத்தில் காணலாம்.

## ஜனநாயகத்தை நிலைநாட்ட ஆட்சி மாற்றம் அவசியம்-மங்கள

நாட்டில் மீளவும் ஜனநாயகத்தை நிலை நாட்ட வேண்டுமாயின் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையி ல்லா தீர்மான விவகாரம், யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பான சர்வதேச குற்றச் சாட்டுக்களை மேலும் வலுப்படுத்தும் வகை யில் அமைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை யின் 19 ஆம் அமர்வுகளின் பின்னர் நாடு பின்னோக்கி நகர்ந்து செல்வதாக தெரிவித் துள்ளார். தற்போதைய ஆட்சியாளர்கள் சர்வாதிகார போக்கில் நாட்டை ஆட்சி செய்ய முயற்சித்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு இந்த நாட்டில் மிகச்சிறந்த தலைவராக மாறுவதற்கு சந்தர்ப்பம் காணப்படுவதாகவும் துரதிர்ஷ்ட வசமாக அவர் றொபர்ட் முகாபேவை முன் மாதிரியாகக் கொண்டு செயற்பட்டு வருவதாக வும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் செயற்பாடுகளின்மூலம் சர்வதேச சட்டங்கள் மீறப்படுவதாகவும் இதன் காரணமாகவே சர்வதேச தலையீடுகள் மேற் கொள்ளப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டு ள்ளார். உலக நாடுகள் இலங்கையை தனி மைப்படுத்தக்கூடிய அபாயம் நிலவி வரு வதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (செ-2)

## தப்பிச்சென்ற ஈரானிய கப்பல் நாட்டை சென்றடைந்துள்ளது

(கொழும்பு)

இலங்கையின் கடற்பரப்பில் நீதிமன்றம் ஒன்றின் உத்தரவுக்கு அமைய தடுத்து வைக் கப்பட்டிருந்த நிலையில் தப்பிச்சென்ற ஈரா னிய கப்பல் ஈரானை சென்றடைந்துள்ளது.

குறித்த கப்பல் இந்த மாத முற்பகுதியில் இலங்கை கடற்பரப்பில் இருந்து தப்பிச் சென் றது. இந்த நிலையில் ஈரானின் பண்டார் அபாஸ் துறைமுகத்தை குறித்த கப்பல் சென் றடைந்துள்ளது.

இதனையடுத்து கப்பல் ஆவண சோத னைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக ஈரா னிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் கடந்த வருடம் முதல் தடு த்து வைக்கப்பட்டிருந்த ஈரானிய கப்பல் நீண்ட நாட்களின் பின்னர் விடுவிக்கப்பட் டுள்ளது. ஜேர்மன் நீதிமன்றம் வழங்கிய உத்தரவிற்கிணங்கவே இந்த கப்பல் விடு விக்கப்பட்டுள்ளது. ஜேர்மன் வங்கியிடமிரு ந்து 250 மில்லியன் யூரோவை கடனாக ஈரான் கப்பல் நிறுவனம் பெற்றிருந்தது.

ஆனால், கடனைப்பெற்ற பின்னர் பண த்தைச் செலுத்தாத ஈரான் நிறுவனம் கப்ப லின் பெயரையும் மாற்றியிருக்கிறது. இந்த நிலையில் இந்த கப்பல் வழியாக பயணம் செய்யும் போது தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

சீனாவிலிருந்து கடந்த வருடம் நவம்பர் 18 ஆம் திகதி புறப்பட்ட எம்.வி.அமினா என்ற கப்பலே தடுத்து வைக்கப்பட்டிருந்தமை குறி ப்பிடத்தக்கது. (செ-2)

## இலங்கையில் பசியால் எவரும் உயிரிழக்கார்- கரு

(கொழும்பு)

இலங்கையில் எந்தவொரு பிரஜையும் பசியால் உயிரிழக்கமாட்டார்கள் என ஐக்கிய தேசி யக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கருஜயசூரிய தெரிவித்துள்ளார். பட்டினி ஏற்படும் சூழ்நிலையில் பலாக்காய் மற்றும் ஈரப்பலாக்காயை துவைத்து உண்டு உயிரை காப்பாற் றிக்கொள்வர் என அவர் குறிப்பிட்டுள்ளார். கண்டி அங்குபுர பிரதேச விகாரை ஒன்றில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் தெரிவித்துள்ளார்.

இந்நாட்டு மக்களுக்கு மனிதாபிமானம், கருணை என்பன உள்ளதாகவும் அதுவே மனிதனுக்கான அழகு எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஒரு மனிதனுக்கு மரியாதை பணத்தைக்கொண்டு வருவதில்லை எனவும் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார். (செ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் குடியரசு தினவிழாவில் காட்சிப்படுத்தப்பட்டது அக்னி-5 ஏவுகணை

## சீன ஊடகங்கள் பிரமிப்பு

(பீஜிங்)


இந்தியாவின் 63 ஆவது குடியரசு தின விழவில் இடம்பெற்ற அக்னி -5 ஏவுகணை குறித்து சீன பத்திரிகைகள் முக்கியத்துவம் தந்து செய்திகள் வெளியிட்டுள்ளன.

நாட்டின் 63 ஆவது குடியரசு தினவிழா நாடு முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. ஒவ்வொரு குடியரசு தின விழாவின் போதும் வெளிநாட்டை சேர்ந்த தலைவர் ஒருவரை சிறப்பு விருந்தினராக அழைத்து கௌரவிக்கப்படுவர்.

மேலும் நாட்டின் இராணுவ பலத்தை பறைசாற்றும் வகையில் முப்படைகளின் அணிவகுப்பும் நடைபெறும். இந்த அணிவகுப்பு சுமார் 100 நிமிடங்கள் அதாவது சுமார் ஒன்றரை மணி நேரம் வரையில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

இந்தாண்டு நடைபெற்ற குடியரசு தின அணி வகுப்பில் சுமார் 6 ஆயிரம் கி.மீ தூரம் வரை சென்று எதிரிகளின் இலக்கை துல்லியமாக தாக்கும் வகையில் தயாரிக்கப்பட்டு இராணுவத்தில் சேர்க்கப்பட்ட அக்னி -5 ஏவுகணை இடம்பெற்றிருந்தது.

கடந்த சில ஆண்டுகளாக எல்லைப்பகுதியில் அமைந்துள்ள பாக். ஆக்கிரமிப்பு காஷ்மீரில் சாலை வசதியை அமைத்தும் அருணாசல பிரதேச மாநிலத்திற்கும் உரிமை கொண்டாடி வரும் சீனா மறைமுகமாக இந்தியாவுடன் மோதல் போக்கை கையாண்டு வருகிறது. இந்நிலையில் குடியரசு தின விழாவில் இடம் பெற்ற அக்னி ஏவுகணை குறித்து அந்நாட்டின் இணையத்தளத்தில் மிக பரபரப்பான செய்தியாக வெளியிட்டுள்ளது.



நீண்ட தொலைவு சென்று தாக்கும் வகையில் ஏவுகணைகளை தயாரித்து வைத்துள்ள வளர்ச்சியடைந்த நாடுகளான அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து, பிரான்ஸ் நாடுகளின் வரிசையில் இந்தியா சேர்ந்துள்ளதாக அந்த இணையத்தளத்தில் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த ஆண்டு சீன பாதுகாப்புத்துறை அமைச்சர் லியான் குவாங்லி இந்திய பயணத்தை தொடர்ந்து வரும் ஆண்டுகளில் இரு நாட்டு இராணுவ பிரிவின் மூலம் கூட்டு பயிற்சி மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (செ-5)




# காற்பந்து கலவர வழக்கில் 21 பேருக்கு மரண தண்டனை


## எகிப்து நீதிமன்றம் தீர்ப்பு

(கெய்ரோ)

எகிப்து காற்பந்து கலவர வழக்கில் 21 பேருக்கு மரண தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதையடுத்து போர்ட் சேட் நகரில் நடந்த கலவரத்தில் 22 பேர் கொல்லப்பட்டனர்.

எகிப்து நாட்டில் கடந்த ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதியன்று போர்ட் சேட் நகரின் அல்மஸ்ரி அணிக்கும் கெய்ரோவின் அல் அஹ்லி அணிக்கும் இடையே காற்பந்து போட்டி நடைபெற்றது.

அப்போது மைதானத்தில் இரு அணிகளின்ரசிகர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இது பெரிய கலவரமாக வெடித்து 74 பேர் கொல்லப்பட்டனர்.



இது தொடர்பான வழக்கில் பலர் கைது செய்யப்பட்டு கெய்ரோ நீதிமன்றத்தில் விசாரணை நடந்து வந்தது. இந்நிலையில் வழக்கில் நேற்று முன்தினம் தீர்ப்பு கூறப்பட்டது.

அதில் கலவரத்தில் ஈடுபட்ட காற்பந்து ரசிகர்கள் 21 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த தகவல் வெளியானதும் போர்ட் சேட் நகரில் வன்முறை வெடித்தது. தண்டனை விதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் போர்ட் சேட் சிறைக்கு முன்கூடி போராட்டம் நடத்தினர்.

சிறையை உடைக்க முயற்சி செய்து கற்களை வீசினர். அப்போது அவர்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தினர். இதைத் தொடர்ந்து ஏற்பட்ட வன்முறைகளில் மொத்தம் 22 பேலர் பலியானதாக அந்நாட்டு உள்துறை அமைச்சகம் தெரிவித்தது.

இந்நிலையில் அந்த நகரில் இராணுவம் குவிக்கப்பட்டு நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. (செ-5)



மெக்ஸ்கோ நாட்டில் கடத்தல் வழக்கில் சிக்கி 7 ஆண்டு சிறை தண்டனை அனுபவித்த பின்னர் நிரபராதி என அறிவிக்கப்பட்ட பிரெஞ்ச் பெண்மணி ப்ளோரன்ஸ் கேஸே தாய்நாடு திரும்பினார். தமது பெற்றோர்களுடன் ஜனாதிபதி பிரான்கோய்ஸ் ஹொலண்டே சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

# ரஷ்யாவுடனான கூட்டணியை முறித்தது அமெரிக்கா!

சமூக நலப் பணிகள் குழுவில் ரஷ்யாவுடனான கூட்டணியை அமெரிக்கா முறித்துக் கொண்டுள்ளது.

ரஷ்யாவில் மனித உரிமை மீறல் பிரச்சினைகள் அதிகரித்துள்ளாதாகக் கூறி இந்த நடவடிக்கையை அமெரிக்கா மேற்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக அந்நாட்டு வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் விக்டோரியா நூலண்ட் கூறியதாவது,

சமூக நலப் பணிகள் குழுவில் ரஷ்யாவுடனான கூட்டணியில் இருந்து வெளியேற முடிவு எடுக்கப்பட்டுள்ளது. சமீபகாலமாக இக்குழுக்களுக்கு ரஷ்யாவில் விதிக்கப்படும் கடுமையான கட்டுப்பாடுகளே இதற்குக் காரணம்.

இரு நாடுகள் இடையே ஒத்துழைப்பை மேம்படுத்தும் வகையில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு தான் சமூக நலக்குழுக்கள் கூட்டணி அமைக்கப்பட்டது.

ஜனநாயக விடயங்கள், மனித உரிமைப் பிரச்சினைகள் குறித்து ரஷ்யாவுடன் பேச அமெரிக்கா எப்போதும் தயாராகவே உள்ளது. ஆனால், சமூக நலக் குழுக்கள் இனி செயற்படாது. சில வி;யங்களில் ரஷ்யா தவறாக முடிவெடுத்து செயற்படுவதே இதற்குக் காரணம்.

கருத்துக்களை சுதந்திரமாக வெளியிடுவதற்கும் பொது இடத்தில் மக்கள் பெருமளவில் கூடுவதற்கும் ரஷ்யாவில் தடை விதிக்கப்பட்டது பெரும் கவலையளிக்கிறது. தங்கள் சமூக அரசியல் உரிமைகளைக் காத்துக் கொள்ளவும் எவ்வித தடையும் இன்றி தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கவும் மக்களுக்கு உரிமை உண்டு. இதனைத் தடுக்க ரஷ்ய அரசு முயற்சிக்கக் கூடாது என்று அவர் தெரிவித்துள்ளார். (செ-5)

# பிரான்சின் ஜனநாயக ஆட்சிக்கு அமெரிக்க ஜனாதிபதி ஆதரவு

மாலியில் போராளிக் குழுக்களை ஒடுக்க பிரான்ஸ் எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா ஆதரவு தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்ஷவா ஹோலாந்துடன் தொலைபேசியில் உரையாடிய ஒபாமா, மாலியில் மீண்டும் ஜனநாயக ஆட்சியை கொண்டுவரத் தேவையான உதவிகளைச் செய்ய தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.

மேற்கு ஆபிரிக்க நாடான மாலி போராளிக் குழுக்களின் புகலிடமாக மாறுவதைக் தடுக்க பிரான்ஸ் தலைமையில் சர்வதேச நாடுகள் மேற்கொள்ளும் முயற்சிக்கு முழு ஒத்துழைப்பு அளிக்கப்படும் என்று ஜனாதிபதி ஒபாமா பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்ஷவா ஹோலாந்திடம் தெரிவித்தார். தொடர்ந்து அமெரிக்காவின்ஆதரவுக்கு பிரான்ஸ் ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

ஆபிரிக்க யூனியன் மற்றும் சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புடன் மாலியில் தேர்தல் நடத்தி மீண்டும் ஜனநாயக அரசை ஏற்படுத்துவது குறித்து இரு தலைவர்களும் விவாதித்தனர்.

இது தொடர்பாக முயற்சி மேற்கொள்ளும் மாலி இடைக்கால அரசுக்கு ஆதரவாக செயற்படுவது என்றும் முடிவு செய்யப்பட்டது. அல்ஜீரியாவில் கடந்த வாரம் நிகழ்ந்த தாக்குதலுக்கு இரு தலைவர்களும் கண்டனம் தெரிவித்தனர்.

சிரியாவில் உள்நாட்டுப் போரால் பொதுமக்கள் உயிரிழந்து வருவது குறித்து இருவரும் கவலை தெரிவித்தனர். சிரியா மக்களுக்கு உதவும் வகையில் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்த உதவுவது என்று முடிவு செய்ததாக அமெரிக்க வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-5)

# உலகின் மிகப் பெரிய விமான நிலையம்

## துருக்கியில்

(அங்காரா)

உலகின் மிகப் பெரிய விமான நிலையத்தை இஸ்தான்புல் நகரில் 49 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கதுருக்கிஅரசுதிட்டமிட்டுள்ளது.

துருக்கி நாட்டின் போக்குவரத்து துறை அமைச்சர் பினாலி எல்திரிம் இது குறித்து கூறியதாவது,

துருக்கி பொருளாதாரம் வேகமாக வளர்ந்து வருகிறது. நாட்டின் மிக முக்கிய வியாபார பங்களிப்பு மத்திய தரைக்கடல் நாடுகளிலும் ஐரோப்பிய நாடுகளிலும் அதிகரித்து வருகிறது.

இதை அடுத்து உலகின் மிகப் பெரிய விமான நிலையத்தை இஸ்தான்புல்லில் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக 49 ஆயிரம் கோடி ரூபாய் செலவிடப்படும். இதற்காக சர்வதேச டெண்டர் விடும் பணிகள் நடக்கிறது.

இதற்கான பணிகள் 25 ஆண்டுகளில் நான்கு கட்டங்களாக முடிக்கப்படும். முதல் கட்டப்பணிகள் அடுத்த மூன்று அல்லது நான்காண்டுகளில் முடிக்கப்படும். முதல் கட்டப் பணிகள் முடிந்ததும் விமான நிலையத்தில் ஆண்டு தோறும் 9 கோடி பயணிகளும் விமான நிலையப் பணிகள் அனைத்தும் முடிந்த பின்பு ஆண்டுக்கு 15 கோடி பயணிகளும் வந்து செல்ல முடியும். இவ்வாறு அமைச்சர் பினாலி எல்திரிம் கூறினார். (செ-5)

# தற்கொலை தாக்குதலில் 10 பொலிஸார் சாவு

ஆப்கானிஸ்தானில் உள்ள குண்டூஸ் மாநிலத்தில் போக்குவரத்து பொலிஸ் தலைமை அலுவலகம் அருகே பழிக்குப்பழி வாங்குவதற்காக போராளிக்குழுக்கள் தற்கொலை படைத்தாக்குதலில் ஈடுபட்டனர். இந்த தாக்குதலில் 10 பொலிஸார் கொல்லப்பட்டதோடு மேலும் 5 பொலிஸார் உட்பட பொதுமக்கள் 13 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த தற்கொலைப் படை தாக்குதலை இதுவரை எந்தப் போராளி அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. முன்னதாக நேற்று முன்தினம் காலையில் தென்கிழக்கு மாநிலத்தில் உள்ள கஷானி என்ற இடத்தில் தற்கொலை படைத்தாக்குதலில் பொதுமக்கள் 2 பேர் கொல்லப்பட்டிருந்தனர். (செ-5)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தவடுக்களை நெஞ்சில் சுமக்கும் தமிழ்ப்பெண்கள்

யாழ்மாவட்டத்தில் உள்ள பால்நிலைப் பயிற்சியாளர்களுக்கான நடைமுறைப் பயிற்சிப்பட்டறை ஒன்று காரைநகரிலுள்ள தோப்புக்காடு என்ற கிராமத்தில் மேற்கொள்ளப் பட்டது. யு.என்.டி.பி நிறுவனத்தால் அமுல்படுத் தப்படும் வாழ்வாதார உதவித் திட்டத்தின் கீழ் பயன்பெறும், போரின்போது தமது கணவன் மாரை இழந்த பெண்கள் இப்பயிற்சித் தொட ரில் பங்குபற்றினர்.

இப்பயிற்சிப் பட்டறையில் முதற்கட்டமாக கலந்துகொண்டவர்களிடம் வினாக்கள் தொடுக் கப்பட்டன: இந்தப் பயிற்சிப்பட்டறை மூலம் நீங்கள் எவற்றை எதிர்பார்க்கிறீர்கள்? என பங்கு பற்றிய பெண்களிடம் கேட்கப் பட்டது. இதற்கு சிலர் பால்நிலை தொடர் பான அறிவைப் பெற்றுக்கொள்வதே தமது எதிர்பார்ப்பு எனக் கூறினர்.

2008 இல் எனது கணவர் கடத்தப் பட்டார். அதிலிருந்து அவர் காணாமற் போயுள்ளார். நான் அவரைக் கண்டு பிடிக்க விரும்புகிறேன் என இன்னொரு பெண் பதிலளித்தார். இவரு டைய பதிலிலிருந்து நாம் அறியக்கூடியது: அப் பெண் தனக்கு ஏற்பட்ட பாதிப்புகளிலிருந்து இன் னும் சிறிதும் விடுபட வில்லை.அவளின்பாதிப் புக்கு அரசினாலோ அல் லது அரசசார்பற்ற நிறு வனங்களினாலோ ஒரு முடிவான, நம்பகமான பதில் இதுவரை வழங் கப்படவில்லைஎன்பதும்,



அப்பெண்ணைப்போன்ற பல பெண் கள் வடக்கு- கிழக்கில் செய்வதறி யாது தவித்தவண்ணம் இப்போதும் உள்ளனர் என்பதுமே.

பயிற்சிப்பட்டறையின் நோக் கம் என்னவோ போரினால் பாதிப் புற்ற பெண்களுக்கு நடைமுறை யில் தாம் தமது வாழ்வில் சந்திக் கும் பிரச்சினையில் பால்நிலை அறிவை எவ்வாறு பிரயோகிப் பது என்பதைக் கற்றுக்கொள் வது என்பதாக இருந்தாலும் பல பெண்கள் அப்பட்டறைக்கு உளரீதி யாக இன்னும் தயார்ப்படவில்லை என்பதே இவ்வாறான பட்டறைகளின் அனுபவமாக உள்ளது.



யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வல யங்களில் பணிபுரியும் அரசசார்பற்ற நிறு வனங்கள் பல இக்கட்டுகளைச் சந்திக்கின் றன என்பது உண்மை. இந்நிறுவனப் பணி யாளர்கள் ஒருபுறத்தே மக்களின் பங்களிப்பு மற்றும் மேம்பாடு போன்ற முறைமைகளை வலியுறுத்தி பணியாற்றுகின்றன. இந்த அடிப்படையில் அரசார்பற்ற நிறுவனங்கள் நிதி வழங்குபவர்களால் விடுக்கப்படும் கோரிக் கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டியவர் ளாக உள்ளனர்.

மறுபுறத்தே, மத்தியமயப்படுத்தப்பட்ட அரசியல் அதிகார முறைமையின் பிடிக்குள் சிக்குண்டுள்ள இந்த நிறுவனங்கள் இரக்க மற்ற முறையிலும், கடும்போக்காகவும் செயற்பட வேண்டியுள்ளனர். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள பொது நிர்வாகங்களும் அரச சார்பற்ற நிறுவனங்க ளுடன் பேரம்பேசுகின்றன. அதாவது, இரா ணுவ ஆட்சியின் கீழ் அவற்றின் அதிகார வலையுள் சிக்குண்டுள்ள பொதுநிர்வாகமும் கூட தற்போது அரசசார்பற்ற நிறுவனங்களி டம் அனுமதி வழங்கல், செயற்பாடுகள் மீது தடைவிதித்தல் போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தி பேரம்பேசுகின்றனர். ஒரு கட் டாயத்தின்பேரில் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.போரால் பாதிக் கப்பட்ட வலயங்களில் பணிபுரியும் அரசசார் பற்ற நிறுவனங்கள் மக்கள் நலன்கருதி சிறிய, வேறுமுறையான நகர்வொன்றை மேற்கொண் டால் கூட இவற்றின் அடுத்தகட்ட நகர்வுக ளுக்கு தடைவிதிக்கப்படலாம் என்ற நிலையே உள்ளது.

நான் இடம் பெயர்ந்ததால் எனது வாழ் வாதாரத்தை இழந்துள்ளேன்-எனக்கு அடிக்கடி தலைவலி ஏற்படுவதால் எந்த வொரு பொருளாதார செயற்பாடுகளி லும் பங்குபற்ற முடியவில்லை- எனது மகன் எங்கே என்று எனக்குத் தெரி யாது- நான் எனக்கான வீட்டைப் பெறு வதற்கான விண்ணப்பத்தைக் கையளித்த போதிலும், இந்த வீடுகளை அமைச்சர், வேறு பயனாளிகளுக்காக ஒதுக்கிவிட்ட தாக சிலர் கூறுகின்றனர் என இவ்வாறான பதில்களையே போரால் பாதிக்கப்பட்ட வடக்கு- கிழக்கு மக்கள் எதிர்நோக்கும் பொதுவான பிரச்சினைகளாக காணப்படுகின்றன.

இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்ப்பதற் கான் முயற்சிகள் எடுக்கும்போது இவை தொடர்பில் நாட்டின் தேசிய பாதுகாப்பு போன் றன முதன்மைப்படுத்தப்படுவதுடன், அரசி யல் மற்றும் இராணுவ அதிகாரங்களுடன் தொடர்புபடுகின்றன. இதேவேளை இவ்வா றான பிரச்சினைகளை எல்லாம் எதிர் கொள் ளும், போரின்போது கணவனை இழந்த பெண்ணொருவர் இவற்றுக்கப்பால் பால் நிலை பிரச்சினையையும் எதிர்கொள்கிறார்.

காரைநகரின் தோப்புக்காட்டு கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்தப்பயிற்சிப் பட்டறை யின் போது இடம்பெற்ற அதே நிகழ்வுகள் எல்லா பயிற்சிப் பட்டறைகளிலும் மீண்டும் இடம்பெறுகின்றன. அரசசார்பற்ற நிறுவனங் களினால் ஒழுங்குபடுத்தப்படும் சந்திப்பு களில் போரின்போது கணவனை இழந்த பெண்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்து வதற்கும் தமது உள்ளக்கிடக்கைகளை நிறு வனப்பணியாளர்களிடம் கொட்டித் தீர்ப்பதற் காகவுமே கலந்துகொள்கின்றனர்.

வடக்கு- கிழக்கில் போரின்போது கணவன் மாரை இழந்த 89 ஆயிரம் வரையான பெண் கள் வாழ்வதாக இலங்கை அரசாங்க புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. போரால் பாதிக்கப்பட்ட இந்தப் பெண்களை ஒன்றி ணைத்து இவர்களுக்கு அரசாங்கம் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் என்பன பொரு ளாதார உதவிகளை வழங்குவதற்கும் இவர் களின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பரப்புரைகளை மேற்கொள் வதானது, இந்தப் பெண்களுக்காக குரல் கொடுப்பதுடன், இவர்களின் வாழ்வில் துரித மாற்றத்தைஏற்படுத்துவதற்கானதாகும். ஆனால், இந்த மாற்றத்தை ஏற்படுத்துவதானது, அவ் வளவு சுலபமான காரியமல்ல.

இவர்களின் நம்பிக்கையைக் கட்டியெ ழுப்புதல், இந்தப் பெண்களின் தனிப்பட்ட பிரச்சினைகளுக்கும் இந்த நாட்டை ஆட்சி செய்யும் அரசாங்கம் மற்றும் அரசியல்யாப்பு போன்றவற்றிற்கும் இடையிலான தொடர்பை கருத்தியல் ரீதியாக மாற்றுவதற்கான ஆளுமையைக் கட்டியெழுப்புதல் போன் றன சவாலாகக் காணப்படுகின்றன. இந்தப் பெண்களின் மேம்பாடானது இவ்வா றான சவால்களில் தங்கியுள்ளது.

இந்தவகையில் பெண்களை பால்நிலை ரீதியாக மேம்படுத்துவதற்கான திட்டம் தற் போது வடக்கு- கிழக்கின் தெரிவு செய்யப்பட்ட சில இடங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரதேச செயலர்பிரிவிலும் குடும் பங்களைத் தலைமைதாங்கும் பெண்களுக் கான சங்கம் ஒன்று உருவாக்கப்படுகிறது.

களைப் பெற்றுக்கொள்வதற்கான ஒழுங்கு களும் இத்திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்படு கிறது. இவ்வாறான வெவ்வேறு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டே பெண்களுக் கான பால்நிலை பயிற்சிப்பட்டறை மேற் கொள்ளப்படுகிறது.

எது எவ்வாறிருப்பினும் ஏற்கனவே குறிப் பிட்டதன்படி, இந்தப் பெண்கள் மேப்படுத்தப் பட வேண்டும். போரில் கணவனை இழந்த ஒவ்வொரு பெண்ணும் பயனுள்ள, முழுமை யான குடியியல் கல்வித்திட்டத்தைப் பெற்றுக் கொள்வது உறுதிப்படுத்தப்படவேண்டும். இந்த நோக்கத்தை அடைவதற்கு, சமூகத்தில் உருவாக்கப்படும் ஒவ்வொரு பெண்கள் சங்க மும் ஒன்றுடன் ஒன்று தொடர்பை பேணுவதுடன் ஏனைய உள்ளூர் நிர்வாகங்களுடன் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். குறிப்பாக, கிராமியப் பெண்கள் அபிவிருத்திச் சங்கங் கள் தமது கிராமங்களில் உள்ள பெண்களை இனங்கண்டு அவர்களுக்கு நிதி ரீதியான வளங்களை மட்டும் பெற்றுக் கொடுக்காது, இவர்களுக்கான தலைமைத்துவக் கல்வியை யும் வழங்க வேண்டும்.

மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் போன்றவற்றின் அடிப்படைக் கோட்பாடுகள் சி.ஈ.டி.ஏ.டபிள்யு, யு.என்.எச்.சி.ஆர் மற்றும் கற்றுக்கொண்ட பாடங்களுக்கான நல்லி ணக்க அணைக்குழுவின் பரிந்துரைகள், உள்ளூர் அரசாங்கங்களின் கடமைகள், இலங்கை அரசியல் யாப்பிலுள்ள சரத்துக் கள் போன்றன தொடர்பான அறிவை பெண் களுக்கு வழங்கவேண்டும். இவ்வாறானவிடயங்களில்தெளி வைப்பெறும் வடக்கு கிழக்கு வாழ் பெண்கள் தமக்கான எதிர் காலத்தை தாமாகவே தீர்மானி த்துக் கொள்ளமுடியும். இவர் கள்தமது சங்கங்களின்வழமை யான கூட்டங்கள் மற்றும் நட வடிக்கைகளை மேற்கொள் வதற்கு உள்ளூர் இராணுவக் கட்டளைத் தளபதியிடம் அனு மதி பெறாது தாமாகவே இவ்ற் றைச் செய்வதற்கான தெளி வைப்பெற்றுக்கொள்ள முடியும்.

போரில் கணவன்மாரை இழந்த தமிழ்பெண்கள் தமக் கான வாழ்வாதாரத் தெரி வுகள், இவற்றை அமுல் படுத்துவதற்குத் தேவையான அத்தியாவசய வளங்களைப் பெற்றுக்கொள்ளுதல் போன் றன இந்தப் பெண்கள் எதிர்கொள்ளும் முக் கிய பிரச்சினைகளாகும். இவர்களுக்கான தேவைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய நிதி நிறுவனங்களைக் கண்டறிந்து அவர் களுடன் இந்தப் பெண்கள் அமைப்புகளைத் தொடர்புபடுத்துவதன் மூலம், போரால் பாதிக்கப்பட்டு, தமது குடும்பங்களைத் தலைமையேற்றுள்ள பெண்கள் தமக் கான பொருளாதார மேம்பாட்டு கடனு தவிகளை பெற்றுக்கொள்ள முடியும்.




தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் பயிற் சிப்பட்டறைகள் மூலம் பெண்கள் இதனை அறிந்துகொள்ள முடியும். சிறுகடனுதவி மற்றும் பிள்ளைகளுக்கான கல்விக் கான நிதியை வழங்க விரும்பும் புலம் பெயர் தமிழர் அமைப்புகளுடன் இந்தப் பெண்கள் தொடர்புபடுத்தப்படுகின்றனர். கைத்தொழில் உற்பத்தி நிலையங்க ளுடன் இந்தப் பெண்களைத் தொடர்புபடுத்து தலும் இந்த திட்டத்தின் நோக்காகும். எடுத்துக்காட்டாக தமது பிள்ளைகளைப் பரா மரிக்க வேண்டியதன் காரணமாக பயனுள்ள பொருளாதார நடவடிக்கைகளில் பங்குகொள்ள முடியாத பெண்கள் சந்தைப்படுத்தல் சேவை கான கட்டமைப்பொன்றை உருவாக்கி அதன் கீழ் இயங்கும்போது இவர்கள் பிராந்திய, அனைத்துலகவலைப்பின்னல்களுடன் தொடர் பைப் பேணிக்கொள்ள முடியும். இதன் மூலம் தமது பிரச்சினைகளை ஜக்கிய நாடுகள் சபைவரை கொண்டுசெல்லமுடியும்.

பெண்களுக்கானமேம்பாடு மற்றும் அபி விருத்திக்கான தென்னாசிய வலைப்பின் னலை உருவாக்கிய பெருமையைக் கொண் டுள்ள லில தபா, நேபாளத்தைச் சேர்ந்த கணவனை இழந்த பெண்ணாவார். ஆனால், இன்று இவர் செயற்பாட்டாளராக மிளிரு கிறார். இதேபோன்று ஜனநாகத்தின் ஊடாக கணவனை இழந்த பெண்களுக்கான அமைதி யைப் பெற்றுக்கொள்ளும் நிறுவனத்தை உரு வாக்கிய பெருமையை சட்டவாளரான மார் கிறேற் ஓவின் பெற்றக்கொள்கிறார். ஆகவே இந்நிலையில் பெண்களுக்காக பணபுரியும் அரசசார்பற்ற அமைப்புகள் தமது திட்டங் களுக்கான வரையறையை மட்டும் கருத்திற் கொண்டு செயற்படாது, இந்தப்பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு நியாய மான தீர்வொன்றைக் கண்டுபிடிக்க வேண் டும். இதன் மூலம் இந்த நிறுவனங்கள் தமது திட்டங்களை முழுமைப்படுத்த முடியும். உண் மையில் கணவன்மாரை இழந்த பெண்கள் இனியும் அழவேண்டிய நிலை நீங்கவேண்டும்.

நன்றி: புதினப்பலகை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முன்னாள் பிரதம நீதியரசருக்கு ஓய்வூதியம் வழங்கப்பட மாட்டாது

முன்னாள்பிரதமநீதியரசர்ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு ஓய்வூதியம் வழங்கப்பட மாட்டாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பணி நீக்கம் செய்யப்பட்ட ஒருவருக்கு ஓய்வூதியம் வழங்க முடியாது என பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் பீ.பி. அபயகோன் தெரிவித்துள்ளார்.

பணி நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க சட்டத்தில் இடமில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஜனாதிபதியினால் பணி நீக்கம் செய்யப்பட்ட காரணத்தினால் ஓய்வூதியம் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தை முன்னாள் பிரதம நீதியரசர் இழந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (செ-2)

# சீரற்ற காலநிலை காரணமாக 3 இலட்சத்திற்கு மேற்பட்டோர் பாதிப்பு

நாட்டின் பல பாகங்களிலும் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக தென்பகுதியில் இதுவரையில் 95 ஆயிரத்து 844 குடும்பங்களைச் சேர்ந்த 3 இலட்சத்து 51ஆயிரத்து 703 பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக இதுவரையில் ஒரு மரண சம்பவமும் பதிவாகியுள்ளதாக மேற்படி நிலையம் குறிப்பிட்டுள்ளது.

901வீடுகள் முழுமையாக சேதம் அடைந்துள்ள அதேவேளை ஆயிரத்து 711 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. இதேவேளை, மூடப்பட்டிருந்த கண்டி- அம்பாறை மற்றும் பொலநறுவை- மட்டக்களப்பு வீதிகள் மீண்டும் போக்குவரத்திற்காக திறக்கப்பட்டுள்ளன.

எப்படியிருப்பினும் சீரற்ற காலநிலை மோசமடைந்து செல்லும் வேளையில் அரசு பாதிக்கப்பட்ட மக்களுக்காக எந்த வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என மக்கள் விடுதலை முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது. (செ-2)

# பாலகர்களை வைத்து பிச்சை எடுத்தால் சட்டத்தின்படி கைது செய்ய நடவடிக்கை!

## சிறுவர், பெண்கள் பாதுகாப்பு அதிகாரசபை அறிவிப்பு

கைக்குழந்தைகள், சிறுவர், சிறுமியரை வைத்துக் கொண்டு பிச்சை எடுப்போரை உடனடியாககைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

சிறுவர், பெண்கள் பாதுகாப்பு அதிகார சபை இது தொடர்பாக துரித நடவடிக்கை எடுத்து வருவதாக அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி அனோமா திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்படுபவர்களிடமிருந்து குழந்தைகள் பெற்றுக் கொள்ளப்பட்டு பராமரிப்பு இல்லங்களிடம் ஒப்படைக்கப்படும். சிலர் குழந்தைகள், சிறுவர், சிறுமியரை அழைத்துக் கொண்டு பிச்சை எடுப்பதை ஒரு தொழிலாக கொண்டுள்ளனர். சிலர் குழந்தைக்கு மயக்க மருந்தை ஊட்டி பரிதாபமாக காண்பித்து பிச்சை எடுக்கின்றனர்.

இதனால் குழந்தைகளுக்கு ஏற்படும் துன்புறுத்தல்களைக் கருத்திற் கொண்டு பொலிஸ்மா அதிபர் விசேட சுற்றுநிருபம் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இதனடிப்படையில் இவர்கள் உடனடியாக கைது செய்யப்படுவார்கள். குழந்தைகளை சுமந்தவாறோ, சிறுவர், சிறுமியரை அழைத்துக் கொண்டோ பிச்சை எடுப்பவர்களைக் கண்டால் 1929 என்ற தொலைபேசி இலக் கத்துக்கு அறிவிக்குமாறும் சட்டத்தரணி அனோமா திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் கைக் குழந்தையை சுமந்தவாறோ, சிறுவர், சிறுமியரை அழைத்துக் கொண்டோ பிச்சை எடுப்பவர்களுக்கு பணம் கொடுக்க வேண்டாம் என்றும் பொதுமக்களை அவர் கேட்டுள்ளார். (செ-2)

# வெறும் வயிற்று உடற்பயிற்சியால் கொழுப்புச்சத்து குறைவடையும்

## புதிய ஆய்வில் தகவல்

(லண்டன்)

லண்டனில் உள்ள நார்த் உம்பிரா பல்கலைக்கழகத்தை சேர்ந்த நிபுணர்கள் உடற்பயிற்சி குறித்த ஆய்வு மேற்கொண்டனர். அதற்காக டிரட்மில் என்ற நடைபயிற்சி இயந்திரத்தில் உடற்பயிற்சி செய்யும் 12 பேரை தேர்ந்தெடுத்தனர்.

உடற்பயிற்சிக்கு முன்பு அவர்களுக்கு சாப்பாடு எதுவும் கொடுக்கவில்லை. வெறும் வயிற்றில் உடற்பயிற்சி செய்ய வைத்தனர். அதன் பின்னர் சாப்பாடு வழங்கினர். அவ்வாறு தொடர்ந்து உடற்பயிற்சி செய்தவர்களிடம் உடல் பரிசோதனை நடத்தப்பட்டது. அப்போது அவர்களின் உடலில் முன்பு இருந்ததை விட 20 சதவீதம் கொழுப்புச் சத்து குறைந்து இருந்தது. ஏனெனில் காலை சாப்பாட்டுக்கு முன்பே உடற்பயிற்சி செய்வ தன் மூலம் உடலில் சக்தி பெருகி தேவையற்ற கொழுப்பு எரிக்கப்படு வதாக ஆய்வு நிபுணர்கள், டாக்டர் எம்மா ஸ்டீபன் ஜாவியர் கான்ஷ லேஷ் ஆகியோர் தெரிவித்துள்ளனர். (செ-2)

# மொரட்டுவ பல்கலைக்கழக மோதல்; பத்து இலட்சம் ரூபா வரை சேதம்

(கொழும்பு)

மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் அண்மையில் இடம்பெற்ற மோதலின் போது உடைமைகளுக்கு சுமார் பத்து இலட்சம் ரூபா சேதம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் தொகையை மோதலுடன் தொடர்புடைய மாணவர்களிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் ஆனந்த ஜயவர்தன குறிப்பிட்டுள்ளார்.

தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா கற்கைகள் பிரிவின் மாணவர்களுடன் வந்ததாகக் கூறப்படும் குழுவினர் கடந்த 16 ஆம் திகதி இரவு மொரட்டுவ பொறியியல் பீட மாணவர் விடுதிக்குள் நுழைந்து அங்கிருந்த மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியிருந்தனர்.

இந்த சம்பவத்தை அடுத்து தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா கற்கைகள் பிரிவு மற்றும் மொரட்டுவ பல்கலைக்கழக பொறியியல் பீடம் ஆகியன தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட மோதல் சம்பவம் தொடர்பாக சில மாணவர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதுடன் விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (செ-2)




* 1547 - எட்டாம் ஹென்றியின் இறப்பு. அவனது 9 வயது மகன் ஆறாம் எட்வர்ட் இங்கிலாந்தின் மன்னன் ஆனான்.
* 1624 - கரிபியனில் முதலாவது பிரித்தானியக் குடியேற்ற நாடான சென் கிட்ஸ்சர் தோமஸ் வார்னர் என்பவரால் அமைக்கப்பட்டது.
* 1679 - சென்னை கோட்டைப் பகுதியில் சிறு நிலநடுக்கம் உணரப்பட்டது.
* 1820 - ஃபாபியன் பெலிங்ஷோசென் தலைமையில் ரஷ்யா நாடுகாண் பயணக்குழு அண்டார்ட்டிக் காவை அடைந்தது.
* 1846 - அலிவால் என்ற இடத்தில் சீக்கியர்களுடன் இடம்பெற்ற போரில் சர் ஹரிஸ்மித் தலைமையிலான பிரித்தானியப் படைகள் வெற்றி பெற்றன.
* 1882 - சென்னையில் முதன்முதலாக தொலைபேசி அறிமுகப்படுத்தப்பட்டது.
* 1909 - ஐக்கிய அமெரிக்கப் படைகள் குவாண்டானாமோ விரிகுடாவைத் தவிர்த்து கியூபாவின் ஏனைய பகுதிகளில் இருந்து விலகின.
* 1918 - பின்லாந்தின் தலைநகர் ஹெல்சிங்கியை புரட்சியாளர்கள் கைப்பற்றினர்.
* 1932 - ஜப்பானியப் படைகள் ஷங்காய் நகரைத் தாக்கின.
* 1935 - ஐஸ்லாந்து கருக்கலைப்பைச் சட்டபூர்வமாக்கிய முதல் நாடானது.
* 1986 - சாலஞ்சர் மீள்விண்கலம் புறப்பட்ட 73 ஆவது விநாடியில் வானில் வெடித்துச் சிதறியதில் ஏழு விண்வெளி வீரர்கள் பலியாகினர்.
* 1987- மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை கிராமத்தில் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
* 2002 - கொலம்பியாவில் போயிங் விமானம் ஒன்று அண்டெஸ் மலையில் மோதியதில் 92 பேர் உயிரிழந்தனர்.

**பிறப்புகள்**

* 1853 - ஹொசே மார்த்தி, கியூபாவின் புரட்சியாளர் (இ.1895)
* 1922 - ரொபேர்ட் ஹோலி, நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ. 1993)
* 1925 - ராஜா ராமண்ணா, இந்திய அணுவியல் நிபுணர் (இ.2004)

**இறப்புகள்**

* 1939 - வில்லியம் யீட்ஸ், நோபல் பரிசு பெற்ற ஐரிஸ் எழுத்தாளர் (பி.1865)
* 1996 - ஜோசப் புரொட்ஸ்கி, நோபல் பரிசு பெற்ற ரஷ்யக் கவிஞர் (பி.1940)
* 2007 - ஓ.பி.நாயர், கிந்தித் திரைப்பட இசையமைப்பாளர்

**சிறப்பு நாள்**

உலக தொழுநோய் தினம்

**ராஜா ராமண்ணா**

ராஜா ராமண்ணா இந்திய அணு ஆற்றல் துறைக்கும் அதன் வளர்ச்சிக்கும் முக்கிய பங்காற்றிய அணுக்கரு அறிவியலாளர் ஆவார்.

இவர் இந்தியாவின் கர்நாடக மாநிலத்தின் தும்கூரில் 1925 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ஆம் திகதி பிறந்தார். இவரது தந்தையார் பெயர் பி.ராமண்ணா. தாயார் பெயர் ருக்மணியம்மா. இவரது தந்தை நீதியரசராக பணியாற்றியவர்.

ராமண்ணா கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே இந்திய அணுவியலறிஞர் ஹோமி ஜஹாங்கீர் பாபா மீது மதிப்புக் கொண்டிருந்தார். பின்னர் இவர் லண்டன் அரசக் கல்லூரியில் பயின்று அணு தொடர்பான கற்றலில் 1948 ஆம் ஆண்டு முனைவர் பட்டம் பெற்றார்.

இதன்போது இவர் இயற்பியல் சம்பந்தமான பல பட்டங்களைப் பெற்றார். இவர் தொடர்ந்து ஹோமி ஜஹாங்கீர்குடன் இணைந்து அணுக்கரு பற்றி ஆராய்ச்சிகளை மேற்கொண்டார். பின்னர் 1967 களில் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் பட்டதாரி மாணவர்களுக்கு உதவி ஆசிரியராகவும் பின்னர் ஆசிரியராகவும் பணியாற்றினார். அதனைத் தொடர்ந்து 1972 ஆம் ஆண்டுகளில் இந்திய தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் தலைவராகவும் 1977 களில் இந்திய தேசிய அறிவியல் கழகத்தின் தலைவராகவும் பல பதவிகள் வகித்து பணியாற்றினார்.

மும்பை பாபா அணுசக்தி ஆய்வு மையத்தின் இயக்குநராக 10 ஆண்டுகள் காலம் பணியாற்றிய போது சிரிக்கும் புத்தர் என்னும் முதல் அணுகுண்டு இரகசிய அணு ஆயுத திட்டம் அவரது நேரடிக் கண்காணிப்பில் உருவானது. இதே வேளை நிலத்தடிக்குண்டு வெடிப்பினையும் அப்போது இந்தியா நிகழ்த்தி உலக நாடுகளை பேரதிர்ச்சியில் ஆழ்த்தியது. பின்னர் இந்திய அணுசக்தி பேரவைக்கு ஜனாதிபதியாக 1983 இல் டாக்டர் ராஜா ராமண்ணா தேர்ந்தெடுக்கப்பட்டார்.


இவர் 1963 இல் சாந்தி ஸ்வரூப பட்டனாகர் விருது, 1968 இல் பத்மஸ்ரீ விருது, 1973 இல் பத்ம விபூஷன் விருது உள்ளிட்ட பல கௌரவ விருதுகளை பெற்றார்.

தனது வாழ்நாளில் இசையில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்ததுடன் விஞ்ஞானம், இசையமைப்பு போன்ற பல நூல்களை எழுதியிருந்தார். இவர் 2004 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 24 ஆம் திகதி மும்பையில் மாரடைப்பு காரணமாக மரணத்தைத் தழுவிக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி.மு.கவினரின் திருமண வைபவத்திற்கு விஜயகாந்திற்கு முறைப்படி அழைப்பு

## கப்டனும் கருணாநிதியும் சந்திப்பார்களா?



தி.மு.கவின் தலைவர் கருணாநிதி தலைமையில் திருச்சியில் நடக்கும் அக்கட்சி உறுப்பினரின் மகள் திருமணத்திற்கான அழைப்பிதழ் தே.மு.தி.க.தலைவர் விஜயகாந்திடம் நேரில் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்த விழாவில் கருணாநிதி–விஜயகாந்த் சந்திப்பு நடக்குமா என்ற பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

தே.மு.தி.கவை ஆரம்பிப்பதற்கு முன் 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி தி.மு.க. தலைவர் கருணாநிதியை விஜயகாந்த் சந்தித்து பேசினார். கட்சி ஆரம்பித்த பின்னர் 2006 ஆம் ஆண்டு சட்டசபை தேர்தலில் தனித்து போட்டியிட்ட விஜயகாந்த் விருத்தாசலம் தொகுதியில் வெற்றிபெற்று சட்டமன்ற உறுப்பினர் ஆனார்.

அந்த தேர்தலில் தி.மு.கவுக்கு எதிராக விஜயகாந்த் தீவிர பிரசாரம் செய்தாலும் அக்கட்சியே ஆட்சியை கைப்பற்றியது. அதே ஆண்டு டிசெம்பர் மாதம் 14 ஆம் திகதி அப்போதைய முதல்வராக இருந்த தி.மு.க. தலைவர் கருணாநிதியை விஜயகாந்த் சந்தித்து பேசினார். இந்தச் சந்திப்பு தொகுதி பிரச்சினை தொடர்பாக நடந்ததாக விஜயகாந்த் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், கோயம்பேட்டில் உள்ள தனது திருமண மண்டபத்தை இடிக்காமல் மாற்று வழியில் மேம்பால திட்டத்தை செயற்படுத்துவதற்காக கருணாநிதியை அவர் சந்தித்ததாகதி.மு.க. தரப்பில் தகவல் வெளியானது.

இதனால் தி.மு.க.தலைமை மீது விஜயகாந்த் அதிருப்தி அடைந்தார். இதன் தொடர்ச்சியாக திருமண மண்டபம் இடிப்பு, விஜயகாந்த் வீட்டில் வருமான வரி சோதனை ஆகிய சம்பவங்கள் அரங்கேறின.

தி.மு.க.ஆட்சிக்கும் அமைச்சர்களுக்கும் எதிராக விஜயகாந்த் பல்வேறு குற்றச்சாட்டுகளை எழுப்பினார். அந்த சந்திப்பிற்கு பின் கருணாநிதியை விஜயகாந்த் சந்திக்கவில்லை.

சட்டசபை தேர்தலில் அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைத்து உள்ளாட்சி தேர்தலில் கழற்றி விடப்பட்ட தே.மு.தி.கவினர் தற்போது சூடுபட்ட பூனையாக உள்ளனர். விஜயகாந்த் மீது அரசு சார்பில் அவதூறு வழக்குகள் தொடரப்பட்டு வருகின்றன.

இந்த காயத்திற்கு மருந்து போட வரும் லோக்சபா தேர்தலில் தி.மு.கவுடன் கூட்டணி அமைக்க தே.மு.தி.க.திட்டமிட்டுள்ளது. இது குறித்து இரகசிய பேச்சுவார்த்தைகள் நடந்து வருகின்றன.

இரு நாட்களுக்கு முன் நடந்த தே.மு.தி.க. பொதுக்குழுக் கூட்டத்தில் பேசிய விஜயகாந்த் அ.தி.மு.கவையும் மத்திய அரசையும் கடுமையாக விமர்சித்த போதும் தி.மு.கவை விமர்சிக்காமல் அடக்கி வாசித்தார்.

கடந்த ஆட்சியில் கசப்புணர்வுடன் செயற்பட்ட மத்திய அமைச்சர் அழகிரி, தி.மு.க.பொருளாளர் ஸ்டாலின் ஆகியோர் விஜயகாந்துடன் விமான நிலையங்களில் எதேச்சையாக சந்தித்து பேசியுள்ளனர்.

இந்நிலையில் அடுத்த மாதம் 7 ஆம் திகதி திருச்சி தேசிய கல்லூரி மைதானத்தில் தி.மு.க.கட்சியைச் சேர்ந்த சிவாவின் மகள் திருமணம் நடக்கவுள்ளது.தி.மு.க.தலைவர் கருணாநிதி தலைமை ஏற்கும் இவ்விழாவில் அழகிரி, ஸ்டாலின் உள்ளிட்டவர்களும் பங்கேற்கின்றனர்.

இந்த திருமணத்திற்கான அழைப்பிதழை தே.மு.தி.க.தலைவர் விஜயகாந்திடம் சிவா நேரில் வழங்கியுள்ளார்.

அதேநாளில் அரசு தொடர்ந்த அவதூறு வழக்கில் ஆஜராக வேண்டும் என திண்டுக்கல் நீதிமன்று விஜயகாந்திற்கு உத்தரவிட்டுள் ளது. திண்டுக்கல் செல்லும் விஜயகாந்த் திருச்சி சென்று திருமணத் தில் பங்கேற்று கருணாநிதியை சந்தித்து திருப் புமுனையை ஏற்படுத் துவாரா என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

தி.மு.க.எம்.பி.இல்ல திருமணத்தில் பங்கேற்பது குறித்து கட்சியின் மூத்த நிர்வாகிகளுடன் விஜயகாந்த் ஆலோசனை நடத்தி வருகிறார். திருமண மேடையில் கருணாநிதி இருக்கும் போது பங்கேற்காமல் அவர் புறப்பட்டு சென்றபின் சென்று வாழ்த்து தெரிவிக்கலாம் என்ற யோசனை அவருக்கு தெரிவிக்கப் பட்டுள்ளது.இதன் மூலம் இரு கட்சியினரிடையே இணக்கத்திற்கான பிள்ளையார் சுழி போடப்படும் என்கிறது தே.மு.தி.மு. வட்டாரம். (செ–5)

## 25 இலட்சம் கோடி ரூபா கறுப்புப்பணம் வெளிநாடுகளில் பதுக்கி வைப்பு!

வெளிநாடுகள் இந்தியர்கள் ரூபா 25 இலட்சம் கோடி கறுப்புப் பணத்தைப் பதுக்கி வைத்திருப்பதாக புதிய கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

மத்திய அரசின் கோரிக்கையை ஏற்று சில அமைப்புக்கள் நடத்திய ஆய்வில் இந்த விபரம் தெரியவந்துள்ளது.இந்த அமைப்புக்கள் கடந்த மாதமே தங்களது அறிக்கையை மத்திய நிதியமைச்சகத்திடம் வழங்கி விட்டன. இப்போது இந்தப் பணத்தை இந்தியாவுக்குக்கொண்டு வருவது குறித்தும் இதற்கு 30 சதவீத வருமான வரி (சுமார் ரூபா. 8.5 இலட்சம் கோடி) விதிப்பது குறித்தும் மத்திய நிதியமைச்சகம் திட்டங்களை வகுத்து வருகிறது.இது தொடர்பான அறிவிப்புக்களை விரைவில் மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் அறிவிப்பார் என்று தெரிகிறது.

25 இலட்சம்கோடி ரூபா என்பது இந்தியாவின் ஒட்டுமொத்த உற்பத்தியில் 30 சதவீதமாகும். இந்தியாவின் மாபெரும் பணக்காரர்கள் வெளிநாட்டு வங்கிகளில் முதலீடு செய்துள்ள இந்த 25 இலட்சம் கோடி ரூபா வரி கட்டாமல் அரசை ஏமாற்றி சட்டவிரோதமாகக் கொண்டு சென்ற பணமாகும்.

இந்த 25 இலட்சம் கோடி ரூபா கறுப்புப் பணத்தில் ஊழல் இலஞ்சப் பணமும் அடக்கம்.கேமன் தீவுகள், மொரீசியஸ் உள்ளிட்ட பல வரி ஏய்ப்புக்கு உதவும் நாடுகள் மூலமாக இந்தப்பணம் உலகின் பல்வேறு வங்கிகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. (செ–2)

## இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்கு மீண்டும் பேருந்து போக்குவரத்து!

### பதற்றத்தின் பின் இன்று பயணம்

(சென்னை)

இந்தியாவில் இருந்து பாகிஸ்தானுக்கு இன்று முதல் மீண்டும் பேருந்து போக்குவரத்தும் வர்த்தகமும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரியவருகிறது.

கடந்த 8 ஆம் திகதி காஷ்மீர் மாநிலத்தில் இந்திய எல்லையில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு இருந்த 2 இந்திய வீரர்களை பாகிஸ்தான் இராணுவம் தலை துண்டித்து கொலை செய்தது. இதனால் எல்லையில் பதற்றம் ஏற்பட்டு இரு நாட்டு வீரர்களும் துப்பாக்கி மோதலில் ஈடுபட்டனர்.

இதைத் தொடர்ந்து இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான பேருந்து போக்குவரத்தையும் வர்த்தகத்தையும் மத்திய அரசு தடை செய்தது. இதனால் இரு நாட்டு எல்லைப் பகுதியில் வசிக்கும் மக்கள் அவதிப்பட்டனர்.

தற்போது எல்லையில் அமைதி நிலவுகிறது. கடந்த 10 நாட்களாக எந்த துப்பாக்கி மோதலும் நடைபெறவில்லை. இதைத் தொடர்ந்து பாகிஸ்தானுக்கு மீண்டும் பேருந்து போக்குவரத்தையும் வர்த்தகத்தையும் ஆரம்பிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இன்று முதல் கட்டமாக காஷ்மீர் மாநிலம் பூஞ்ச் எல்லை வழியாக பாகிஸ்தான் கட்டுப்பாட்டு காஷ்மீருக்கு பேருந்து அனுமதிக்கப்படுகிறது. பாகிஸ்தானில் இருந்து காஷ்மீர் வந்த 100 பயணிகள் திடீர் என்று பேருந்து போக்குவரத்து நிறுத்தப்பட்டதால் காஷ்மீரில் தவிக்கிறார்கள். அவர்கள் இன்று செல்லும் பேருந்தில் அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

இதேவேளை எல்லைப்பகுதியில் நடைபெற்று வந்த வர்த்தகமும் இன்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படுகிறது. இந்நிலையில் நேற்று முன்தினம் குடியரசு தினத்தையொட்டி காஷ்மீர் மாநிலம் பூஞ்ச் எல்லையில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ள எல் லைப்பாதுகாப்பு படைவீரர்கள் பாகிஸ்தான் வீரர்களுக்கு இனிப்பு வழங் கினார்கள். பதிலுக்கு பாகிஸ்தான் வீரர்களும் இந்திய வீரர்களுக்கு இனிப்பு வழங்கியுள்ளனர்.

இருநாட்டு இராணுவ அதிகாரிகளிடையேயான வழக்கமான கொடி அணி வகுப்பு கூட்டமும் பூஞ்ச் பகுதியில் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (செ–5)

## பாரதச் செய்தி

## அணுவுலையின் கசிவு சரி செய்யப்பட்டு விட்டது

### நாராயணசாமி தெரிவிப்பு

கூடங்குளம் அணுஉலையில் கசிவு இருந்தது உண்மைதான். ஆனால் அது தற்போது சீர்செய் யப்பட்டு விட்டது என்று மத்திய அமைச்சர் நாராயணசாமி கூறியுள்ளார்.


செய்தியாளர்களிடம் நேற்றைய தினம் பேசிய அவர்,

கூடங்குளம் அணுவுலையில் எப்போது உற்பத்தி ஆரம்பமாகும் என்று செய்தியாளர்கள் கேட்டனர். அதற்குப் பதிலளித்த நாராயணசாமி, கூடங்குளம் அணுவுலையில் 99.8 வீதம் பணிகள் நிறைவ டைந்து விட்டது. கடந்த ஜனவரி 15ஆம் திகதியே அணுவுலையைத் திறக்க நடவடிக்கை எடுத்தோம். ஆனால் இடையில் அணுசக்தி ஒழுங்குமுறை ஆணையத்தின் சோதனை தள்ளிப்போனது. இதனால் தாமதம் ஏற்பட்டது. இதுகுறித்து அணுசக்தி ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியுள்ளேன். விரைவில் பதில் கிடைத்தவுடன் பணிகள் தொடங்கப்பட்டுவிடும் என்று கூறினார்.

இந்நிலையில் உதயகுமார் உள்ளிட்டோர் அணுவுலையில் கசிவு இருந்ததாக பிரசாரம் செய்துவருவது பற்றி நாராயணசாமியிடம் செய்தியாளர்கள் வினவினர். அதற்கு அவர் அணுவுலையில் இலேசான கசிவு இருந்தது உண்மைதான். அது வெப்பநீரைக் கடத்திக்கொண்டு செல்லும் அமைப்பில் இலேசாக இருந்தது. அது உடனே கண்டறியப்பட்டு சீர் செய்யப்பட்டுவிட்டது. மத்திய அரசுக்கு அணுவுலை மூலம் மின்சாரம் தயாரிப்பது எவ்வளவு முக்கியமோ அதைவிட முக்கியமானது அணுவுலைப்பாதுகாப்பு. எனவே பாதுகாப்பில் முழுக்கவனம் செலுத்தப்படும் என்றார். (செ–2)







டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற குடியரசு தின விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட பூடான் மன்னர் வாஞ்சுக்கு பிரதமர் மன்மோகன் சிங் கைலாகு வழங்கி வரவேற்பதையும் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி இராணுவ வீரர்களை சந்தித்து கலந்துரையாடுவதையும் இராணுவ வீரர்களின் சேவைக்கு மரியாதை வழங்கும் வகையில் வீரர்களுக்கு வீர வணக்கம் என்ற தலைப்பில் சென்னை பெசன்ட் நகர் கடற்கரையில் கல்லூரி மாணவ மாணவியர்கள் உருவாக்கி படை வீரர்களின் தொப்பிகள் போல வடிவமைத்த மணல் சிற்பத்தையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ், சிங்களம் கலந்து புதிய தேசிய கீதம்

## ஜனாதிபதியிடம் கையளிப்பு

இலங்கையின் தேசிய நிகழ்வுகளில் இசைப்பதற்காக மீண்டும் எழுதப்பட்ட சிங்கள, தமிழ் வசனங்களுடனான தேசிய கீதத்தை தேசிய நல்லிணக்க அமைச்சு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைத்துள்ளது.

இந்த புதிய தேசிய கீதம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி திருகோணமலையில் நடைபெறவுள்ள தேசிய சுதந்திரதின நிகழ்வில் இசைக்கப்படவுள்ளதாக தெரிய வருகிறது.

தேசிய நல்லிணக்க அமைச்சின் நாடாளுமன்ற ஆலோசனைக்குழு இந்த தேசிய கீதத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கும் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவுக்கும் கையளித்துள்ளது.

இந்த நிலையில் இலங்கையில் இரு மொழிகளிலும் இணைந்த தேசியகீதம் ஒன்றை அறிமுகப்படுத்த தமது அமைச்சு நடவடிக்கை எடுத்துவருவதாக நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-2)

# ஆசிரிய ஆலோசகர்களுக்கான பதவி விண்ணப்பங்கள் கோரல்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்கான சேவைக் கால ஆசிரிய ஆலோசகர் பதவிக்குரிய 9 வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. எதிர்வரும் 31 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன் துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை பெற்று தகுதியான ஆசிரியர்களை விண்ணப்பிக்குமாறு துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இப்பதவிக்கு தமிழ், கணிதம், ஆங்கிலம், சமூகக்கல்வி, வர்த்தகம், சித்திரம், விவசாயம், ஆரம்பக் கல்வி பாடநெறிக்கு 2 வெற் றிடங்களுமாக மொத்தம் 9 வெற்றிடங்கள் உள்ளன.

இலங்கை ஆசிரியர் சேவை தரம் 2- I உள்ளவர்கள் பாட ரீதியாக பயிற்றப்பட்டவர்களாகவோ அல்லது பட்டதாரி ஆசிரியர்களாகவோ இருத்தல் வேண்டும். மேற்படி ஆசிரியர் தரத்திற்கு உரியவர்கள் விண்ணப்பிக்காதவிடத்து இலங்கை ஆசிரியர் சேவை தரம் 2- II உள்ளவர்களது விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

விண்ணப்பதாரிகள் துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ளவர்களும் ஏனைய கல்வி வலயத்தில் உள்ள ஆசிரியர்களும் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 31 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் வலயக் கல்வி பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், துணுக்காய் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ ஒப்படைக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-3-15)

# குமாரசாமிபுரம் கிராமத்தில் சட்டவிரோத மது உற்பத்தி!

## விரைந்து தடுக்க பிரதேச மக்கள் கோரிக்கை

(ஆனையிறவு)

கண்டாவளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட குமாரசாமிபுரம் கிராமத்தில் சட்டவிரோத மது உற்பத்தி இடம்பெற்று வருவதாகவும் இதனால் சட்டவிரோத மதுபாவனையாளர்களின் அடாவடித்தனங்கள் அப்பிரதேசங்களில் மலிந்துள்ளதாக பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறித்த கிராமத்தில் இவ்வாறான சட்டவிரோத மது உற்பத்தி நாளாந்தம் அதிகரித்து வருகின்றது. இதேவேளை, இச் சட்டவிரோத மது உற்பத்தி வீதியோரப் பகுதிகளில் பகிரங்கமாக மேற்கொள்ளப்படுகிறது. இந்நிலையில் இது குறித்து பொலிஸாரின் நடவடிக்கை மந்தமாக காணப்படுவதாகவும் இந்நிலைமை தமக்கு சந்தேகம் ஊட்டுவதாக அமைவதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி சட்டவிரோத மது உற்பத்தி செய்யும் வீதியால் பயணிக்க முடியாத நிலைமை காணப்படுவதாகவும் அயல் கிராமத்தில் இருந்து வந்து பலர் இப்பகுதியில் சட்டவிரோத மது பாவனையில் ஈடுபடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இப்பகுதிகளில் இச் சட்டவிரோத மதுபாவனையாளர்களால் பல மோதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதோடு இவ்வீதி வழியாக பெண்கள், சிறுவர்கள் பயணம் செய்ய அச்சப்படும் நிலைமை உருவாகியுள்ளது.

வெளிப்படையாக சட்டவிரோத செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும் என கூறும் அதிகாரிகள், பொலிஸார் பகிரங்கமாக அதிகரித்து வரும் இச்சட்டவிரோத மது உற்பத்தியை நிறுத்தவோ சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை கைது செய்யவோ நடவடிக்கை எடுக்காதது ஏன் என பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள், கண்டாவளை பிரதேச செயலகத்தினர், பொலிஸார் ஆகியோர் இது குறித்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இதற்கு தாம் முழு ஆதரவு தருவதாகவும் எனவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். (செ-5-264)

# வாக்குச்சீட்டு கண்டுபிடிப்பு; தேர்தல் திணைக்களம் விசாரணை

கடந்த 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது பயன்படுத்தப்பட்ட சுமார் 300 வாக்குச் சீட்டுக்கள் நிட்டம்புவ பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பில் விசாரணை நடத்தவுள்ளதாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நிட்டம்பவ கலகெடிஹேன பகுதியில் உள்ள பாடசாலையொன்றிலிருந்தே மேற்படி வாக்குச்சீட்டுக்கள் கடந்த வாரம் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்விடயம் தொடர்பில் தமக்கு அறியக்கிடைத்துள்ளதாக மேலதிக தேர்தல் ஆணையாளர் யு.அமரதாச தெரிவித்துள்ளார்.

மேற்படி வாக்குச்சீட்டுக்கள் 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் நுவரெலிய மாவட்டத்தில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் அச் சீட்டுக்களில் அன்னம் சின்னத்துக்கு புள்ளடியிடப்பட்டுள்ளன. இச் சின்னத்திலேயே சரத் பொன்சேகா போட்டியிட்டிருந்தார்.

பொது எதிர்க்கட்சிகளின் சார்பில் போட்டியிட்ட சரத் பொன்சேகாவிற்கு ஆதரவாக வாக்களிக்கப்பட்டிருந்த சீட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமையானது ஜனாதிபதித் தேர்தலின் நம்பகத் தன்மை தொடர்பில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர். (செ-2)


யாழ்., வன்னி மாவட்ட மக்களுக்கு ஓர் எச்சரிக்கை!

- எமது தயாரிப்பான 'சிதாரா' பொன்னாங்காணித் தைலம் போன்று வடிவமைக்கப்பட்ட போலியான தைலம் சந்தையில் விற்கப்பட்டு வருகின்றது எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இப்போலியான தைலத்தினைப் பயன்படுத்திய பலர் கடுமையான தலைவலி- முடி உதிர்வு-நரை என்பவற்றால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- எனவே நாம் மக்களைக் காப்பாற்றும் பொருட்டு - அவர்கள் போலியான பொன்னாங்காணித் தைலத்தினைக் கண்டு பிடிக்க கீழே இரண்டு வழிமுறைகளைத் தருகின்றோம்.

1. ஒறிஜினல் சிதாரா பொன்னாங்காணித் தைலத்தில் மட்டுமே சிதாரா டிஸ்பென்சரி என ஆங்கிலத்தில் எழுதப்பட்ட வைத்திய முத்திரை பொறிக்கப்பட்டிருக்கும். அவ்வாறு வைத்திய முத்திரை பொறிக்கப்படாத பிளேன் (Plain) மூடிகளை உடைய தைலம் போலியானது.



ஒறிஜினல் சிதாரா பொன்னாங்காணி தைலத்தின் மூடி


போலி சிதாரா வைத்திய முத்திரை பொறிக்கப்படாத பிளேன் (Plain) மூடி - போலியான தைலம்

2. மற்றைய வழி: ஒறிஜினல் சிதாரா பொன்னாங்காணி தைலத்தின் பெட்டியில் சிதாரா பொன்னாங்காணித் தைலம் என குறிப்பிடப்பட்டுள்ள பளபளப்பான சதுர வடிவ ான அருகே காட்டப்பட்டுள்ள ஸ்ரிக்கர் 'ஒட்டப்பட்டிருக்கும். எனவே மக்களே! இனியும் போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள். போலியான தைலங்கள் உங்கள் ஆரோக்கியத்திற்குக் கேடு விளைவிக்கும் என்பதை மறந்துவிடாதீர்கள்.




சிதாரா பொன்னாங்காணித் தைலம் விற்பனை செய்யும் விற்பனையாளர்களின் கவனத்திற்கு!

- அன்பார்ந்த விற்பனையாளர்களே! நீங்கள் சிதாரா பொன்னாங்காணித் தைலத்தினை வாங்கும்போது தயவு செய்து மூடியில் சிதார வைத்திய முத்திரை பொறிக்கப்பட்டுள்ளதா எனவும், பெட்டியின் மேலே இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பளபளப்பான "சிதாரா பொன்னாங்காணித் தைலம் ஒறிஜினல்" என அச்சிடப்பட்ட சதுர வடிவான ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டுள்ளதா எனவும் பார்த்து வாங்கவும்.
- போலியான தைலங்களை நீங்கள் விற்பதனால் மக்களின் ஆரோக்கியம் பாதிக்கப்படும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.
- நீங்கள் சிதாரா பொன்னாங்காணித் தைலத்தினை வாங்கும்போது எமது சிதாரா தயாரிப்புகளின் கடந்த ஒரு தசாப்தகால வடமாகாண ஏக விநியோகஸ்தரான 'சிவா நறுமணப்பூங்கா' இல.288, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம். தொ.பே. 021222 2567 நிறுவனத்தில் மட்டுமே கொள்வனவு செய்யுமாறு வேண்டுகின்றோம்.

குறிப்பு: மக்களே! போலித் தைலத்தினைப் பாவித்து அதனால் நீங்கள் எதிர்நோக்கும் பாரதூரமான விளைவுகளுக்கு நாம் பொறுப்பல்ல என அறியத்தருகின்றோம்.

கார்குழல் வளர்ச்சியில் கவரிமான் கூந்தலின் கருமைக்கும் பெருமைக்கும் என்றும் பாவியுங்கள் ஒறிஜினல் சிதாரா பொன்னாங்காணித் தைலம்

(சி/2258)




Manufactured by:
SITHARA AYURVEDIC PHARMACY
Puttalam Road, Chilaw, Srilanka.Tel: 94032 222 2773 (Reg Number 6382) AR/ PR No.228


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி விபத்துக்களை கட்டுப்படுத்த சாரதிப் பயிற்சியை சரிவர வழங்குங்கள்

## மோட்டார் போக்குவரத்து திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

வாகன ஓட்டுநர்களுக்கு பொறுப்புள்ள விதத்தில், சரியான முறையில் பயிற்சியளிக்கப்படுமாயின் நடைபெறும் பெரும்பாலான விபத்துக்களை தவிர்க்க முடியும் என மோட்டார் போக்குவரத்து திணைக்கள உதவிப் பணிப்பாளர் எவ்.ஏ.பிரேமரட்ணம் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட சாரதி பயிற்சி பாடசாலை இயக்குநர்கள், பணியாளர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சிப் பட்டறையில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்த இரு நாட்களாக நடைபெற்ற இப்பயிற்சிப் பட்டறையில் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த 130 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இக் கலந்துரையாடல் தொடர்பில் மேலும் அவர் கருத்து வெளியிடுகையில்,

இலங்கையில் 48 இலட்சம் வாகனங்கள் பதியப்பட்டுள்ளன. தற்போது 35 இலட்சம் வாகனங்கள் பாவனையில் உள்ளன. இந்நிலையில் சாரதிகளுக்கான பயிற்சியின் போது வாகனம் ஓட்டுவதற்கு மட்டுமல்லாது வேகக் கட்டுப்பாட்டுடன் வாகனங்களை செலுத்துவதற்கு சாரதிகள் பழக்கப்படுத்தப்பட வேண்டும்.

இதேவேளை, ஒழுங்கு விதிகள், பொறுப்பான முறையில் வாகனம் ஓட்டுதல் போன்றவற்றையும் சாரதிகளுக்கு பயிற்றுவித்தல் வேண்டும்.

சாரதிகளுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் போது வாகனம் ஓட்டுவது மட்டுமல்லாது இயந்திர செயற்பாடுகள், அவை தொடர்பான பூரண அறிவு என்பனவும் சாரதிகள் தெரிந்து வைத்திருத்தல் மூலம் பல்வேறுபட்ட இடர்பாடுகளுக்கு முகக்கொடுக்க கூடிய நிலை காணப்படுவதுடன் பெருமளவில் விபத்துக்களை தவிர்ப்பதற்கு இவ்வாறான மேலதிக தெளிவுகள் மிக முக்கியமானதாகும்.

கடந்த வருடத்தில் நாடு முழுவதிலும் வீதி விபத்துக்களினால் 35 ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர். இது மிகவும் அதிகமான எண்ணிக்கையாகும். சாரதிகள் வாகனம் ஓட்டும் போது மனித நேயத்துடன் நடந்து கொள்வது மிக அவசியமானதாகும்.

இந்நிலை காணப்படின் மிகுந்த வேகக் கட்டுப்பாட்டுடன் வாகனங்களை செலுத்தி விபத்தினால் ஏற்படும் இழப்புக்களை தவிர்க்க கூடியதாக இருக்கும். மேலும் கடந்த இரு வருடங்களில் யாழ்ப்பாணத்தில் 19 ஆயிரம் வாகன சாரதிகளுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளன. இவ் வருடம் 21 ஆயிரம் சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனவே, இந்நிலைமைகளில் வாகனம் ஓட்டுபவர்கள் மிகுந்த பயிற்சிகளை பெற்று சரியான முறையில் சாரதி பயிற்சி பெறுவதன் மூலம் விபத்துக்கள் நடைபெறுவதனை குறைக்கலாம் என்ற நோக்கிலேயே சாரதிப் பயிற்சி பாடசாலை இயக்குநர்களுக்கான இப் பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டுள்ளது.

அனைவரது ஒத்துழைப்புக்கள் மூலம் வீதி ஒழுங்குகளை கடைப்பிடிப்பதுடன் வீதி விபத்துக்களை குறைக்கலாம் என்று மேலும் தெரிவித்தார். (செ-5-6)

## பொ.ந.வா.செயலாளர் கமலேஸ்சர்மா இலங்கை வருகை


(கொழும்பு)

பொதுநலவாய மாநாடு குறித்து ஆராய எதிர்வரும் 10 ஆம் திகதி பொதுநலவாய நாடுகளின் செயலாளர் நாயகம் கமலேஸ்சர்மா இலங்கை வரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வருடம் இறுதியில் இலங்கையில் இடம்பெறவுள்ள பொதுநலவாய மாநாடு குறித்த ஏற்பாடுகளை ஆராயும் நோக்கிலேயே அவர் இந்த விஜயத்தை மேற்கொள்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இங்கு வருகை தரும் அவர், இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸை சந்தித்து உரையாடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் கனடா கலந்து கொள்ளப் போவதில்லை என அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-5)



கிளிநொச்சியில் மீள்குடியேறிய மக்களுக்கான 10 மில்லியன் ரூபா காசோலை வழங்கும் நிகழ்வு அண்மையில் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி, கிளிநொச்சி பாதுகாப்புப் படையின் கட்டளை அதிகாரியிடம் காசோலையை வழங்குவதையும் அருகில் வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ர.விஜயலட்சுமி, ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் மற்றும் மாகாண உள்ளூராட்சி அமைச் சின் செயலாளர் எஸ்.வரதீஸ்வரன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம் : என்.குமார்)

# நான்கு தமிழர்கள் மீதான மனித கடத்தல் குற்றச்சாட்டு இரத்து

## கனேடிய நீதிபதி தீர்ப்பு

ஓசியன் லேடி கப்பல் மூலம் கனடாவுக்கு வந்தவர்களை அழைத்து வந்ததாக கூறப்பட்டு ஆட்கடத்தல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட நால்வர் மீதான குற்றச்சாட்டை கனேடிய பிரிட்டிஷ் கொலம்பியா நீதிபதி இரத்துச் செய்துள்ளார்.

கனேடிய மனித கடத்தல் சட்டத்தின் கீழ் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. கனேடிய மனித கடத்தல் சட்டத்தை நீதிபதி மீறியுள்ளார் என்று சட்டத்தரணிகள் வாதிட்ட இரண்டு வாரங்களிலேயே இந்தத் தீர்மானம் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் மற்றும் சம்பவங்களுக்கு மதிப்பளித்தல் என்ற விடயங்களை மையமாகக் கொண்டு இத் தீர்மானத்தை எடுத்ததாக நீதிபதி மன்றில் குறிப்பிட்டார்.

இந் நிலையில் இந்த விசாரணை புதிய ஒரு விசாரணையாகவும் விசாரணையை நடத்துபவர் மற்றும் ஒரு நீதிபதி என்று தாம் கருதுவதாக நீதிபதி சில்வர்மென் குறிப்பிட்டுள்ளார்.,

கமல்ராஜ் கந்தசாமி, பிரான்ஸிஸ், ஜெயசந்திரன் கனகராஜ், தேவராஜா ஆகிய மூவர் மீதே ஓசியன் லேடி கப்பல் மனித கடத்தல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தது. இவர்கள் தமது கப்பலில் 72 பேருடன் கனடாவுக்கு சென்றமை குறிப்பிடத்தக்கது. (செ-2)

# இணையத்தள பாவனை தொடர்பாக 2012 இல் ஆயிரத்து 150 முறைப்பாடுகள்

இணைய பாவனை மற்றும் அதனோடு இணைந்ததாக ஆயிரத்து 150 முறைப்பாடுகள் கடந்த வருடத்தில் கிடைக்கப் பெற்றுள்ளதாக இலங்கை கணனி பாதுகாப்பு அவசர அழைப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவற்றில் அதிகமான முறைப்பாடுகள் முகப்புத்தகம் தொடர்பானவை என அப்பிரிவு குறிப்பிட்டுள்ளது. இதேவேளை, இணையத்தளங்கள் குறித்த முறைப்பாடுகளும் கணிசமான அளவு கிடைக்கப் பெற்றுள்ளதாக இலங்கை கணனி பாதுகாப்பு அவசர அழைப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் இணையத்தளங்களுக்குள் அத்துமீறி தகவல்களை மாற்றியமைத்தல் குறித்த முறைப்பாடுகளும் இவற்றில் அடங்கும் என இலங்கை கணனி பாதுகாப்பு அவசர அழைப்புப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை தற்போது இலங்கை அரச இணையத்தளங்களை குறி வைத்து இணையத்தாக்குதல்கள் மூலம் இணையத்தளங்களை முடக்கும் செயற்பாடுகள் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (2-5)

# 200 இளைஞர், யுவதிகளுக்கு வாழ்வாதார பயிற்சிநெறி

(முல்லைத்தீவு)

AIDE-ET-ACTION நிறுவனத்தின் அனுசரணையுடன் ஒட்டுசுட்டான், கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள 200 இளைஞர், யுவதிகளுக்கு வாழ்வாதார பயிற்சிநெறி வழங்கப்படவுள்ளது.

இதில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 100 இளைஞர், யுவதிகளுக்கு கற்சிலைமடு அ.த.க.பாடசாலையில் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளது. கணனி, அழகுக்கலை கற்கைநெறி, மோட்டார் சைக்கிள் திருத்தல் கற்கைநெறி ஆகியனவும் ஆங்கிலம், சிங்களம் ஆகிய பாடங்களும் நடைபெறவுள்ளன.

அதே தினத்தன்று பிற்பகல் 3.30 மணிக்கு கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள 100 இளைஞர், யுவதிகளுக்கு தண்ணீரூற்று சீ.சீ.பாடசாலையில் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதில் தையல் பயிற்சிநெறி, மோட்டார் சைக்கிள் திருத்தும் பயிற்சிநெறி, கணனி கற்கைநெறி ஆகிய பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக முல்லை.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக முல்லை. மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் எல்.பி.ஆர்.மார்க், ஜனாதிபதியின் ஆலோசகரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரஜீவ விஜேசிங்க ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

தொழில்வாய்ப்பின்றி இருக்கும் இளைஞர், யுவதிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக வாழ்வாதாரப் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. பயிற்சிநெறிகளின் முடிவில் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழும் வழங்கப்படவுள்ளது. (செ-3-267)

# போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட இருவர் கைதாகினர்

ஜா எல பிரதேசத்தில் 28 இலட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருளுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே இந்நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது கைது செய்யப்பட்டவரிடமிருந்து 640 கிராம் போதைப்பொருள் மற்றும் போக்குவரத்திற்கு பயன்படுத்தப்பட்ட கார் என்பன பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பின்னர் குறித்த போதைப்பொருள் வியாபாரத்திற்கு துணைபோன பிறிதொரு நபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இருவரும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவில் தடுத்து வைத்து விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (2-5)

# பாலியல் குற்றம் புரியும் ஆசிரியர்களுக்கு சேவை நீக்கம்

## கல்வியமைச்சு

(கொழும்பு)

பாடசாலை ஆசிரியர்கள் மீதான பாலியல் குற்றச்சாட்டுக்கள் தொடர்ச்சியாக அதிகரித்து வருவதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. இவ்வாறு பாலியல் குற்றச்சாட்டுக்களில் ஈடுபடும் ஆசிரியர்கள் சேவையிலிருந்து இடைநிறுத்தப்படுவார்கள் என பிரதி கல்வியமைச்சர் விஜித விஜயமுனி சொய்சா தெரிவித்துள்ளார்.

சிறுவர் மீதான பாலியல் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் மகளிர் விவகார அமைச்சு மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை ஆகியவையுடன் இணைந்து கல்வியமைச்சு நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் ஒருவர் மீது பாலியல் குற்றம் தொடர்பான முறைப்பாடு மேற்கொள்ளப்படுமானால் அக்குற்றச்சாட்டு உண்மையானதா அல்லது பொய்யானதா என ஆராயும் முன்னர் அவர் சேவையிலிருந்து இடைநிறுத்தப்படுவார். அதன் பின்னரே அது தொடர்பில் விசாரணைகள் இடம்பெறும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்வது வெட்கப்படத்தக்கது அல்ல; தாழ்ந்து கிடப்பது தான் வெட்கப்படத்தக்கது.
-பீச்சர்

வலம்புரி
T.P: 021 567 1530
website : www.valampurii.lk


# அவசரமாக நடந்த நாய்களின் மாநாடு

மாநாட்டுக்கு தலைமை தாங்கிய நாய்க் சவட்டத் தலைவரின் ஆக்ரோசமான உரைக்கு சபையில் பலத்த ஆதரவு தெரிவிக்கப்பட்டது.

நாய்களின் ஆதரவு ஆரவாரங்களுக்கு மத்தியில் மாநாட்டுத் தலைவர் பின்வரும் தீர்மானங்களை முன்வைத்தார்.

நாய்களை வளர்ப்பவர்கள், அந்தந்த உள்ளூராட்சி சபைகளில் அனுமதி பெறுவதுடன் காலத்துக்கு காலம் எங்களுக்கு நீர்வெறுப்பு நோய் வராமல் தடை மருந்து ஏற்ற வேண்டும்.

இதனைக் கிரமமாக செய்வதை உறுதிப்படுத்தும் பொருட்டு ஒவ்வொரு உள்ளூராட்சி அமைப்புகளும் இதற்கென பணியாளர்களை நியமிக்க வேண்டும்.

அதேநேரம் இந்தப் பணியாளர்களிடம் எங்கள் தொடர்பில் (நாய்கள்) முழுமையான விபரங்கள் இருக்க வேண்டும்.

எங்களில் யாரேனும் இறந்தால் அது தொடர்பில் உரிய பணியாளர்களுக்குத் தெரியப்படுத்தி எங்கள் இறப்பை உறுதி செய்ய வேண்டும்.

ஒவ்வொரு குடும்பப் பதிவு அட்டையிலும் எங்கள் தொடர்பான விபரத்திற்கு இடம் ஒதுக்கி அதனைப் பதிவு செய்வதும் அவசியமாகும்.

அத்துடன் எங்களை யாரேனும் தெருவுக்கு அனுப்பினால் சம்பந்தப்பட்டவர்களை நீதிமன்றின் முன் நிறுத்துவதும் கட்டாயமானதாகும்.

இவையாவற்றுக்கும் மேலாக பெண் நாய் வளர்ப்பவர்கள் கர்ப்பத்தடை மருந்துகளை ஏற்றுதல் மூலம் அல்லது சத்திர சிகிச்சை மூலம் கருத்தடை செய்தல் வேண்டும்.

இதனைச் செய்வதன் மூலம் நாய்க்குட்டிகளை வீதிகளில் வீசுகின்ற கொடுமை நிறுத்தப்படும்.

இவற்றைச் செய்வதில் மாநகர சபைகள், பிரதேச சபைகள் உள்ளிட்ட உள்ளூராட்சி சபைகள் கவனம் செலுத்துவது மிகவும் அவசியமாகும் என்ற தீர்மானங்களை இவ்விடத்தில் முன்வைப்பதுடன், தெரு நாய்கள் தொடர்பில் பொருத்தமான ஜீவகாருண்ய செயற்றிட்டங்களை அமுல்படுத்துங்கள் என வினயமாக வேண்டுகிறோம்.

அன்புக்குரிய யாழ்ப்பாண மக்களே! தெரு நாய்களால் உங்களுக்கு பல்வேறு இடைஞ்சல்கள், வீதி விபத்துக்கள் ஏற்படுகிறது என்பதை நாம் நிராகரிக்கவில்லை.

ஆனால், நாங்கள் தெருவுக்கு வருவதற்கு நீங்கள் தானே காரணம்.

நீங்கள் அதிக பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ள மறுக்கிறீர்கள்.

ஆனால், எங்கள் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக கருத்தடை செய்ய மறுக்கிறீர்கள்– மறக்கிறீர்கள்.

ஆக, உங்களின் காவலனாக இருக்கும் எங்களை நீங்கள் காப்பாற்றாவிட்டால் யார்தான் காப்பாற்ற முடியும்?

எனவே, எங்களை வீதியில் விடாமல்,எங்கள் சிசுக்களை தெருக்களில் வீசாமல் பராமரித்துக் கொள்ளுங்கள் என்று தயவாகக் கேட்டுக் கொள்கிறோம் என தலைவர் கூறியதும், மாநாடு நிறைவு பெற்றது.

# இந்தியாவைப் புரிந்து கொள்ள இலங்கை அரசிடம் வலியுறுத்தல்

(கொழும்பு)

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான கடற்பரப்பில் உள்ள கனிய எண்ணெய் வளத்தினை வேறு நாடுகளுக்கு குத்தகைக்கு கொடுத்துள்ளமை குறித்து இந்தியாவின் உணர்வுகளை எண்ணத்தில் வைத்துக் கொள்ளுமாறு இந்தியா, இலங்கைக்கு தெரியப்படுத்தியுள்ளது.

சீனா, வியட்நாம், மலேசியா, ரஷ்யா ஆகிய நாடுகள் மன்னார் வளைகுடாவில் எண்ணெய் வள ஆய்வுகள் தொடர்பில் அக்கறை காட்டிவரும் பிரச்சினை தொடர்பாகவே இந்தியா தனது அதிருப்தியை இலங்கையிடம் வெளியிட்டுள்ளதாக இந்து பத்திரிகை தெரிவித்துள்ளது.

இப்பிரச்சினை குறித்து இரண்டு நாடுகளுக்கும் இடையில் கடந்த வருடம் இரண்டு முறை பேச்சுவார்த்தைகள் நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் அது கைகூடவில்லை. இதன் பின்னர் இரண்டு நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்ட விரசமே, சர்வதேச மனித உரிமைப் பேரவையில், இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க காரணமாக அமைந்திருந்தது.

எவ்வாறாயினும் இரண்டு நாடுகளுக்கும் இடையில் ஆரம்பத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது, பிராந்தியம் தொடர்பாக இந்தியா கொண்டுள்ள அக்கறை குறித்து இலங்கை தனது நல்லெண்ணத்தை இந்தியாவிடம் தெரிவித்துள்ளது.

இந்தியா, இலங்கையைச் சூழவுள்ள கடற்பகுதியில் உள்ள எண்ணெய் வளத்தை மாத்திரமன்றி, இந்தியாவைச் சூழவுள்ள எண்ணெய் வளம் குறித்தும் அக்கறை செலுத்தி வருகிறது. (எ-11)

# வைத்தியர்களின் கவனவீனத்தால் மாணவியின் கை பறிபோனது!

(கொழும்பு)

வீட்டுப் படுக்கட்டில் தடுக்கி விழுந்து கை முறிவு ஏற்பட்ட கொழும்பு சட்டக் கல்லூரி மாணவிக்கு கை அகற்றப்பட மாத்தறை பொது வைத்தியசாலை வைத்தியர்களின் கவனவீனமே காரணம் என முதற்கட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீட இறுதி ஆண்டில் கல்வி பயிலும் அஞ்சலா பிரியதர்ஷினி என்ற குறித்த மாணவி தடுக்கி விழுந்து கை முறிவு ஏற்பட்ட நிலையில் மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் அவரது கை வெட்டி அகற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து, வைத்தியர்கள் உரிய சிகிச்சை அளிக்காத காரணத்தினாலேயே மாணவிக்கு கை அகற்றப்பட்டுள்ளதாகவும் உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் மாணவியின் பெற்றோர்கள் வலியுறுத்தியிருந்தனர்.

இந்நிலையில், இது குறித்து விசாரணைகளை நடத்துவதற்கு விசேட குழு ஒன்றை சுகாதார அமைச்சு அமைத்தது.

மாத்தறை வைத்தியசாலையில் நீண்ட நாட்களாக மாணவி தங்க வைக்கப்பட்டிருந்த நிலையில் அவருக்கு உரிய சிகிச்சை அளிக்கப்படவில்லை என அக்குழு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட மாணவிக்கு சிகிச்சை வழங்கிய வைத்தியர்களுக்கு அவரது கையை அகற்றுவதைத் தவிர வேறு வழியில்லை என தீர்மானித்ததாக அவ்விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதேவேளை, பாதிக்கப்பட்ட மாணவியை பார்ப்பதற்காக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நேற்று கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குச் சென்று, மாணவிக்கு வழங்கப்பட்ட சிகிச்சைகள் குறித்த சகல விடயங்களையும் கேட்டறிந்துள்ளார். (எ-11)

## கற்பிட்டியில் 16 பேர் கைதாகி விடுதலை

கற்பிட்டி பிரதேசத்தில் பள்ளிவாசலை அண்மித்த பகுதியில் நேற்று திரைப்பட படப்பிடிப்பு ஒன்றில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 16 பேர் கற்பிட்டிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அப்பிரதேசங்களில் அனுமதியின்றி படப்பிடிப்பில் ஈடுபட்டதாக தெரிவித்தே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 12 பெண்களும் 4 ஆண்களும் அடங்குவதாகவும் இவர்களில் கற்பிட்டி பள்ளிவாசல் துறையைச் சேர்ந்த 11 தமிழ்ப் பெண்களும் அமெரிக்க இளைஞர் ஒருவரும் அடங்குவதாக கற்பிட்டிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் படப்பிடிப்பிற்காக பயன்படுத்திய உபகரணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இத்திரைப்படத்திற்கான இயக்குநர் புறக்கோட்டையைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும், இவர்கள் விசாரணையின் பின்னர் விடுதலை செய்யப்பட்டதாக கற்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர். (எ-11)

## 610 இராணுவத்தினர் ஹெய்ட்டிக்கு பயணம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் சமாதானப் படையில் இணைந்து பணியாற்றுவதற்காக இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த 610 பேர், அடுத்த மாதம் ஹெய்டிக்கு பயணமாகவுள்ளனர்.

சுமார் 6 மாத காலங்கள் ஹெய்டியில் பணியாற்றுவதற்காக எதிர்வரும் பெப்ரவரி முதல் வாரத்தில் இலங்கையிலிருந்து புறப்படவுள்ள இந்தக் குழு, இலங்கையிலிருந்து ஹெய்டி செல்லும் 17-வது குழுவாகும்.

இந்த 610 பேரில் 49 அதிகாரிகள் உள்ளடங்குகின்றனர். இவர்களுக் கான பயிற்சிகள் குக்குலேகங்க இராணுவ முகாமில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# குழுக்களிடையே மோதல் எம்.பியின் சகோதரர் பலி

## கம்பஹாவில் சம்பவம்

(கம்பஹா)

கம்பஹா பிரதேசத்தில் இரண்டு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற கைகலப்பில் ஜாஎல பிரதேச சபையின் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் சகோதரர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவத்தில் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

நிதிப் பிரச்சினையின் காரணமாக இந்த கைகலப்பு ஏற்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

பிரதேசசபை நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் இதன்போது காயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ-11)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை:

## குழந்தை வளர்ப்பு



ஒரு குழந்தையின் உற்பத்தியானது பெற்றோர்களு டைய உடல், உயிர், அறிவு இவற்றின் தரத்திற்கு ஏற்றவாறு தான் அமையும். பெற்றோர்களுடைய வினைத் தொடரே குழந்தை. நல்ல குழந்தை வேண்டுமானால் பெற்றோர்கள் உடலை, உயிரை, அறிவைச் செம்மையாக பேணிக் காக்க வேண்டும்.

தவம், உடற்பயிற்சி, ஆராய்ச்சி இவற்றால் தங்களை உயர்த்திக் கொள்ள வேண்டும். அமாவாசை, பௌர்ணமி தினங்களிலும் போதைப்பொருட்கள் உட்கொண்ட மயக்கத்திலும், இருவரில் ஒருவர் வருத்தமாகவோ, நோயற்றோ இருக்கும் நாளில் ஒரு குழந்தை கருத்தரிக்குமேயானால் அது உடலிலும் அறிவிலும் தரம் குறைந் ததாகவே அமையும்.

மேலும் குழந்தை கருவுற்றிருக்கும் காலத்தில் தாயின் மனம் உற்சாகமாக இருக்கும்படி அந்தக் குடும்பத்தினர் பார்த்துக்கொள்ளவேண்டும். இத்தகைய அறிவின் விழிப்பில் உற்பத்தியாகும் குழந்தை, உடல் அறிவு நலன்களோடு, குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் பெரும் நலம் விளைக்கத்தக்க நல்நிதியாக அமையும்.

பிறந்த பிறகும் வளர்க்கும் முறையில் மிகவும் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். அந்தக்குழந்தை எந்த எந்தச் செயலில் ஈடுபடக்கூடாது என்று நினைக்கிறோமோ அந்தச்செயல்களைப் பெற்றோர்கள் குழந்தையின் எதிரில் செய்யவே கூடாது. கடைசியாக மக்களுக்குச் சொத்துச் சேர்த்துவைக்க வேண்டும் என்பது இந்த விஞ்ஞான காலத்தில் அவசியமில்லை. அவர்களுக்கு வாழ்வதற்கு ஏற்ற கல்வியைக் கற்பித்து வைத்தால் அதுவே அழிக்கமுடியாத பெரும் சொத்தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இல்லமெய்வல்லுநர் போட்டி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி முதல்வர் க. அருந்தவபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்வி பணிப்பாளர் எஸ். கிருஷ்ணகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (செ-3-29)

## புராண படனப் போட்டி

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய ஆசிரியர்களிடையே நடத்தப்படவுள்ள புராண படனப் போட்டி நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பங்குபற்றும் ஆசிரியர்களை தவறாது உரிய நேரத்திற்கு சமுகமளிக்குமாறு தென்மராட்சி வலயக் கல்வி பணிப்பாளர் எஸ். கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (2-3-29)

### பாராளுமன்ற தெரிவுக்குழுவினால்

# முஸ்லிம் மக்களுக்கு எதிரான சக்தியை அடக்க முடியாது- உலமா கட்சி தெரிவிப்பு

மத அடிப்படை வாதங்கள் பற்றி ஆராய்வதற்கான ஜனாதிபதியின் பாராளுமன்ற சர்வ கட்சிக்குழு என்பது முஸ்லிம்கள் மத்தியிலுள்ள இயக்கங்களை தடை செய்வதில் தான் கொண்டு போய் முடியுமே தவிர முஸ்லிம் மக்களுக்கெதிரான பேரினவாதத்தை அடக்க முடியாது என முஸ்லிம் உலமா கட்சி தெரிவித்துள்ளது.

இதுபற்றி உலமா கட்சித் தலைவர் முபாரக் அப்துல் மஜீத் தெரிவித்திருப்பதாவது,

அண்மைக்காலமாக முஸ்லிம்களுக்கெதிராக பொது பல சேனா போன்ற அமைப்புக்களால்மேற்கொள்ளப்பட்டுவரும்ஆர்ப்பாட்டங்கள் பற்றி முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் பேச முடியாமல் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

இதனையடுத்து முஸ்லிம்களுக்கெதிரான வன்முறைகளை ஆராயவென குழுவொன்றை நியமிக்காமல் மத அடிப்படைவாதம் பற்றி ஆராய சர்வகட்சி குழு நியமிப்பதாக தெரிவித்துள்ளமை நோய்க்கு மருந்து தராமல் நோயை மேலும் அதிகரிக்கும் செயலாகவே தெரிகிறது.


உண்மையில் இத்தகைய பிரச்சினைகளை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியால் ஒரே நாளில் தீர்க்க முடியும். ஓர் இனத்துக்கெதிராக இன்னொரு இனம் ஆர்ப்பாட்டம் செய்வதை, இலங்கையின் அரசியல் சாசனம் தடை செய்கிறது.

இந்த வகையில் இத்தகைய ஆர்ப்பாட்டங்களுக்கு பொலிஸார் அனுமதியளிக்க வேண்டாம் என அரசு உத்தரவிடுவதன் மூலம் இதனை கட்டுப்படுத்த முடியும்.

அதனை விடுத்து பாராளுமன்ற தெரிவுக்குழு என்பது விடயத்தை இழுத்தடித்து வேறு பக்கம் திசை திருப்புவதாகவே முடியும். இறுதியில் பொதுபல சேனாவை தடை செய்வதாயின் தப்லீக் தவ்ஹீத் போன்ற முஸ்லிம் அமைப்புக்களையும் தடை செய்ய வேண்டும் என இந்தக் குழு தீர்மானிக்கலாம்.

ஏற்கனவே பாராளுமன்ற தெரிவுக்குழு என்பது நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க விடயத்தில் நடந்து கொண்ட விதத்தை நாடே அறியும். பொது பல சேனா போன்ற அமைப்புக்கள் தடை செய்யப்பட்ட பின் அவை வேறு பெயர்களில் இயங்க ஆரம்பிக்கும். ஆனால் முஸ்லிம் இயக்கங்களுக்கு வாழ்நாள் தடை ஏற்படும்.

ஆகவே இத்தகைய தெரிவுக்குழு நியமிப்பதை உலமா கட்சி மறுப்பதோடு ஜனாதிபதி நேரடியாக தலையிட்டு இனங்களுக்கிடையில் இனவாதத்தை உருவாக்கும் வகையில் யார் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டாலும் அவர்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் அல்லது கைது செய்யப்பட வேண்டும் என அறிவிப்பதே இதற்கான தீர்வாகும் என்பதை உலமா கட்சி தெரிவிக்கின்றது என முபாரக் மௌலவி தெரிவித்துள்ளார். (செ-2)



யா/உயரப்புலம் மெதடிஸ் வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு மரதன் ஓட்ட நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற வீராங்கனைகளுடன் அதிபர், உப அதிபர் மற்றும் விளையாட்டுக் குழுவினர் நிற்பதைப் படத்தில் காணலாம். (படம்:- என்.குமார்)

# அமெ. பிரதிநிதிகள் குழுவினர் யாழ்ப்பாணம் நேற்று வருகை

### பலதரப்பட்ட பிரதிநிதிகளையும் சந்தித்தனர்

(யாழ்ப்பாணம்)

அமெரிக்க பிரதிநிதிகள் குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டு பல தரப்பட்டவர்களுடனும் கலந்துரையாடியிருந்தனர். ஆசிய பசுபிக் பிராந்திய பாதுகாப்பு அலுவலகத்தின் தெற்கு மற்றும் தெற்காசிய பாதுகாப்பு விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் விக்ரம் ஜேசிஸ், அமெரிக்க துணை இராஜாங்கச் செயலாளர்களான ஜேம்ஸ் மூர் ஜேம்ஸிம் பர்மன் மற்றும் இலங்கை அமெரிக்க தூதுவர் மிச்சேல் சிசென் உள்ளிட்டவர்கள் வருகை தந்திருந்தனர்.

யாழ். பலாலி படைத் தலைமையகத்தில் யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவுடன் காலை 9 மணியளவில் சந்தித்து கலந்துரையாடிய இந்தக் குழுவினர் அதன் பின்பு கடற்படை அதிகாரிகளை காங்கேசன்துறை பகுதியிலுள்ள கடற்படை முகாமில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இதனையடுத்து யாழ்ப்பாணம் நல்லூர் கோவில் வீதியிலுள்ள ஐ.ஓ.எம்.நிறுவனத்தில் அந்நிறுவனத்தின் பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடியதோடு பிற்பகல் 2.40 மணியளவில் யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையினை அவரது இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

இதன் பின்பு யாழ்ப்பாணத்தில் உள்ள அமெரிக்கன் கோணர் நிறுவனத்தின் பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடினர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

# மீள ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையில் மாணவர்களின் இணைப்பு குறைவு!

## பாடசாலை அதிபர் கவலை

யாழ்.வீமன்காமம் மகா வித்தியாலயம் இடப்பெயர்விற்கு பின்னர் மீளவும் 2012 ஆம் ஆண்டு மீள ஆரம்பிக்கப்பட்டபோதும் கடந்த ஆண்டும் இவ் ஆண்டும் தரம் 1,2 இற்கு மாணவர்கள் இப்பாடசாலையில் இல்லாமையால் தரம் 1,2 இயங்காமல் இருப்பதாக பாட சாலை அதிபர் சோமசுந்தரம் இராமநாதன் கவலை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் இப்பாடசாலையில் ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் தரம் 1 தொடக்கம் க.பொ.த. உயர்தரம் வரை கல்வி பயின்றனர்.

பின்னர் 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்ததன் காரணமாக மருதனார்மடத்தில் உள்ள யாழ். இராமநாதன் கல்லூரியின் ஒரு பகுதியில் ஆரம்பிக்கப்பட்டு பல நூற்றுக்கணக்கான மாணவர்களுடன் இயங்கி வந்தது.

மீண்டும் 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தனது சொந்த பாடசாலையில் மீள இயங்கத் தொடங்கிய நிலையிலேயே தரம் 1இற்கு உரிய மாணவர்கள் வரவின்மை காணப்படுவதாக கவலை தெரிவித்துள்ளார்.

இப்பாடசாலை மீள உரிய இடத்தில் ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கைகளை மீள மேற்கொள்வதற்கு இப்பகுதி இராணுவ பொறுப்பதிகாரிகளும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா உட்பட பலர் உதவிகளை வழங்கி ஆரம்பித்து இன்று நல்ல நிலையில் இயங்கி வருகின்றது.

எனவே, பொதுமக்கள் துரிதமாக மீள்குடியேறியதன் மூலம் இப்பாடசாலையை இன்னும் வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்ல முடியும் எனவும் இம்முயற்சிக்கு துறைசார்ந்த அதிகாரிகளும் இவ்வித்தியாலயத்தின் பழைய மாணவர்களும் பெற்றோர்களும் முழுமனதோடு [illegible] அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-3-15)

# பால்மா போத்தல்களில் நகைகளை கடத்த முயற்சி

### இலங்கை பணிப் பெண் கைதானார்

ஷார்ஜா விமான நிலையத்தில் வைத்து 2.8 மில்லியன் ரூபா பெறுமதியான தங்க நகைகளை கடத்த முற்பட்ட இலங்கைப் பணிப் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இவர் ஷார்ஜாவில் பணிப் பெண்ணாக கடமையாற்றியதன் பின்னர் அங்கிருந்து நாடு திரும்பும் போது நகைகளை திருடி வந்ததாக அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கைப் பணிப்பெண் பால்மா போத்தல்களிற்குள் நகைகளை மறைத்து எடுத்துச் செல்ல முற்பட்ட வேளை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இந்தப் பெண் பணி புரிந்த வீட்டில் உள்ள மற்றுமொரு பெண் நகைகளை திருடுவதற்காக இவருக்கு உதவியிருக்கலாம் என ஷார்ஜா பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (செ-11)

# மியன்மார் இராணுவத்தை நேசிக்கின்றேன்-ஆங் சான் சூகி

மியன்மார் இராணுவத்தை நேசிப்பதாக அந்நாட்டு எதிர்க்கட்சித் தலைவி ஆங் சான் சூகி தெரிவித்துள்ளார். சர்வதேச ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். ஆங் சான் சூகியை இராணுவத்தினர் பதினைந்து ஆண்டுகள் வீட்டுக் காவலில் வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. மியன்மாரின் சர்வாதிகார ஆட்சியாளர்களுக்கு பௌத்த மத கோட்பாடுகளின் அடிப்படையில் தாம் பதிலளித்ததாகக் குறிப்பிட்டுள்ளார். மெய்யாகவே இராணுவத்தினர் மீது அன்பு கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இவ்வாறு கூறுவதனை மக்கள் விரும்பமாட்டார்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இராணுவத்திற்கு சார்பாக குரல் கொடுப்பதை சிலர் விமர்சனம் செய்தாலும் தந்தை உருவாக்கிய இராணுவமாகவே தற்போதைய இராணுவத்தையும் பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை இராணுவத்தினர் மியன்மாருக்கு பாரிய கேடுகளை விளைவித்துள்ளனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எதிர்காலத்தில் இவ்வாறான துர்ப்பாக்கிய சம்பவங்கள் இடம்பெறாது என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (செ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிப் போட்டியில் இங்கிலாந்து வெற்றி
# தொடர் இந்தியா வசம்




இந்தியாவிற்கு எதிரான 5-வது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் பெல் சதம் அடித்து கைகொடுக்க இங்கிலாந்து அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றி பெற்றது.

இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற் கொண்டுள்ள இங்கிலாந்து அணி 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற் றது.

4 போட்டிகளின் முடிபில் இந்தியா 3:1 என்று தொடரைக் கைப்பற்றி முன்னிலை வகித்தது.

இந்நிலையில் 5-வதும் இறுதியுமான போட்டி நேற்று தர்மசாலாவில் நடைபெற்றது.

நாணயசுழற்சியில் வெற்றி பெற்ற இங் கிலாந்து அணி களத்தடுப்பை தெரிவு செய் தது.


இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணியின் தொடக்க வீரர்களாக களமிறங்கிய ரோகித் சர்மா 4 ஓட் டங்களும், காம்பீர் 24 ஓட்டங்களும் எடுத்தனர்.

அடுத்து களமிற ங்கிய விராட் ஹோலி, யுவ்ராஜ் சிங் இருவரும் ஓட் டங்களின்றி ஆட்ட மிழந்தனர்.

பின்பு களமிறங்கி அதிரடியாக விளை யாடிய சுரேஷ் ரெய்னா அரைச்சதம் கடந்து 83 ஓட்டங்களும், ஜடேஜா 39 ஓட்டங் களும், புவனேஷ்வர் குமார் 31 ஓட்டங்க ளும் எடுத்தனர்.

இந்திய அணி 49.4 ஓவர்களில் அனைத்து விக்கெட் டுக்களையும் இழந்து 226 ஓட்டங்களை எடுத்தது.

இங்கிலாந்து தரப்பில் பிரஸ்னன் 4 விக்கெட்டுக்களையும், ஸ்ரீவன்பின், ட்ரெட்வெல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.



இதனையடுத்து 227 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 47.2 ஓவர்களில் 3 விக்கெட் இழந்து தனது வெற்றியிலக்கை 7 விக்கெட்டுக்களால் அடைந்தது.

தொடக்க வீரர்களாக களமிறங்கிய இயன் பெல் ஆட்டமிழக்காமல் சதம் கடந்து 113 ஓட்டங்களும், மோர்கன் 40 ஓட்டங்களும், ஜோ ரூட் 31 ஓட்டங்களும் எடுத்தனர்.

போட்டியின் ஆட்டநாயகனாக சதம் அடித்த இங்கிலாந்து அணி யின் இயன் பெல்லும் தொடர்நாயகனாக இந்தியாவின் சுரேஸ் ரெய்னாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

## ஸ்கந்தாவை வீழ்த்தியது ஸ்ரான்லி

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தும் 19 வயது பிரிவினருக்கான பிரிவு III இற்கான கிரிக்கெட் போட்டி ஒன்றில் ஸ்ரான்லி அணி ஸ்கந்தவரோதய கல்லூரியை வீழ்த்தி பத்து விக்கெட்டுக்களால் அபார வெற்றியீட்டியது.

கடந்த 18, 19 திகதிகளில் ஸ்ரான்லி கல்லூரி மைதானத்தில் இப்போட்டி இடம்பெற்றது. இப்போட்டியில் ஸ்ரான்லி அணியை எதிர்த்து ஸ்கந்தவரோதயா அணிமோதிக் கொண்டது.

நாணயசுழற்சியில் வெற்றி பெற்று முதலாவது இனிங்ஸிற்காக துடுப்பெடுத் தாடிய ஸ்கந்தா அணி 48.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 133 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் ஸ்கந்தா அணி சார்பாக ஜனக்ஷன் 76, நிரோஜன் 12ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றனர்.

பந்து வீச்சில் ஸ்ரான்லி அணி சார்பாக கலைச்செல்வன், உதயசுபேசன் தலா 3 விக் கெட்டுக்களை வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது முதலாவது இனிங்ஸி ற்காக துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி அணி 57 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக் களையும் இழந்து 197 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் ஸ்ரான்லி அணி சார் பாக விதுர்ஷன்43, தர்ஷன் 32, சுரேஸ் 26 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஸ்கந்தா அணி சார்பாக ஜனக்ஷன்4, சிந்துஜன், நிறோஜன் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

64 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தனது இரண்டாவது இனிங்ஸிற்காக துடுப் பெடுத்தாடிய ஸ்கந்தா அணி ஸ்ரான்லி அணியின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் 27.1 ஓவர்கள் அனைத்தும் விக் கெட்டுக்களையும் இழந்து 81ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

துடுப் பாட்டத்தில் ஸ்கந்தா அணி சார்பாக ஜனக்ஷன் 33 ஓட்டங்களை பெற்றார். மற்றைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

பந்து வீச்சில் அசத்திய பிரசாந் 5 விக் கெட்டுகளையும் உதய சுபேசன் 4 விக்கெட் டுக்களையும் வீழ்த்தினர்.

18 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி அணி3.3ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் ஸ்ரான்லி அணி சார்பாக கலைச் செல்வன் 12 சுரேஸ் 6 ஓட்டங்களை பெற் றனர்.

## அரையிறுதியில் பார்சிலோனா

ஸ்பானிஷ் கோபா டெல் ரே கால்பந்து தொடரின் அரையிறுதிக்கு பார்சிலோனா அணி முன்னேறியது.

ஸ்பெயினில், உள்ளூர் கால்பந்து கழக அணிகள் பங்கேற்கும் 109-வது கோபா டெல் ரே கால்பந்து தொடர் நடைபெற்று வருகிறது.

மாட்ரிட் நகரில் நடந்த காலிறுதிக்கான 2-வது சுற்றுப் போட்டியில், மால்கா-பார்சி லோனா அணிகள் மோதின.

போட்டியின் முதல் பாதியில் பார்சிலோனா அணியின் பெட்ரோ (8-வது நிமிடம்) ஒரு கோல் அடித்தார்.

இதற்கு மால்கா அணியின் ஜாகுயின் (12-வது நிமிடம்) பதிலடி கொடுத்தார்.

இதனால் முதல் பாதியின் முடிவில், 1:1 என்ற கோல்கணக்கில் போட்டிசமனிலையில் இருந்தது.

பின்பு 2-வது பாதியில் ஆதிக்கம் செலுத் திய பார்சிலோனா அணிக்கு ஜெரால்ட் (49) இனியஸ்ரா (76), மெஸ்சி (80) ஆகியோர் கோல் அடித்து வெற்றியை உறுதி செய்தனர்.

மால்கா அணிக்கு ஷான்டா குரூஸ் (68 நிமிடம்) ஒரு கோல் அடித்து ஆறுதல் அளித் தார். முடிவில் பார்சிலோனா அணி 4:2 என்று வெற்றி பெற்றது.

முன்னதாக இவ்விரு அணிகள் மோதிய காலிறுதிக்கான முதல் சுற்றுப் போட்டி 2:2 என்று சமனிலையானது.

இரண்டு போட்டிகளின் முடிபில் பார்சி லோனா அணி 6:4 என்ற கணக்கில் அரை யிறுதிக்கு தகுதி பெற்றது. அரையிறுதியில் பார்சிலோனா அணி, ரியல் மாட்ரிட் அணியை எதிர் கொள்கிறது.

நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டி யில் பார்சிலோனாவின் நட்சத்திர வீரர் மெஸ்சி 80-வது நிமிடத்தில் கோல் அடித்து அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

இது இந்த ஆண்டு பார்சிலோனா அணி யின் (2012-2013, 34 போட்டி) 100-வது கோலாக அமைந்ததுடன் மெஸ்சியின் 40-வது கோலாகும்.

## மீனவர்கள் நடைபவனி



இந்திய மீனவர்களின் அத்துமீறல்களினால் மீன்வளம் அழிக்கப் படுவதை கண்டித்து போரினால்பாதிக்கப்பட்ட பிரதேச மக்கள் அமைப் பின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட நடைபவனி நேற்றுக்காலை 11.45 மணியளவில் முள்ளிக்குளம் கடற்கரையில் ஆரம்பமானது.

மன்னார், முள்ளிக்குளத்தில் ஆரம்பமான குறித்த பேரணி முல்லைத்தீவு வரை இடம்பெறும் என அவ் அமைப்பின் தலைவர் வி.சகாதேவன் தெரிவித்துள்ளார்.

குறித்த நடை பவனியின்போது முள்ளிக்குளம் மக்கள் முழு ஆதரவை வழங்கினார். இதேவேளை அவருக்கு ஆதரவு தெரிவிக் கும் வகையில் மன்னார் பிரஜைகள் குழு, தேசிய மீனவ ஒத்துழைப்பு பேரவை ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு ஆதரவு வழங் கினர்.

## குடும்பஸ்தர் விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளும் துவிச்சக்கர வண் டியும் விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை 5.30 மணி யளவில் சுன்னாகம் சந்தியடியில் இடம்பெற் றுள்ளது. இதில் அளவெட்டி கிழக்கு மணற்குளப் பகுதியை சேர்ந்த கந்தையா மகாலிங்கம் (வயது-47) என்பவரே படுகாயமடைந்தார். இவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக சுன்னாகப் பொலிசார் விசா ரணைகளை மேற்கொண்டு வருகின்றார்.(எ-1)

## கொக்குவில் மத்திய ச. நிலையம் நடத்தும் கிரிக்கெட்; அரியாலை ஐக்கியம், ஓல்ட் கோல்ட், ஜொனியன்ஸ் வெற்றி

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட துடுப்பாட்ட அணிகளுக்கிடையில்30 பந்துப் பரிமாற்றங்கள் மட்டுப்படுத்தப்ட்ட துடுப்பாட்ட போட்டிகள் கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகிய மைதா னங்களில் நடைபெற்று வருகின்றது.

சனிக்கிழமை மூன்று போட்டிகள் இடம் பெற்றன.

கனகரத்தினம் மத்திய மகா வித்தி யாலய மைதானத் தில் நடைபெற்ற போட்டியில் அரி யாலைஐக்கியவிளை யாட்டுக்கழக அணியை எதிர்த்து கிறாஸ்கோப்பர்ஸ் அணிமோதியது.

முதலில் துடுப் பெடுத்தாடிய அரி யாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி 30 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக் குகளை இழந்து 210 ஓட்டங் களைப்பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிறாஸ் கோப்பர்ஸ் அணி 16 பந்துப்பரிமாற்றங்களில் 43ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்து 167 ஓட்டங்களால் தோல்விடைந்தது.

கொக்குவில் இந்துகல்லூரி மைதானத் தில் காலையில் நடைபெற்ற போட்டியில் ஓல்ட் கோல்ட் அணியினை எதிர்த்து யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஓல்ட் கோல்ட்ஸ் அணி 30 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்கு களை இழந்து 226ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யூனியன்ஸ் அணி 18.2 பந்துப் பரிமாற்றங்களில் 95 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்து 131 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் மாலையில் நடைபெற்ற போட்டியில் ஜொனி யன்ஸ் விளையாட்டுக்கழக அணினை எதிர்த்து மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 29.3 பந்துப் பரிமாற்றங்களில் 205 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழக அணி 27.2 பந்து பரிமாற்றங்களில் 150 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்து 55 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித உரிமை மீறல்...

ஆணையாளரின் அறிக்கையாகவே இவ் வறிக்கை வெளியிடப் படவுள்ளது.

மனித உரிமை ஆணைக்குழுவின் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டபடி நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை அமுல் படுத்த இலங்கை அரசு தவறிவிட்டதாகவும் இது குறித்து அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேபோல் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை செயற்படுத்தவென தயாரிக்கப்பட்ட செயற்திட்டத்தையும் கடுமையாக விமர்சிக்கப்பட்டுள்ளதெனவும் தெரிவிக்கப்படுகின்றன.

முறையான சட்டரீதியான முறையில் கொண்டு வரப்படாத குற்றப்பிரேரணை மற்றும் பிரதம நீதியரசரான ஷிராணி பண்டார நாயக்கவை வெளியேற்றியதன் மூலம் நாட்டின் சட்டத்துறை நிர்வாகம் சீர்குலைந்துள்ள நிலையில் யுத்தம் இடம்பெற்ற காலத்திலும் அதன் பின்னரும் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் குறித்து ஆராய ஐ.நா. சபையின் இயந்திரமொன்றை நிறுவ வேண்டு மென்று ஐ.நா. வலியுறுத்தலாமென்றும் தெரியவருகின்றது. இந்த அறிக்கை இலங்கையின் கௌரவத்தை சர்வதேச ரீதியில் பாதிக்கும் எனவும் நம்பப்படுகின்றது.

இந்த அறிக்கை எதிர்வரும் பெப்ரவரி 26ஆம் திகதி முதல் மார்ச் 22ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் 22ஆவது அமர்வில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இலங்கைக்கு ஆதரவாகச் செயற்படும் சீனா, கியூபா ஆகிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இவ்வருடம் முதல் செயற்படவில்லை. பாகிஸ்தான் மட்டுமே இலங்கைக்கு ஆதரவான நாடாகும். (எ-11)

## கடும் போக்கான செய...

ஆசிய பசுபிக் பிராந்திய பாதுகாப்பு அலுவலகத்தின்தெற்கு மற்றும்தெற்காசிய பாதுகாப்பு விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி ராஜாங்கச் செயலாளர் விக்கிரம் ஜேசிங், அமெரிக்க துணைச் இராஜாங்கச் செயலாளர்களான ஜேம்ஸ் மூர், ஜேம் சிமர்சன் மற்றும் இலங்கைக்கான அமெரிக்கா தூதுவர் மிச்செல் சிசன் உள்ளிட்ட அமெரிக்க பிரதிநிதிகள் குழுவினர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தனர்.

இவர்கள் நேற்று பிற்பகல் 2.40 மணியளவில் யாழ் ஆயரைச் சந்தித்து கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு தெரிவித்ததாக யாழ். ஆயர் ஊடகவியலாளர்களுக்கு தெரிவித்தார். இந்தச்சந்திப்புத்தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் இடம்பெற்ற வடக்கு மாகாணத்தில் இறுக்கமான போக்குடன் இலங்கை அரசாங்கம் செயற்பட்டு வருவதை இங்கு நேரடியாக வந்து அவதானித்தன் மூலம் அறியமுடிகிறது.

சமாதானச் சூழல் ஏற்பட்டு மக்கள் சுதந்திரமாக நடமாடக் கூடியதாக இருக்கின்றபோதும் யுத்தம் முழுமையாக முடிபுக்கு கொண்டு வரப்பட்டு விட்டதாக தெரியவில்லை.

முரண்பட்ட இரண்டு இனங்களுக்கிடையிலும் சுமுக உணர்வு ஏற்படவில்லை என்பதனையும் அவதானிக்க முடிகிறது என அமெரிக்க பிரதிநிதிகள் என்னிடம் சுட்டிக்காட்டியிருந்தனர் எனத் தெரிவித்த யாழ் ஆயர் யாழ்ப்பாணத்திற்குவருகைதந்த அமெரிக்க பிரதிநிதிகள் குழுவின் பிரதிநிதியொருவர் கடந்த 5 மாதங்களுக்கு முன்பு யாழ்.மாவட்டத்திற்கு வந்து நிலைவரங்களை அவதானித்தாகவும் அப்போதைய நிலைவரத்தை விட தற்போது அரசாங்கத்தின் இறுக்கமான போக்கு அதிகரித்துள்ளது என சுட்டிக்காட்டியிருந்தார் எனவும் ஆயர் தெரிவித்தார். (எ-6)

## யாழில் சிவில் நிர்வாக...

செயலாளர்கள் குழு நேற்று யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள நிலையில் யாழ். கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துரு சிங்கவை சந்தித்து கலந்துரையாடியது.

மூவர் அடங்கிய இந்த விசேட பிரதிநிதிகள் குழுவில் அமெரிக்காவின் பிரதி உதவிச் செயலர் ஜேம்ஸ் மூர், பாதுகாப்பு பிரதி உதவிச் செயலாளர் விக்கிரம்சிங் மற்றும் பிரதி உதவிச் செயலாளர் ஜேன் சிமர்சன் ஆகியோர் உள்ளிட்ட பத்து பேர் அடங்குகின்றனர்.

இதன் போது யுத்தத்திற்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் இலங்கை இராணுவம் முன்னெடுத்துவரும் நடவடிக்கைகள் தொடர்பில் யாழ்.கட்டளைத்தளபதியினால் அமெரிக்க ராஜாங்க குழுவுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இலங்கை இராணுவத்தின் முன்னெடுப்புக்கள் தொடர்பில் யாழ்.மக்கள் நன்கறிவர். போருக்கு பின்னர் அரசாங்கத்தாலும் இராணுவத்தாலும் விரிவாக்கப்பட்டுள்ள அபிவிருத்தித்திட்டங்கள் குறித்து இங்குள்ள மக்கள் மகிழ்ச்சியடைகின்றனர் என்று யாழ்.கட்டளைத் தளபதி விளக்கமளித்துள்ளார்.

அத்துடன், மனிதாபிமான உதவிகள், பொது நல நடவடிக்கைகள், முன்னாள் போராளிகளுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகள் உள்ளிட்ட வடக்கில் இராணுவத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் இதன்போது விரிவாக விளக்கமளிக்கப்பட்டது என்று யாழ்.படைத் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அங்கு தொடர்ந்து விளக்கமளித்த கட்டளைத் தளபதி கூறியதாவது,

யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டிருந்த படையினரின் எண்ணிக்கை 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் படிப்படியாக குறைக்கப்பட்டுள்ளது. இங்கு நிலை கொண்டுள்ள இராணுவம் ஒருபோதும் சிவில் நிர்வாகத்தில் தலையடுவதில்லை தெற்கில் போன்றே வடக்கிலும் அரச கட்டமைப்புக்கான பொறுப்புக்ளில் அவர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

இங்கு நிலைகொண்டுள்ள இராணுவத்தை மேலும் குறைக்க இராணுவ தலைமையகத்தின் ஆலோசனைக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும். வடக்கில் புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்பட்டு வருகின்ற நிலையில் இன்னமும் 3 சதவீத நிலப்பரப்பு மாத்திரமே கண்ணிவெடி அகற்றுவதற்காக எஞ்சியுள்ளது.

வடக்கில் சில பகுதிகளிலுள்ள காணிகளின் உரிமையாளர்கள் வெளிநாடுகளில் வாழ்வதால் அக்காணிகளில் இன்னமும் மீள் குடியேற்றம் இடம்பெறவில்லை. அவ்வாறு வெளிநாடுகளில் வாழ்பவர்கள் நாடு திரும்பும் நோக்கத்தில் இல்லை என்பது தெரிய வந்துள்ளது என்றார்.

யாழ்.கட்டளைத் தளபதியின் விளக்கத்தை கேட்டு முடித்த அமெரிக்க உயர்ஸ்தானிகர் மைக்கேல் ஜே.சிசன் போருக்கு பிந்திய இராணுவத்தின் நடவடிக்கைகள் பாராட்டத்தக்கவை என்று கூறினார். (எ-11)

## அமெரிக்க...

படுத்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

நாட்டில மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பில் பாதுகாப்புச் செயலாளர் விளக்கமளித்துள்ளார். (எ-11)

## இலங்கை...

உரிமைகள் மீறல்கள் தொடர்பில் திரட்டிய தகவல்கள் அடங்கிய அறிக்கை ஒன்றினை மனித உரிமைகள் ஆணையர் நவநீதம் பிள்ளைக்கு அனுப்பி வைத்துள்ளது.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான ஆர்.சம்பந்தன் தலைமையிலான குழுவொன்றும் நேற்று தென்னாபிரிக்கா புறப்பட்டுள்ளதாகவும் அதில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. (எ-11)


### தவறிவிட்டது

19.01.2013 அன்று யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் கரந்தன் மேற்கு நீர்வேலியைச் சேர்ந்த சி.பாலசிங்கம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.563553715 V), சாரதி அனுமதிப் பத்திரம், வரி அனுமதிப் பத்திரம் என்பன தவறவிடப்பட்டன. கண்டெடுத்தவர்கள். கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 077 4223129 (1591)


## உள்ளூராட்...

சிறிக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை அரசியல் மயமானது என்று வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கம் குற்றம் சுமத்தியுள்ளார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் நிதிகள் மாத்திரமே திரும்பப் பெறப்பட்டுள்ளன.

ஈபிடிபியின் சபை நிதிகள்திரும்பப் பெறவில்லை என்று சிவாஜிலிங்கம் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளில் 13 சபைகளின் அதிகாரங்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)


ACCA Association of Chartered Certified Accountants

க.பொ.த(உ/த)பரீட்சைப் பெறுபேறுகள் அடிப்படையில் இளம் சாதனையாளர் தேர்வு

ACCA கற்கைநெறியானது நிதி,கணக்கியல்,முகாமைத்துவம் தொடர்பான உலகின் முதற்தர கற்கைநெறியாகும்.

ACCA பட்டயக் கணக்காளர்,கற்கை வழிகாட்டல் அலகானது பயிற்சி நெறி, ஆலோசனைகள், கற்கைகள், விளக்கங்களை வழங்கிவருகின்றது.

கேள்வி

க.பொ.த (உ/த) பரீட்சை பெறுபேறு-2012 அடிப்படையில் யாழ்.மாவட்டத்தில் எந்தத்துறை தேசிய மட்டத்தில் முதல் மூன்று இடங்களினுள் இடம்பெறவுள்ளது? (ஒன்றுக்கு மேற்பட்ட துறைகளாயின் வினை பிரயோகிக்கலாம்)

கலைத்துறை எனில் ACCA < > A எனவும், வர்த்தகம் ACCA < > C, கணிதம் ACCA < > M, விஞ்ஞானம் ACCA < > S, எதுவுவல்ல ACCA < > N எனவும் பிரயோகிக்கவும்.

உ+ம்: வர்த்தகம், கணிதம் எனில் ACCA < > C,M

தொலைபேசி இல: 0215670345/0779009426

SMS முடிவுத் திகதி: 05.02.2013

குறிப்பு: போட்டியில் 30 வயதிற்குட்பட்ட எவரும் பங்குபற்றலாம். தெரிவு செய்யும் 25 அதிர்ஷ்டசாலிகளுக்கு பெறுமதி மிக்க பரிசில்கள் இளம் சாதனையாளர் தேர்வு விருது வழங்கும் நிகழ்வில் வழங்கப்படவுள்ளதுடன், ஒவ்வொரு துறையிலும் யாழ்.மாவட்டத்தில் முதல் 50 இடங்கள் பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள், விருதுகள் வழங்கப்படவுள்ளன.

அனுசரணை ACCA

பட்டயக் கணக்காளர் கற்கை வழிகாட்டல் அலகு,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P.: 0215670345

(சு-2259)



Deutsch, Dutch, French, English

2013 புதிய வகுப்புகள் விபரம்

ஜேர்மன் - டொச், நெதர்லாந்து - டச்

தூதரக பரீட்சைகளுக்கான புதிய வகுப்புக்கள் அனைத்தும் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. மேலும் London செல்பவர்களுக்கான ஆங்கிலம் AI, French, Italian வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.

குறிப்பு: திங்கள் முதல் புதிய வகுப்புகளுக்கான பதிவுகள் நடைபெறும்.

தொடர்பு: விவேகானந்தா அக்கடமி
221/1 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel: Hotline, 0774842464

(சு-2260)



மணல் விற்பனைக்குண்டு

கட்டிட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் சிறந்த மணல் மண் இப்போது உங்கள் இடத்திற்கே கொண்டு வந்து தரப்படும்.

4 டிரக்டர் - 23,000/-

தொடர்புகளுக்கு
தீபன்
0722694462

(1592)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.01.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org